# கார்காத்தார் ஒப்புரவு

புத்தேள் உலகத்தும் ஈண்டும் பெறல் அரிதே
ஒப்புரவின் நல்ல பிற.

# KARKATHAR OPPURAVU


| | | | | |
|---|---|---|---|---|
| மலர்–17, இதழ் – 5<br>Volume - 17, Issue - 5 | சித்திரைத் திங்கள்<br>April 2026 | விலை ரூ. 25/–<br>Price Rs. 25/- | ஆண்டு சந்தா ரூ. 300/–<br>Annual Subscription Rs. 300/- | தமிழ் மாத இதழ்<br>Tamil Monthly |


## தமிழ் புத்தாண்டு வாழ்த்துகள்




"Delivered by India Post"

www.indiapost.gov.in




## எங்கள் சிகிச்சையின் சிறப்புகள்

- சர்வதேச அளவில் பயிற்சி பெற்ற அறுவை சிகிச்சை மருத்துவர்கள்
- அடுத்த நாளிலிருந்து குளிக்கலாம் – இயல்பான வாழ்க்கை தொடரலாம்
- குறைந்த வலி – சிறந்த சிகிச்சை முறை
- ஸ்டேபிள்ஸ் / தையல் அகற்றும் இல்லாத சிகிச்சை

**எங்களிடம் சிகிச்சை பெறும் நோயாளர்களில் 95% பேர் 10 முதல் 30 மணி நேரத்திற்குள் நலம் பெற்று வீடு திரும்புகின்றனர்.**

மேலும் தகவல்களுக்கு: பார்வதி ஆர்த்தோ மருத்துவமனை பிரைவேட் லிமிடெட்

தொலைபேசி: 044 2238 2248 இணையதளம்: www.parvathyhospital.com/knee-institute

241, GST சாலை (MIT மேம்பாலம் பாலம் அருகில்), குரோம்பேட்டை, சென்னை – 600044


# வாழ்த்துகிறோம்....!



மயிலாடுதுறை, திருமலை நகர், M. சுந்தரராஜன்- S.மலர்விழி தம்பதியினரின் அன்பு புதல்வியும், Dr.G.பாலன் M.B.B.S.,M.S., (General Surgery) அவர்களின் மனைவியுமான **Dr.S.ஆஷா** M.S.,D.G.O. அவர்கள் பெரியார் அரசு மருத்துவமனை / பட்டமங்கலத் தெருவில் உள்ள வெங்கடேஷ் நர்சிங் ஹோம் சரோஜினி ஹாஸ்பிடலில் பணிபுரிந்து வரும் அவர்கள் M.G.R. மருத்துவப் பல்கலைக்கழகத்தில் M.S.O.G. 2025 இல் நடந்த தேர்வில் தமிழக அளவில் முதல் மதிப்பெண் பெற்று பெருமை சேர்த்துள்ளார்கள். அதை முன்னிட்டு 27.02.2026 நடந்த 38-வது பட்டமளிப்பு விழாவில் தமிழக அளவில் முதல் மதிப்பெண் பெற்றமைக்காக மேதகு தமிழக ஆளுநர் R.N. ரவி அவர்களின் திருக்கரங்களால் **6 தங்கப் பதக்கங்களை** பெற்றுள்ளார்கள் என்பதை பெருமையோடு தெரிவித்துக் கொள்கிறோம்.


இங்ஙனம்,
**M. சுந்தரராஜன் - S. மலர்விழி**
திருமலைநகர், மயிலாடுதுடிற.

# வாழ்க மணமக்கள்



## சீ. கைலாஷ்நாதன் – பா. ஓவியா

எல்லாம் வல்ல இறைவன் துணைக்கொண்டு சுற்றமும் நட்பும் வாழ்த்த, கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், வெள்ளியக்குடி பாலுட திரு மு. நக்கீரன் – திருமதி ந. வாசுகி, வெய்யலூர் திரு மு. பாலகுருசாமி – திருமதி பா. அம்பிகை ஆகியோரின் பேத்தியும், திரு மு.ந. பாலமுருகன் – திருமதி பா. தாமரைச்செல்வி தம்பதியரின் ஏகபுதல்வியுமான **பா. ஓவியா,** கும்பகோணம் தாலுக்கா, கொண்டாங்குடி, கொங்கராய தெய்வத்திரு ரா. சாமிநாதப்பிள்ளை – நலமுடன் சா. சரோஜா அம்மாள், திருவெண்காடு, சாத்தனுட தெய்வத்திரு தி.சு. ராஜேந்திரன் – நலமுடன் ரா. வசந்தா ஆகியோரின் பேரனும், திரு சா. சீனிவாசன் – திருமதி சீ. இந்திரா தம்பதியரின் இளையகுமாரனுமான திருநிறைச்செல்வன் **சீ. கைலாஷ்நாதன்** இவர்களது திருமணம் Livermore சிவா விஷ்ணு ஆலயம், California, USAல் **04–03– 2026** புதன்கிழமை அன்று சிறப்பாக நடைபெற்றது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். நேரில் வந்தும், நேரலையில் பார்த்தும் வாழ்த்திய அனைவருக்கும் இரு வீட்டார் சார்பாக மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம்.



**மு.ந பாலமுருகன்**
**பா தாமரைச்செல்வி**

**சா. சீனிவாசன்**
**சீ. இந்திரா**

# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வி R. Vaishanavi |
| படிப்பு | B.E. |
| வேலை | Lead Software Engineer, Freshworks , Chennai |
| பிறந்த தேதி | 16.10.1998 |
| உயரம் | 161 cm |
| நட்சத்திரம் | பூரம் |
| கோத்திரம் | வேளாண் |
| பூர்வீகம் | கொண்டத்தூர் |
| தகப்பனார் | G.K. Renganathan (a) Raju |
| தாயார் | R. Sumathi |
| முகவரி | D.No. 16/63, Shirdi Sai Tower, S-2, Manimegalai Street, Puzhuthivakkam, Chennai - 600 091. Cell : 97908 25369, 94441 88369 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. சஞ்சீவ் குமார் |
| படிப்பு | B.E., M.B.A., |
| வேலை | IT - Grant Thornton (US) - Bangalore |
| பிறந்த தேதி | 01-May-1995 |
| உயரம் | 167 cm |
| நட்சத்திரம் | கார்த்திகை |
| கோத்திரம் | கருவாழ |
| பூர்வீகம் | திருப்பனந்தாள், கும்பகோணம் |
| தகப்பனார் | செந்தில்நாதன், M.A., BGL., |
| தாயார் | கௌரி, M.A., B.Ed., |
| முகவரி | 3, சூர்யா நகர், மேடவாக்கம், சென்னை - 600 100. Cell : 94439 45913, 63817 25926 (Whatsapp) |
| விருப்பம் | பணியில் உள்ள வரன் |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | செல்வன் S. RAVEEN KUMAR |
| படிப்பு | M. Tech., VLSI., |
| வேலை | Senior Lead Engineer<br>Qualcomm, Bangalore<br>Rs. 45 lakhs per Annum |
| பிறந்த தேதி | 21.11.1993 |
| உயரம் | 175 cm |
| நட்சத்திரம் | Sathayam |
| கோத்திரம் | Kanagarayar |
| பூர்வீகம் | Madurai |
| தகப்பனார் | A. Sankar<br>Retd Director of School Education |
| தாயார் | P. Vasanthi<br>Retd Head Mistress Govt HSS School |
| முகவரி | Plot No. 28 & 29, VGN Highness,<br>Srinivasapuram, Iyyappanthangal,<br>Chennai-600056.<br>Cell : 7845914635/ 9488094635 |
| விருப்பம் | Employed or Employable Good looking girl belongs to respectable family |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் ச. சபரிநாதன் |
| படிப்பு | Diploma (Hotel Management) |
| வேலை | சபரி கேட்டரிங் & ஹோட்டல்,<br>பின்னலூர்,<br>Rs. 60,000/PM |
| பிறந்த தேதி | 05.02.1998 |
| உயரம் | 165 cm |
| நட்சத்திரம் | ரோகிணி |
| கோத்திரம் | செம்புதரிய |
| பூர்வீகம் | பின்னலூர் |
| தகப்பனார் | சண்முகம் |
| தாயார் | ராஜலெட்சுமி |
| முகவரி | பாலக்கரை, பின்னலூர்,<br>புவனகிரி, கடலூர்<br>Cell : 80980 93055 / 99443 21904 |



| | |
|---|---|
| பெயர் | செல்வன் வி.பு விஷால் கார்த்திக் |
| படிப்பு | B.E. (Mechanical), AMM-DI (Canada) |
| வேலை | Design Engineer,<br>Provincial Store Fixtures Pvt. Ltd.,<br>Mississauga, Ontario, Canada<br>Rs. 36 Lakhs / PA |
| பிறந்த தேதி | 25.07.1997 |
| உயரம் | 172 cm, |
| நட்சத்திரம் | ரேவதி |
| கோத்திரம் | விளந்துட |
| பூர்வீகம் | கோவிலூர் |
| தகப்பனார் | லோ. புகழேந்தி, M.Sc., B.Ed.,<br>பட்டதாரி ஆசிரியர் |
| தாயார் | வி. விஜயலட்சுமி, M.Com., B.Ed.,<br>முதுகலை ஆசிரியர் |
| முகவரி | No. 22, N.A.G. Colony,<br>Jayankondam - 621 802,<br>Ariyalur District<br>Cell : 99433 53559, 97868 73632,<br>E-mail : pugaljayaram@gmail.com |
| விருப்பம் | கனடாவில் பணிபுரியும் பெண் அல்லது கனடாவிற்கு செல்ல விருப்பமுள்ள வரன். |



| | |
|---|---|
| பெயர் | செல்வி உதயா .வி |
| படிப்பு | B.E. (EEE) |
| வேலை | Accenture Solutions Pvt. Ltd.,<br>Rs. 6 Lakhs / Year |
| பிறந்த தேதி | 07.05.2001 |
| உயரம் | 158 cm |
| நட்சத்திரம் | விசாகம் |
| கோத்திரம் | நெப்புட |
| பூர்வீகம் | விருத்தாசலம் |
| தகப்பனார் | விருத்தகிரி .பி |
| தாயார் | விஜயலட்சுமி .வி |
| முகவரி | 30, வடக்கு கோட்டை வீதி,<br>விருத்தாசலம் - 606 001.<br>Cell : 94871 39898,<br>94439 8833 |



# மணமகன் / மணமகள் தேவை

| | |
|---|---|
| பெயர் | **செல்வி K.S. சாருமதி** |
| படிப்பு | B.Com., MBA., |
| பிறந்த தேதி | 31.08.2003 |
| உயரம் | 5' - 7" |
| நட்சத்திரம் | சித்திரை |
| கோத்திரம் | கூருடையான் |
| தகப்பனார் | **S.K. சரவணன்**<br>Health Inspector (Retired) |
| தாயார் | **P. குருலட்சுமி,**<br>Junior Tech. Asst. A.U |
| முகவரி | 31, கிழக்கு தெரு,<br>ஆதிவராகநத்தம்,<br>புவனகிரி,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : 99945 80781, 88835 51489 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வன் V. சிவராமன்** |
| படிப்பு | D.E.E.E., |
| வேலை | Site Engineer,<br>Radha Engineering Ltd., Dubai,<br>Rs. 80,000/PM |
| பிறந்த தேதி | 28.03.1995 |
| உயரம் | 5' - 8" |
| நட்சத்திரம் | சதயம் 2ம் பாதம் |
| கோத்திரம் | வண்ணமுடையான் |
| தகப்பனார் | **P. வெங்கடேசன்** (விவசாயம்) |
| தாயார் | **V. பிரேமா** (குடும்பத்தலைவி) |
| முகவரி | மெயின் ரோடு,<br>சாத்தநத்தம் & அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்.<br>Cell : 86678 08575, 78268 66681 |



| | |
|---|---|
| பெயர் | **செல்வி A. நிவேதா** |
| படிப்பு | MDS (Orthodontist) |
| வேலை | Senior Lecturer / Consultant.<br>Asan Dental College, Chengalpet<br>Rs. 6 Lakhs / PA |
| பிறந்த தேதி | 28.08.1997 |
| உயரம் | 5' - 4" |
| நட்சத்திரம் | திருவாதிரை |
| கோத்திரம் | காருட |
| பூர்வீகம் | புலவனூர் |
| தகப்பனார் | **M. அழகுதுரை,** Private Company |
| தாயார் | **A. கலைமதி** (சீர்காழி)<br>Retd. Private |
| முகவரி | 7A, வ.உ.சி. தெரு,<br>துர்கா நகர்,<br>தாம்பரம் சானடோரியம்,<br>சென்னை - 600 047.<br>Cell : 99627 87630 (Whatsapp only)<br>89391 38560 |



# CHIDAMBARAM SPIRITUAL STAY

**146/18A, KANAGASABAI NAGAR, CHIDAMBARAM**

சிதம்பரம் நடராஜர் திருவருளால் சிதம்பரம் கனகசபை நகரில் ஆன்மீக சுற்றுலா பயணியர் மற்றும் திருமணம் போன்ற சுபநிகழ்ச்சிகளுக்கு குழுவாக வருபவர்களுக்கும் மேலும் குடும்பத்துடன் வருகைபுரியும் அன்பர்களுக்கும் குளிர்சாதன வசதியுடன் (A/c) தங்குவதற்கு விடுதி அமைந்துள்ளது. திருமண விசேஷங்களுக்கு மணமகன், மணமகள், வீட்டார் உறவினர்கள் ஒரே இடத்தில் 50 நபர் வரை தங்குவதற்கு சிறந்த இடம் **"Chidambaram Spiritual Stay"**

**குறிப்பு : இங்கு தங்குபவர்களுக்கு காலை & இரவு சிற்றுண்டி வழங்கப்படுகிறது.**





**மேலும் விபரங்களுக்கு தொடர்புகொள்ள வேண்டிய அலைபேசி எண்.**

## 9790292444, 9790215833, 9884004550

**முன்பதிவிற்கான கட்டண விபரங்களுக்கு "Booking.com" மற்றும் Google இணைய தளத்தில் காணலாம்**

**Free Driver Accommodation Available, SPL A/c. Cottages Available**

---

## ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் சேவை மையம்

சித்திரை மாதம் 2025 தொடங்கி உங்களின் ஆதரவுடன் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

**சிறப்பம்சங்கள் :**

- தனி நபர் கட்டணம் ரூ. 200/- மட்டும்
- Locker Facility உள்ளது.
- காலை வேளை மட்டும் சிற்றுண்டி வழங்கப்படும்.
- காது குத்துவது / குடும்ப சுப நிகழ்வு கொண்டாடுவோர் / குலதெய்வ வழிபாடு செய்வோர்
- தனி அறைகள் மற்றும் 20 நபர் தங்கும் வசதியுள்ள பொது இடம்.
- குறைந்த கட்டணம், நிறைவான சேவை
- 30 பேர் வரை தங்க சிறந்த இடம்

தொடர்பு 1 : **A. கோவிந்தராஜன்**
சாரதா உணவகம், அமைப்பாளர்
89731 63434

தொடர்பு 2 : **தில்லை ப. செல்வம்**
ஒருங்கிணைப்பாளர்
98403 17346

**இதழின் உள்ளே....**




சங்க நிகழ்வுகள்..........11 – 20
குருவை விஞ்சிய சிஷ்யன்..........24
சங்கப் பலகை..........26
மணமகன் / மணமகள் தேவை..........29–32
சிறுவர் பகுதி..........33–36
ஓர் ஆன்மீகப் பயணம்..........37
விட்டலனின் பக்தர்கள்..........38



**கார்காத்தார் ஒப்புரவு**
**கார்காத்தார் சங்கம் (சென்னை)**
64, சௌராஷ்டிரா நகர் 10வது தெரு,
சூளைமேடு, சென்னை – 600 094.
தொலைபேசி : 044–2472 4882
Whatsapp : 82484 49204

**ஆயுள் சந்தா ரூ. 2000/-**
**ஆண்டு சந்தா ரூ. 300/-**

வெளியீட்டாளர் : **முனைவர் கைலை. சண்முகம்**


ஆசிரியர் : மேலையூர் **S. அன்பழகன்**

அச்சிடுவோர் :
**மீ. நடராஜன்**
**மயூர் பிரிண்டர்ஸ்**
எண். 72/88 காமராஜ் காலனி 8வது தெரு,
(பாளையகாரன் தெரு) கோடம்பாக்கம்,
சென்னை – 600 024. போன் : 4204 6533



கதை, கட்டுரைகள், கவிதைகள் மற்றும் செய்திகள், மணமகன்/மணமகள் பற்றிய விபரங்கள், மற்றும் விளம்பரங்களில் வரும் தகவல்களை வாசகர்கள் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும். இவைகளுக்கு "கார்காத்தார் ஒப்புரவு" நிர்வாகம் பொறுப்பேற்காது.


## ஏடு இட்டோர் இயல்



கார்காத்தார் ஒப்புரவின் சீரிய வாசகர்களுக்கு **ஸ்ரீபராபவ** ஆண்டின் நல்வாழ்த்துகள். பிறக்கும் புத்தாண்டு இயற்கையின் கோபதாபங்களின்றி, போர் அபாயங்கள் நீங்கி, உலக மக்கள் அமைதியாக,நிம்மதியாக,மனமகிழ்வுடன்வாழஎல்லாம் வல்ல இறைவனை வேண்டி, வாழ்த்துகிறோம்!

இந்தியாவில் மாநிலங்களவை, 4 மாநிலங்கள் மற்றும் ஒரு ஒன்றியப் பகுதி சட்டப் பேரவைகளின் தேர்தல் தேதிகள் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் ஒரே கட்டமாக ஏப்ரல் 23 அன்றும், அஸ்ஸாம், கேரளா, புதுச்சேரியில் ஏப்ரல் 9ஆம் தேதி அன்றும், மேற்குவங்கத்தில் இரு கட்டங்களாக ஏப்ரல் 23 மற்றும் ஏப்ரல் 29ஆம் தேதி அன்றும் நடைபெற உள்ளது. தேர்தலில் தகுதியான வேட்பாளர்கள் வெற்றி பெற வாழ்த்துகிறோம்.

2026ல்நமது அண்டை நாடான நேபாளத்தில்275 உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க நடந்த தேர்தலில், ராஷ்டிரிய சுதந்திரா கட்சி 182 இடங்களை வென்று திரு. பாலேன்ஷா தலைமையில் ஆட்சி அமைந்துள்ளது. 1999–க்குப் பிறகு கூட்டணி ஆட்சியின்றி தனிக்கட்சி பெரும்பான்மை பெற்றுள்ளது. நமது பாரதத்துடன் நட்புறவு நன்முறையில் தொடருமென நம்புவோம்.

எழுத்தாளர் தமிழ்ச் செல்வன் அவர்களது தமிழ் சிறுகதையின் தடங்கள் என்ற இலக்கிய விமர்சன நூலுக்கு 2025ஆம் ஆண்டுக்கான சாகித்ய அகாடமி விருது அமைப்பின் செயலர் பல்லவி பிரசாந்த் ஹோல்கர் அவர்களால் அறிவிக்கப்பட்டுள்ளது. விருது பெற்ற எழுத்தாளருக்கு நம் வாழ்த்துக்கள்.

T-20 உலகக் கோப்பையை அகமதாபாத்தில் நடந்த இறுதிப் போட்டியில் கேப்டன் சூரியகுமார் தலைமையிலான இந்திய அணி நியூசிலாந்து அணியை வென்று மூன்றாவது முறையாக வென்றமைக்குப் பாராட்டுவதுடன், மேன்மேலும் பல வெற்றிகளைப் பெற வாழ்த்துகிறோம். I.P.L. மார்ச் 28ஆம் தேதி தொடங்க உள்ளது.Finalsநெருங்க,நெருங்கI.P.L.fever-ல்நாடே தத்தளிக்கும். பெங்களூரில் கோப்பை வென்றபோது, ரசிகர் கூட்ட நெரிசலில் 11 பேர் கடந்த வருடம் இறந்ததின் நினைவாக, 11 இருக்கைகள் காலியாகவே இருக்குமென அறிவிக்கப்பட்டுள்ளது. இரங்கல் தெரிவிப்பதில் ஒருவிதம்.

ஆஸ்கர் விருது பால் தாமஸ் ஆண்டர்சன் அவர்களின் “One Battle After Another” என்ற படத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. இப்படம் ஆறு ஆஸ்கர் விருதுகளை வென்றுள்ளது. பாராட்டுக்கள். முதன்முறையாக பெண் ஒளிப்பதிவாளர், Autumn Durald Arkapaw அவர்கள் ‘சின்னர்ஸ்’ எனும் படத்திற்காக விருதினை வென்றுள்ளார். அவருக்கும் நமது வாழ்த்துக்கள்.

உலகத்தைச் சூழ்ந்திருக்கும் போர்மேகம் விரைவில் நீங்கவும், போர் முடிவுக்கு வந்து, சகஜ நிலையும், அமைதியும் திரும்ப ஆண்டவனைப் பிரார்த்திப்போம்!

நம் மாணவச் செல்வங்கள் நன்முறையில் தேர்வுகளை எழுதி, அதிக மதிப்பெண்களுடன் வெற்றி பெற கடவுளை வேண்டி, வாழ்த்துகிறோம்.

கடைசியில், ஆனால் முக்கியமான ஒரு வருத்தம் தரக்கூடிய செய்தியை உங்களுடன் பகிர்ந்துகொள்வதில் மிகவும் வருத்தம் கொள்கிறோம். நமது சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் தலைவர் திரு. மேலையூர் அன்பழகன் அவர்கள் மார்ச் 16ஆம் தேதி காலை இறைவனடி சேர்ந்தார்கள். அவர்களது இழப்பு ஈடு செய்ய இயலாதது. அவரது ஆத்மா சாந்தி அடைய சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும், அதன் வாசகர்களும் எல்லாம் வல்ல இறைவனின் அருளை வேண்டுவதுடன், ஆழ்ந்த இரங்கல்களையும் குடும்பத்தினருக்கு தெரிவித்துக் கொள்கிறோம்!

வணக்கம்!!

## ஓர் அறிவிப்பு

## இளம் எழுத்தாளர்களை உருவாக்கும் திட்டம்

**குழந்தைச் செல்வங்களே!**

**உங்களுக்குகோர் வேண்டுகோள்.**

உங்கள் அப்பா அல்லது அம்மாவின் கிராமம் குறித்து ஒரு கட்டுரை, கார்காத்தார் ஒப்புரவு இதழில் ஒரு பக்கத்துக்கு மிகாமல் எழுதி அனுப்புங்கள். இது போட்டி அல்ல; ஆனால் உங்கள் கட்டுரைகள் வரும் மாதங்களில் பிரசுரிக்கப்படும். இன்றைய இளைய தலைமுறைக்கு நமது கிராமங்கள் குறித்து தெரிவிக்க வேண்டும் என்ற எண்ணத்தில் இந்த அறிவிப்பு வெளியிடப்படுகிறது. அனைவரின் ஆதரவையும், ஒத்துழைப்பையும் வேண்டுகிறோம். கட்டுரைகள் அனுப்ப வேண்டிய காலம் ஏப்ரல் 22 முதல் ஜூன் 1 ஆம் தேதி வரையில்.

ஆசிரியர் குழு

அனுப்ப வேண்டிய முகவரி

**கார்காத்தார் ஒப்புரவு**
எண். 64, சௌராஷ்டரா நகர்
10 வது தெரு, சூளைமேடு,
சென்னை – 600 094.

## வேலை வாய்ப்பு அறிவிப்பு

சென்னை சூளைமேடு கார்காத்தார் இல்ல வளாகத்தில் செயல்பட்டு வரும் கார்காத்தார் ஒப்புரவு அலுவலகத்தில் பணியிடம் நிரப்பப்பட உள்ளது. கணினியில் பயிற்சி பெற்றவர்கள் இப்பதவிக்கு விண்ணப்பிக்கலாம். ஓய்வு பெற்ற அலுவலர்களும் விருப்பமிருப்பின் விண்ணப்பிக்கலாம். வெளியூரிலிருந்து வரும் மகளிர்க்கு தங்குமிட வசதி செய்து தரப்படும். விருப்பமுள்ளவர்கள் கீழ்கண்ட நமது சங்க முகவரிக்கு தொடர்பு கொள்ள வேண்டுகிறோம்.

**– கைலை. சண்முகம்,**
செயலாளர்,
சென்னை கார்காத்தார் சங்கம்.

முகவரி : **கார்காத்தார் இல்லம்,** 64, சௌராஷ்டிரா நகர்,
10–வது தெரு, சூளைமேடு, சென்னை–600 094.
தொலைபேசி : 044–24724882, அலைபேசி : 8248449204

# சங்க நிகழ்வுகள்

**சங்கச் செய்திகள் அனுப்புவோர் கவனத்திற்கு**

தமிழ்நாட்டில் சுமார் 150 க்கும் மேற்பட்ட சங்கங்கள் செயல்படுவதை நாம் அறிவோம். அனைத்து சங்கங்களும் தங்களது சிறப்பான செயல்பாடுகளை சங்க செய்திகளாக அனுப்பி வருவதை வெளியிட்டு வருகிறோம். அதற்கு உதவும் வகையில், சங்கச் செய்திகளை அனுப்புபவர்கள் செய்திகளை சுருக்கமாகவும், முக்கிய தீர்மானங்களையும் சுருக்கமாக மூன்று பாராக்களுக்கு மிகாமல் அனுப்பி வைக்க வேண்டுகிறோம். அதிகமான பாராக்களுடன் வரும் செய்திகள், சுருக்கி கொடுக்கவோ அல்லது நிராகரிக்கவோ ஆசிரியருக்கு முழு உரிமை உண்டு என்பதை கனிவுடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

## நங்கநல்லூர் வட்டாரம்
## மகளிர் தினவிழா - 2026

மகளிரின் அளப்பரிய ஆற்றல், அர்ப்பணிப்பு மற்றும் சாதனைப் பயணங்களை கொண்டாடும் வகையில் நங்கநல்லூர் சங்க மகளிரணியின் சார்பில் மகளிர் தினவிழா 08.03.2026 ஞாயிறு அன்று 'வாழ்க வளமுடன்' திருமண மண்டபத்தில் மிகச்சிறப்பாக நடைபெற்றது. மாலை 03 மணியளவில் அனைவரும் வருகை புரிந்தனர். நான்கு மணியளவில் ஆடவர், பெண்டிர், குழந்தைகள் மற்றும் பெரியவர்கள் என அனைவருக்குமான கண் / மூளைத்திறனுக்கான போட்டிகள் உட்பட பல்வேறு போட்டிகள் திருமதி. கீதா செந்தில்நாதன் அவர்களால் நடத்தப்பட்டது. மாலை சிற்றுண்டி முடிந்தவுடன் சுமார் 05 மணியளவில் ஆலோசகர் திருமதி. மல்லிகா சண்முகசுந்தரம் அவர்களது முன்னிலையில் மகளிரணி தலைவி திருமதி. கலையரசி இராஜசேகரன் அவர்களது தலைமையில் விழா நடைபெற்றது. குத்துவிளக்கு ஏற்றியதை தொடர்ந்து குமாரி ரேணுதர்ஷினியின் இறைவணக்கப் பாடலுடன் விழா இனிதே துவங்கியது.

தலைவி தமது உரையில் பெண்களின் சாதனைகள் மற்றும் வாழ்க்கை பயணம் பற்றி பல்வேறு விஷயங்களை எடுத்து கூறினார். செயலாளர் திருமதி. வனஜா சரவணன் அவர்கள் நமது சங்க மகளிரணியின் சிறப்பு மற்றும் செயல்பாடுகள் குறித்து எடுத்துரைத்தார். பொருளாளர் திருமதி. ராஜி செல்வகுமார் அவர்கள் கடந்த ஆண்டின் நிதிநிலை பற்றி விளக்கமளித்தார். சிறப்பு விருந்தினர்களாக மகப்பேறு மருத்துவர் S.ஸ்வேதா, MBBS, MS(OG) அவர்களும், இந்திய தபால் துறையில் உதவி கண்காணிப்பாளராக பணியாற்றும் திருமதி கவிதா, B.Sc., B.Ed. அவர்களும் கலந்துகொண்டு சிறப்பித்தனர். இருவரும் அவரவர்களின் முன்னேற்றம் பற்றியும் அவர்களது துறைகளை பற்றியும் விரிவாக எடுத்துரைத்ததோடு அல்லாமல் உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கும் மிக விளக்கமாக பதிலளித்து அனைவரின் பாராட்டையும் பெற்றனர். சிறப்பு விருந்தினர்கள், சாதனையாளர்கள் மற்றும் வாழ்வில் வெற்றியை எட்டிப்பிடித்த சாதனைப்பெண்கள் கவுரவிக்கப்பட்டனர். தலை சிறந்த, வயதில் மூத்த கார்குல பெண்மணிகள் பாராட்டு பெற்றனர். தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் தலைவர் முனைவர் KKR சுரேஷ் அவர்கள் விழாவில் கலந்துகொண்டு சிறப்புரை ஆற்றியதும் சாதனை பெண்களுக்கு பாராட்டு செய்ததும் மகிழ்ச்சியளித்தது. திருமதி. விஜயாள் மதிவாணன் மற்றும் திருமதி. கல்பனா கல்யாணசுந்தரம் ஆகிய இருவரும் நிகழ்ச்சியினை தொகுத்து வழங்கியது சிறப்பு. போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்துகொண்ட பெண்கள் அனைவருக்கும் நினைவுப்பரிசு வழங்கும் பொறுப்பினை திருமதி. நிரஞ்சனா கணேஷ் ஏற்றுக்கொண்டார். நிகழ்ச்சியில் பங்கேற்ற ஆடவர்களுக்கும் நினைவுப்பரிசு வழங்கப்பட்டது. மகளிரணி நிர்வாகிகள் உறுப்பினர்கள் பலரும் ஆர்வமுடன் தாங்களே சிறந்த முறையில் சுவையாக தயாரித்த உணவுகளை இரவு உணவாக பறிமாறி மகிழ்ந்தனர். திருமதி. ரேவதி கண்ணன் அவர்களின் நன்றியுரையை தொடர்ந்து இரவு உணவுக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது. அரங்கம் நிறைந்த பெண்கள் கூட்டம் விழாவில் கலந்துகொள்ள வந்த கார்குல பெண்களின் ஆர்வத்திற்கு எடுத்துக்காட்டு.

– வனஜா சரவணன்,
செயலாளர்

## நங்கநல்லூர்

வசந்தகாலம் விடைபெறும் நிலையில் பிரம்மோற்சவங்களுக்கு உகந்த பங்குனி மாதத்தில் 22.03.2026 அன்று மாலை மார்ச் மாதத்தின் செயற்குழு மற்றும் மகளிரணி கூட்டம் நடைபெற்றது. தலைவர் திரு. கோ. தியாகராஜன் அவர்களது தலைமையில் செயற்குழு உறுப்பினர் திரு. ச. வள்ளிநாயகம் அவர்களது இறைவணக்கத்துடன் கூட்டம் இனிதே துவங்கியது. அண்மையில் மறைவுற்ற சட்ட வல்லுனருமான திரு. ச. அன்பழகன், சங்க உறுப்பினர் திரு. தியாகராஜன் அவர்களது சகோதரர் திரு. சத்தியநாராயணன், சங்க உறுப்பினர் திரு. வெங்கட்ராமன் அவர்களது தாயார் திருமதி. மங்கையர்க்கரசி மற்றும் உறுப்பினர் திரு. சத்தியசீலன் அவர்களின் மனைவி திருமதி. பாக்கியகலா ஆகியோருக்கு மவுன அஞ்சலி செலுத்தப்பட்டது. தலைவர் அவர்கள் கடந்த மாதத்தில் நடைபெற்ற கார்குல நிகழ்வுகள் பற்றி விளக்கினார். செயலர் திரு. வே. கண்ணன் அவர்கள் சென்ற மாத உரையை வாசித்தார். பொருளாளர் திரு. வை. செல்வகுமார் அவர்கள் தற்போதைய நிதிநிலை குறித்து விவரித்தார். மகளிர் தினத்தை அனைவரும் போற்றும் வகையில் மிகச்சிறப்பாக நடத்திய மகளிரணியினர் மற்றும் சங்க உறுப்பினர்களுக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது. ‘‘பேனாக்கள் பேரவை’’ என்ற அமைப்பின் மூலம் மாதந்தோறும் ஆலோசகர் மனிதநேயம் திரு. தி.நெ.முத்துக்குமாரசுவாமி அவர்கள் ஏழை மாணவர்களுக்கு கல்வி நிதியுதவி அளித்து வருவது போற்றுதலுக்குரியது. கோடை காலம் நெருங்கிவிட்ட நிலையில் சங்கத்தின் சார்பில் பொதுமக்களுக்கு நீர் மோர் வழங்குவது குறித்து ஆலோசிக்கப்பட்டது. சேமிப்பு மற்றும் ஆயுள் காப்பீடு பற்றி செயற்குழு உறுப்பினர் திரு. ச. வீரராஜ்குமார் அளித்த சிறப்பான விளக்கம் அனைவருக்கும் பயனுள்ளதாக அமைந்தது. மாலைச் சிற்றுண்டி மற்றும் இரவு உணவுக்கான பொறுப்பை ஏற்ற திரு. S. சம்பத்குமார் மற்றும் திரு. V. கிருஷ்ணகுமார் ஆகிய இருவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது. துணைத்தலைவர் திரு. கோ. சுவாமிநாதன் அவர்களது நன்றியுரை மற்றும் இரவு உணவுக்குப்பின் கூட்டம் இனிதே நிறைவுற்றது.

– வே. கண்ணன்
செயலாளர்

## குரோம்பேட்டை

கார்குலச்செம்மல்தியாகிபரலிசு.நெல்லையப்பர் சிலை அமைத்து குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம் சாதனை சுதந்திரப் போராட்ட வீரரும், ‘கார்குலச் செம்மல்’ என்று போற்றப்படுபவருமான பரலி சு. நெல்லையப்பர் அவர்களின்நினைவுநாளை முன்னிட்டு (28.03.2026, சனிக்கிழமை காலை 9.30 மணி), சென்னை குரோம்பேட்டை ஜி.எஸ்.டி. சாலையில் உள்ள அவரது திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது.

ஏழு ஆண்டு காலப் போராட்டத்திற்கு வெற்றி

கடந்த 18 ஆண்டுகளாகத் தியாகி நெல்லையப்பருக்கு மரியாதை செலுத்தி வரும் குரோம்பேட்டை கார்காத்தார் சங்கம், இந்த ஆண்டு ஒரு வரலாற்றுச் சாதனையைப் படைத்துள்ளது. குரோம்பேட்டை ராதா நகர், பாரதிபுரம் பகுதியில் நெல்லையப்பர் அவர்களால் கல்விப் பணிக்காகத் தானமாக வழங்கப்பட்ட 5,000 சதுர அடி நிலத்தில், தற்போது தமிழக அரசின் திறன் மேம்பாட்டு மையம் இயங்கி வருகிறது.

அந்த வளாகத்தில் தியாகி நெல்லையப்பருக்கு ஒருமார்பளவுச்சிலை அமைக்க வேண்டும் எனச்சங்கம் கடந்த 6 முதல் 7 ஆண்டுகளாகத் தொடர் முயற்சியில் ஈடுபட்டு வந்தது. பகுதிவாழ் மக்கள் நலச் சங்கங்கள் மற்றும் சமூக அமைப்புகளை ஒன்றிணைத்து சங்கம் கொடுத்த அழுத்தத்தின் பலனாக, தற்போது அங்கு பரலி சு. நெல்லையப்பரின் மார்பளவுச் சிலை அமைக்க அனுமதி பெறப்பட்டு, நிறுவப்பட்டு வருகிறது.

தியாகி பரலி சு. நெல்லையப்பர் வரலாற்றுச் சுருக்கம்

* பிறப்பு: 1889–ம் ஆண்டு செப்டம்பர் 18–ம் நாள், திருநெல்வேலி மாவட்டம் பரலிக்கோட்டை கிராமத்தில் திரு. சுப்ரமணிய பிள்ளை – திருமதி. முத்துலட்சுமி அம்மாள் இணையருக்கு மகனாகப் பிறந்தார்.

* அர்ப்பணிப்பு: இந்திய சுதந்திரப் போராட்டத்திற்காகவும், சமூக நலப் பணிகளுக்காகவும் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொண்ட இவர், திருமணம் செய்துகொள்ளாமல் இறுதி மூச்சு வரை மக்களுக்காகவே வாழ்ந்தவர்.

* தேசப்பணி: வ.உ. சிதம்பரம் பிள்ளை மற்றும் சுப்பிரமணிய பாரதியாரின் நெருங்கிய நண்பர், 1907–ல் வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் சுதேசிக் கப்பல் நிறுவனத்தில் இணைந்து பணியாற்றினார். 1930 முதல் விடுதலைப் போராட்டங்களில் தீவிரமாகப் பங்கேற்று பலமுறை சிறை சென்றவர்.

* பாரதிபுரம் உருவாக்கம்: 1950 முதல் குரோம்பேட்டையில் வசித்த இவர், அப்பகுதிக்கு 'பாரதிபுரம்' எனப் பெயரிட்டார். மறைந்த முதல்வர் காமராஜர் உதவியுடன் ஏழைகளுக்கு வீட்டுமனைப் பட்டா பெற்றுத் தந்ததுடன், தனது 5,000 சதுர அடி நிலத்தைப் பள்ளி தொடங்க தானமாக வழங்கிய கொடைவள்ளல் ஆவார்.

நிர்வாகிகளுக்குப் பாராட்டு

இந்தச் சாதனைக்கு உறுதுணையாகவும், அனைவரையும் ஒருங்கிணைத்த சக்தியாகவும் இருந்த மனிதநேயப் பண்பாளர் திரு. T.N. முத்துகுமாரசாமி அவர்களுக்கும், இதற்காக அரும்பாடுபட்ட சங்கத்தின் முன்னாள், இந்நாள் நிர்வாகிகள் மற்றும் செயற்குழு உறுப்பினர்களுக்கும் சங்கத்தின் சார்பில் பாராட்டுக்களும் நன்றிகளும்.

– J. தீபன், செயலாளர்

## புதுச்சேரி:

மகளிர் தின விழா 08.03.2026 அன்று புதுச்சேரி லாஸ்பேட்டை குறிஞ்சிநகர் குடியிருப்போர் நல சங்க மனமகிழ் மன்றத்தில் மகளிர் குத்துவிளக்கு ஏற்ற செல்வி G. நித்திஷா புஷ்பாஞ்சலி நடனமாட தொடர்ந்து சிவாலயா நாட்டிய பள்ளி மாணவிகள் நடனமாட இறைவணக்கத்துடன் விழா தொடங்கியது.

மகளிர் அணி தலைவி திருமதி. சுந்தரவள்ளி ஆனந்தன் தலைமையுரை நிகழ்த்த செயலாளர் திருமதி. ஜெயலட்சுமி சிதம்பரம் வரவேற்புரையாற்ற, திருமதி. Er. லட்சுமி ரவிச்சந்திரன், ஓய்வு பெற்ற NLC Chief General Manager திருமதி. Lion MJF Dr. விஜயலட்சுமி சிவக்குமார், (Past District Governer) முனைவர் கயல்விழி பாலமுருகன், திருமதி. அபிராமி செந்தில் ஆகியோர் நம் குல உணவு மற்றும் கலாச்சாரம், பழக்கவழக்கங்கள் குறித்து விரிவாக பேசினார்கள். மேலும் நம் டாக்டர்கள் திரு. S. கிரிதரன் D.M. Cardiology, திருமதி V. ஐஸ்வர்யா M.D., மருத்துவம் சம்பந்தமாக விரிவாக பேசினார்கள். Dr. சக்திமலர் படிப்பின் அவசியம் மற்றும் சங்க ஒற்றுமை பற்றி பேசினார்கள். திரு. வைரமுத்து கல்யாண் அவர்கள் சர்க்கரை உள்ளவர்கள் Sugar free sweets சாப்பிடுவதால் பக்கவிளைவுகள் இல்லை என்று விளக்கினார்கள்.

CREW அறக்கட்டளை மூலம் புதுச்சேரிவாழ் நம் மாணவ செல்வங்களுக்கு மொத்தம் 12 பேருக்கு ரூ. 3,51,000/– கல்வி உதவிதொகை தந்த கார்குல கடவுள் உயர்திரு. வெங்கடேசன் பிள்ளை அவர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

மதியம் அனைவருக்கும் அறுசுவை உணவு பரிமாறப்பட்டது. பிறகு மகளீருக்கான விளையாட்டு போட்டிகள் நடைபெற்றன. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டது.

கூட்ட ஏற்பாடுகளுக்கு உதவியாக இருந்த புதுச்சேரி கார்காத்தார் சங்க நிர்வாகிகள் அனைவரும் கௌரவிக்கப்பட்டார்கள். மகளிர் அணி பொருளாளர் த. மலர்கொடி நன்றி தெரிவிக்க கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

– J. ராஜன்பாபு, தலைவர்

## செந்துறை:

சங்க கூட்டம் 01.03.2026 அன்று திருஞானசம்பந்தர் மடாலயத்தில் மண்டலத் தலைவர் திரு. R. ரவீஸ்வரன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. சங்கப் பொருளாளர் திரு. அ. மணி அவர்கள் அனைவரையும் வரவேற்றார்.

கடந்த 13.02.2026 அன்று தமிழ்நாடு கார்காத்தார் சங்கக் கூட்டமைப்பின் தலைவர், செயலாளர் மற்றும் பொருளாளர் ஆகிய மூவரும் செந்துறைக்கு நேரடியாக வருகை புரிந்து, 22.02.2026ல் நடைபெறவுள்ள 'இந்திய சுதந்திர போராட்ட தியாகி', 'செக்கிழுத்த செம்மல்', 'கப்பலோட்டிய தமிழன்' ஐயா வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் 150 அடி உருவச்சிலைக்கு நமது பாரத குடியரசுத் துணைத்தலைவர் மேதகு C.P. இராதாகிருஷ்ணன் அடிக்கல் நாட்ட உள்ளார் என்றும், இவ்விழாவில் நமது சங்க உறுப்பினர்கள் பெருந்திரளாக கலந்துகொள்ள அழைப்பு விடுத்தனர்.

இதை ஏற்று நமது மண்டலத் தலைவர் திரு. R. ரவீஸ்வரன் அவர்கள் தலைமையில் நமது செந்துறை சங்கத்தின் சார்பில் சுமார் 45 உறுப்பினர்கள் கலந்து கொண்டோம். 'செக்கிழுத்த செம்மல்' ஐயா வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் உருவச்சிலை அடிக்கல் நாட்டு விழாவில் கலந்து கொண்ட நமது சொந்தங்களுக்கு சங்கம் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

செந்துறைக்கு அருகிலுள்ள சென்னிவனம் கிராமத்தில் வசிக்கும் நமது சொந்தங்கள் செந்துறை சங்கத்தில் தங்களை இணைத்துக்கொள்ள விருப்பம் தெரிவித்திருந்தனர். இதை இந்தக் கூட்டத்தில் விவாதித்து, ஏகமனதாக ஏற்றுக்கொள்ளப்பட்டது. தமிழ்நாடு கார்காத்தார் சங்கக் கூட்டமைப்பின் பொதுச்செயலாளர் திரு. கைலை. சண்முகம் அவர்களுக்கு 28.02.2026 அன்று சர்வதேச தமிழ்

பண்பாட்டுப் பல்கலைக்கழகம் (International Tamil Cultural University) மதிப்புறு முனைவர் பட்டம் (Honorary Doctorate) வழங்கி சிறப்பித்துள்ளார்கள். அவர்களது சமுதாயப் பணி மேன்மேலும் தொடர்ந்து சிறப்புற நமது சங்கம் மனமார்ந்த நல்வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறது.

CREW அறக்கட்டளை மூலம் நமது சங்க உறுப்பினர்களின் மாணவ/மாணவிகளுக்கு 2025–2026ம் ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கிய 'கார்குல கர்ணன்' மதிப்பிற்குரிய திரு. வெங்கடேசம் பிள்ளை அவர்களுக்கு நமது சங்கத்தின் சார்பில் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.

இறுதியாக சங்கத் துணைத்தலைவர் திரு. S. பன்னீர்செல்வம் அவர்கள் நன்றி நவில கூட்டம் இனிதே முடிவுற்றது.

– சா. ஜெயராமன்
செயலாளர்

## சீர்காழி:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் 07.03.26 அன்று தலைவர் திரு. ஜெயச்சந்திரன் பிள்ளை தலைமையில் நடந்தது. மகளிர் தினம், ஆண்டு விழா மற்றும் மங்கள சந்திப்பு பற்றி விவாதிக்கப்பட்டது. பொருளாளர் திரு. ரவிச்சந்திரன் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

08.03.26 நகர கார்காத்தார் சங்க கட்டிடத்தில் மகளிர் தினம் கொண்டாடப்பட்டது. Dr. C. வள்ளி MBBS, DGO சிறப்பு விருந்தினராக கலந்துகொண்டு மகளிருடன் கலந்துரையாடி, உறுப்பினர்களின் சந்தேகங்களுக்கு பதிலளித்தார். மகளிருக்கு போட்டிகள் நடத்தி பரிசுகள் வழங்கப்பட்டது.

– சி. அகோரம் பிள்ளை,
செயலாளர்

## மணிக்கிராமம்:

சங்க கூட்டம் 01.03.26 அன்று சிவன் கோவிலில் பிரதோஷ வழிபாட்டுக்கு பிறகு நடைபெற்றது. சீர்காழி மண்டல தலைவர் சிவபுராணம் வாசிக்க செயலர் அறிக்கை வாசிக்க, பொருளர் வரவு செலவுகளை படிக்க சங்கம் அதை ஏற்றுக்கொண்டது. தலைவர் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே முடிந்தது.

– G. அன்பழகன்
தலைவர்

## மயிலாடுதுறை மகளிரணி

மகளிர் அணியினரால் ஏற்றுநடத்தப்பட்ட ''உலக மகளிர் தின விழா'', 15.3.26 அன்று மயிலாடுதுறை கார்காத்த வேளாளர் சங்கக் கட்டிடத்தில் சிறப்பாக நடைபெற்றது. காலை 9.15 மணிக்கு மகளிர் அணியின் இந்நாள்,மேனாள் பொறுப்பாளர்கள் குத்துவிளக்கேற்ற, இறை வணக்கத்துடன் விழா இனிதே தொடங்கியது. துணைத்தலைவி, திருமதி. விஜயா அனைவரையும் வரவேற்றார்கள். திருமதி. சுகுணாதேவி தலைமையுரை ஆற்ற, நகர சங்கத் தலைவர் (பொ) திரு. ரவிக்குமார் மற்றும் மகளிர் அணி மேனாள் தலைவி, திருமதி. கோமதி, இருவரும் வாழ்த்துரை வழங்கினார்கள். பலவகையான போட்டிகள் மற்றும் கலை நிகழ்ச்சிகள் 12.30 மணிக்கு முடிவடைந்தது. பிறகு அனைவருக்கும் சுவையான மதிய உணவு வழங்கப்பட்டது.

மதிய நிகழ்வுகள் 1.45 மணிக்கு ஆரம்பம் ஆனது. சிறப்பு விருந்தினர்கள் "Mangala Home Products"-ன் உரிமையாளர்கள் திருமதி. கலா கார்த்திகேயன் மற்றும் திருமதி. சாந்தி கண்ணன் ஆகியோரை மகளிர் தின விழாவில் கௌரவித்து சிறப்பு செய்யப்பட்டது.

திருமதி. கலா கார்த்திகேயன் ''உணவில் உலகை ஆளலாம்'' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள். அடுத்த சிறப்பு விருந்தினர், "Peri Polar Engineering Pvt. Ltd."–ன் நிறுவனர் மற்றும் இயக்குநர் திருமதி. ரம்யா சரவணன் அவர்கள், ''சிறிய முயற்சியில் பெரிய மாற்றம் – உங்கள் சக்தியால்'' என்ற தலைப்பில் சிறப்புரை ஆற்றினார்கள்.

காலையில் நடைபெற்ற போட்டிகளில் வெற்றிப் பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. அடுத்து பொருளர், திருமதி. வசந்தி இவ்விழா சிறப்பாக நடைபெற ஒத்துழைப்பு நல்கிய அனைவருக்கும் நன்றி கூறினார்கள். திருமதி. கார்குழலி அவர்களின் வாழ்த்துப் பாடலுடன் விழா இனிதே நிறைவடைந்தது.

S. அகிலாண்டேஸ்வரி, செயலர்,
மகளிரணி, மயிலாடுதுறை

## செம்பனார்கோவில்:

சங்க கூட்டம் 06.03.2026 அன்று திரு. செல்வம் – அம்பிகா அவர்கள் இல்லத்தில் சங்க தலைவர் கி. இராமநாதன் தலைமையில் இறைவணக்கம் செல்வி சஞ்சனா பாலா பாடிட, வரவேற்பு சங்க பொருளாளர் திரு. M.C. செல்வராஜ் நல்கிட, சென்ற மாத கூட்டறிக்கை திரு. குரு. முத்துகுமார் வாசிக்க, வரவு செலவு கணக்கை சங்க பொருளர் திரு. M.C. செல்வராஜ் தாக்கல் செய்ய கூட்டம் இனிதே தொடங்கியது.

நமது சங்க உறுப்பினர் திரு. செல்வம் – சூரியகலா அவர்களின் புதுமனை புகுவிழாவிற்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது என்றும், மதுரையில் நடைபெற்ற வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்கள் சிலை அடிக்கல் நாட்டு விழாவிற்கு நமது ஒன்றியத்திலிருந்து கலந்து கொண்டவர்களுக்கும், நமது சங்கத்தின் சார்பாக கலந்து கொண்டவர்களும் நன்றியை தெரிவித்து கொண்டார்கள். பன்னாட்டு லயன் சங்கத்தின் சார்பாக திரு. செந்தில், CREW MD அவர்களுக்கு "வாழ்நாள் சாதனையாளர்" விருது வழங்கப்பட்டதை தெரிவித்துகொண்டார்கள். மகளிர் சங்க தலைவி திருமதி. தாமரை உடல்நலம் பேணி காப்பது தொடர்பாக பேசினார்கள்.

திரு. கணபதி நடனம் அவர்கள் பேசுகையில் கூட்டம் ஏற்று நடத்தும் இல்லத்தாருக்கு வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்து கொண்டார்கள்.

கூட்டம் ஏற்று நடத்தும் இல்லத்தாருக்கு சங்கத்தின் சார்பாக சிறப்பு செய்யப்பட்டது.

இல்லத்தாரால் அளிக்கப்பட்ட இரவு விருந்தில் அனைவரும் கலந்துகொண்டு சிறப்பித்தார்கள்.

சங்க உறுப்பினர் திரு. இரவிச்சந்திரன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– கி. இராமநாதன்,
தலைவர்

## பரசலூர்:

சங்க கூட்டம் 1.03.26 அன்று பரசலூர் ஆனந்தபுரம் V. சிவக்குமார் இல்லத்தில் நடைபெற்றது. திருமதி. சபிதா சிவக்குமார் இறைவணக்கம் பாட திரு. V. சிவக்குமார் வரவேற்று மகிழ தலைவர் திரு. க. கோவிந்தராஜன் தலைமையில் கூட்டம் இனிதே துவங்கியது. செயலர், பொருளர் அறிக்கைகளை வாசித்து ஒப்புதல் பெறப்பட்டது.

கூட்டத்தில் பராபவ தமிழ் வருட வாக்கிய பஞ்சாங்கம் அச்சடிக்கப்பட்டு உறுப்பினர்களுக்கு வழங்குவது என்று தீர்மானிக்கப்பட்டது.

தொடர்ந்து ஏப்ரல் 2026 முதல் மார்ச்சு 2027 வரையான 12 மாதக் கூட்டங்கள் எங்கு யார் இல்லத்தில் நடத்துவது என்று முடிவு செய்யப்பட்டது.

மதுரையில் சீரும் சிறப்புமாக நடைபெற்ற கப்பலோட்டிய தமிழர் திருமிகு வ.உ. சிதம்பரம் பிள்ளை அவர்களின் திருவுருவ சிலை அடிக்கல் நாட்டு விழாவிற்கு ஏற்பாடு செய்த நம் சங்க மாநிலத் தலைவர் மற்றும் பொறுப்பாளர்களுக்கும் திரு. A.C. சண்முகம் அவர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்து பாராட்டி தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

நிறைவாக இல்லத்தார் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களுக்கு இரவு விருந்து ஏற்பாடு செய்தனர்.

திரு. V. கண்ணன் பிள்ளை நன்றி கூற கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

S. செந்தில்குமார்
செயலாளர்

## மேலப்பெரும்பள்ளம்

மேலப்பெரும்பள்ளம், கீழப்பெரும்பள்ளம் & தலைச்சங்காடு: சங்க கூட்டம் சென்ற 05.03.2026 அன்று தலைவர் திரு. B. இலட்சுமணன் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே தொடங்கியது. சங்க உறுப்பினர்களை தலைவர் வரவேற்று பேசியபின், சென்ற 22.02.26 அன்று மதுரையில் நடைப்பெற்ற கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. சிலை அடிக்கல் நாட்டு விழாவிற்கும், 27.02.2026 அன்று பெண்ணாகடம் ஸ்ரீ மெய்கண்டார் திருக்கோவிலில்நடைப்பெற்றநிர்வாக குழு,செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்களுக்கான பாராட்டு விழாவிலும் இச்சங்கம் சார்பில் கலந்துகொண்டு சிறப்பித்த விபரம் தெரிவிக்கப்பட்டது. பின்னர் நன்றி நவில கூட்டம் இனிதே நிறைவுபெற்றது.

– பால. இலட்சுமணன்
தலைவர்

## இளையமுதுகூடம்:

சங்க கூட்டம் 20.03.2026 அன்று டாக்டர் M. சேகர் அவர்கள் இல்லத்தில் இறைவணக்கத்துடன் தொடங்கியது. கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சங்க வரவு செலவு கணக்கு பொருளர் திரு. S. சிவகடாட்சம் பிள்ளை அவர்களால் படிக்கப்பட்டு ஏற்பளிக்கப்பட்டது.

ஆனந்தம் அமைப்பிற்கு விகடன் டாப் 10 விருதுக்கு தேர்வு செய்தமைக்கும் பணம் இல்லாததால் படிப்பை கைவிடும் மாணவர்கள் தமிழ்நாட்டில் இருக்கக்கூடாது என்ற இலக்கை நோக்கி செல்லும் ஆனந்தம் அமைப்பிற்கும், சகோதரர் திரு. செல்வகுமார் மற்றும் குழுவினர்களை பாராட்டி வாழ்த்து தெரிவிக்கப்பட்டது.

நமது ஒப்புரவு ஆசிரியர் மேலையூர் அன்பழகன் அவர்கள் இயற்கை எய்தியமைக்கு மௌன அஞ்சலி அனுசரிக்கப்பட்டது. கூட்டத்தில் கலந்துகொண்ட அனைவருக்கும் தேநீர் வழங்கிய சங்க செயலர் திரு. G. சுப்பிரமணியன் அவர்களுக்கு நன்றி தெரிவித்து தேசிய கீதத்துடன் கூட்டம் இனிதே நிறைவேறியது.

– A. நடனம், தலைவர்

## 80 இராதாநல்லூர்:

சங்க கூட்டம் 8.3.2026 அன்று சங்க செயலர் அவர்கள் இல்லத்தில் தலைவர் T. முத்துக்குமரசாமி அவர்கள் தலைமையில் சங்க செயற்குழு உறுப்பினர் A. சண்முகநாதன் அவர்கள் வரவேற்புரையுடன் நடைபெற்றது. மார்ச் மாதத்தில் பிறந்தநாள் மற்றும் திருமணநாள் காணும் உறுப்பினர்களுக்கு வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. 80 இராதாநல்லூர் சங்க செயலர் திரு. R.M.A. செல்வம் (எ) இராஜா முத்தையா அவர்கள் சங்க உறுப்பினர்களுக்கு ''பராபவ'' வருட பஞ்சாங்கம் வழங்கினார்கள். அன்னாருக்கு தலைவர் அவர்கள் நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்தார்கள். 2026 ஆண்டிற்கான உறுப்பினர் சந்தா தொகையினை இதுநாள் வரை செலுத்தாதவர்கள் உடன் சங்க பொருளாளர் திரு. M. சீனிவாசன் அவர்களிடம் செலுத்த கேட்டுக் கொள்ளப்பட்டது. ஏப்ரல் மாத சங்க கூட்டத்தில் சங்க வரவு செலவு கணக்கினை முன்னிலைப்படுத்தி ஒப்புதல் பெற பொருளாளர் அவர்களை கேட்டுக்கொள்ளப்பட்டது. சங்க செயலர் திரு. இரா. மு.அ. இராஜாமுத்தையா அவர்கள் நன்றிகூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– T. முத்துக்குமரசாமி, தலைவர்

## பூம்புகார் - மேலையூர்:

சங்க கூட்டம் (1.3.2026) அன்று உறுப்பினர் திரு. பரணிதரன் இல்லத்தில் இறைவணக்கத்துடன் இனிதே துவங்கியது. கூட்டத்திற்கு வருகைபுரிந்த அனைவரையும் தலைவர் திரு. N. பாண்டியன் அவர்கள் வரவேற்று பேசினார்.

தமிழ்நாடு கார்காத்தார் சங்க கூட்டமைப்பின் பொதுச்செயலாளரும், கார்காத்தார் ஒப்புரவு வெளியீட்டாளருமான திரு. கைலை. சண்முகம் அவர்களுக்கு (28.2.2026) அன்று சர்வதேச தமிழ்ப் பண்பாட்டுப் பல்கலைக்கழகம் (International Tamil Cultural University) மதிப்புறு முனைவர் பட்டம் வழங்கி சிறப்பித்துள்ளார்கள். அவர்களது சமுதாய பணி தொடர நமது சங்கம் சார்பாக வாழ்த்துக்களையும் பாராட்டுகளையும் அன்புடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

மார்ச் மாதம் 8ஆம் தேதி உலக மகளிர் தினம் நமது சங்கம் சார்பாக பல்லவனிஸ்வரன் கோவிலில் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது.

நமது உறுப்பினர் திரு. S. சுந்தர் அவர்களின் தேனீர் விருந்துடன், மகளிர் அணி செயலாளர் திருமதி K. கோமதி அவர்களின் நன்றியுரையுடன் கூட்டம் இனிதே நிறைவு பெற்றது.

– G. விஜயராகவன், செயலாளர்

## மூவலூர்:

சங்க கூட்டமும், பாராட்டு கூட்டமும் இணைந்து 15.03.26 அன்று மூவலூர் தெற்கு வீதியில் உள்ள திரு. B. மோகன் அவர்கள் இல்லத்தில் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. சங்கத் தலைவர் திரு. S. ராஜ்குமார் அவர்கள் கூட்டத்திற்கு தலைமை ஏற்று நடத்தினார்கள்.

சங்க மகளிர் உறுப்பினர்கள் இணைந்து இறைவணக்கம் பாடி சிறப்பித்தார்கள்.

பொருளாளர் திரு. மா.வெ. தமிழரசன் அவர்கள் கூட்டத்திற்கு முன்னிலை வகித்து, வரவு செலவு அறிக்கையினை வாசித்தார்கள். சங்க செயலாளர் திரு. G. குருமூர்த்தி அவர்கள் சென்ற கூட்ட அறிக்கையினை வாசித்தார்கள்.

கூட்டத்தின் முக்கியநிகழ்வாக,மின்வாரியத்தில் முப்பது ஆண்டுகளுக்கு மேலாக சிறப்பாக பணியாற்றி, ஓய்வு பெற்ற, நமது சங்க உறுப்பினர் திரு. M.K. விஜயகுமார் அவர்களை பாராட்டி, வாழ்த்து மடலும், பொன்னாடையும் போர்த்தி கௌரவிக்கப்பட்டது.

பாராட்டுதல்களை ஏற்று ஏற்புரையாக, திரு. M.K. விஜயகுமார் அவர்கள் சிறப்பாக பேசினார்கள்.

அடுத்த சங்க கூட்டத்தை 29.3.26–ல் நடத்தி தமிழ் பஞ்சாங்கம் (2026–27) வழங்கவும் தீர்மானிக்கப்பட்டது.

கூட்ட இறுதியாக, கூட்டம் நடத்த இடம் கொடுத்து உதவிய உறுப்பினர் திரு. B. மோகன் அவர்களுக்கும், மாலை சிற்றுண்டி வழங்க உறுதுணையாக இருந்த திரு. M.K. விஜயகுமார் மற்றும் மாப்படுகை M. முருகானந்தம் அவர்களுக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

– G. குருமூர்த்தி
செயலாளர்

## காமதேனு சமூக நல அறக்கட்டளை, தஞ்சாவூர்

### 2025-26ஆம் ஆண்டிற்கு உதவித்தொகை வழங்கிய பெரியோர்கள்

| வ.எண் | பெயர் | தொகை |
|---|---|---|
| 1 | திரு. R. விமல், S/o. Dr. G. ரவி | 50000 |
| 2 | திருமதி. R. சாவித்திரி பாலகிருஷ்ணன் | 15000 |
| 3 | திருமதி. துர்கா செல்வி திருஞானசம்பந்தம் | 10000 |
| 4 | திரு. S. திருஞானசம்பந்தம் | 10000 |
| 5 | திரு. K. தண்டாயுதபாணி | 10000 |
| 6 | திரு. R. சண்முகம் | 5000 |
| 7 | திரு. D. சுகுமார் | 5000 |
| 8 | திரு. S. மோகன் | 2000 |
| 9 | திருமதி. T. கோமதி | 1000 |
| 10 | திருமதி. V. சாய்கிருத்திகாலக்ஷ்மி | 1000 |
| 11 | செல்வி. E. பிரஹாதி | 1000 |
| 12 | செல்வி. E. லக்ஷனா | 1000 |
| 13 | செல்வன். E. பிரபஞ்சன் | 1000 |
| | மொத்தம் | 1,12,000 |

### 2025-2026ஆம் ஆண்டில் அறக்கட்டளை மூலமாக உதவி பெற்றவர்கள்

| வ.எண் | தந்தை/தாய் பெயர் | மாணவர் பெயர் | பெற்ற தொகை |
|---|---|---|---|
| 1 | A. நதியா | B. பத்மப்பிரியா | 5000 |
| 2 | B. பூதேவி | A. ஆகாஷ் | 5000 |
| 3 | R. உமா மகேஸ்வரி | R. விக்னேஷ் | 5000 |
| 4 | U. சுயம்புநாதன் | S. கீர்த்தனா | 5000 |
| 5 | R. சண்முக சுந்தரம் | S. முகேஷ் | 5000 |
| 6 | R. அனுசியா | R. நந்தினி | 5000 |
| 7 | S. கயல்விழி | S. பிரீத்திஸ்ரீ | 5000 |
| 8 | V. சிவரஞ்சனி | V. அரவிந்தராஜன் | 5000 |
| 9 | R. ஜோதி | R. வைஷாலி | 5000 |
| 10 | M. ஞானப்பிரகாசம் | G. ரித்திகா | 5000 |
| 11 | N. சக்திவேல் | S. ஆகாஷ் | 5000 |
| 12 | S. திலகா | K.S. பாவேந்தன் | 5000 |
| 13 | V. சுந்தரவள்ளி | V. கேசவன் | 5000 |
| 14 | வேலுசாமி | கார்த்திக் | 5000 |
| 15 | J. குமுதவள்ளி | M. ஹரிக்குமார் | 5000 |
| 16 | J. குமுதவள்ளி | M. மேகலா | 5000 |
| 17 | பாபுவெங்கடேசன் | B. பூர்ணிகா | 5000 |
| 18 | த. சுதந்திராதேவி | தீப்திஸ்ரீ | 5000 |
| 19 | N. அகிலா | அ. தேவேந்திரன் | 5000 |
| 20 | R. பழனிவேல் | கிருத்திகுமரன் | 5000 |
| 21 | சாரதா சக்திபீடம் | | 1000 |
| | | மொத்தம் | 1,01,000 |

– B. மோகன்குமார், செயலாளர்

## கும்பகோணம்:

சங்க கூட்டம் அருள்நகர் பிரேமா பாலசுப்பிரமணியம் அவர்கள் இல்லத்தில் தலைவர் ஏ.எஸ். பழனி அவர்கள் தலைமையில் மண்டல தலைவர் S.விஜயகுமார், மங்கல சந்திப்பு ஒருங்கிணைப்பாளர் எம்.ஆர்.கே. பாண்டியன் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. பிரேமா பாலசுப்ரமணியம் அவர்கள் வரவேற்றார்கள். துணைத்தலைவர் M. பாலகுரு அவர்களின் நன்றியுரைக்கு முன் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

சர்வதேச தமிழ் பண்பாட்டு பல்கலைக்கழகம் வழங்கிய மதிப்புறு முனைவர் பட்டம் பெற்ற நமது சங்க மாநில பொதுச்செயலாளர் கையிலை சண்முகம் அவர்களுக்கு வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

5.4.2026 ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ள மங்கள சந்திப்பு தேர்தல் நடத்தி விதிமுறைகளுக்கு உட்பட்டு நடத்திக்கொள்ள மங்கள சந்திப்பு குழுவினருக்கு அனுமதி அளிக்கப்பட்டது

மங்களசந்திப்புவரன்விவரப்பட்டியல்ஒவ்வொரு ஆண்டும் போல் இந்த ஆண்டும் திருமங்கலக்குடி கோயிலில் பூஜை செய்ய அனைவராலும் ஏகமனதாக ஏற்றுக் கொள்ளப்பட்டது. மே மாதம் ஆண்டு விழா நடத்துவதற்கு தலைவர், செயலாளர், பொருளாளர் உள்ளிட்ட குழு அமைக்கப்பட்டு நடத்துவதற்கு கேட்டுக்கொள்ளப்பட்டது.

மதுரையில் நடைபெற்ற கப்பலோட்டிய தமிழர் வ.உ.சி. அவர்களின் 150 அடி திருஉருவ சிலை அமைப்பதற்கான அடிக்கல் நாட்டு விழாவில் கலந்துகொண்டு சிறப்பித்த நமது சங்க உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவிக்கப்பட்டது.

16.3.2026 அன்று சென்னை கார்காத்தார் சங்க மேனாள் தலைவர் திரு. அன்பழகன் அவர்கள் இறைவனடி சேர்ந்தமைக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டு இரங்கல் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

– S. விஜயகுமார் பிள்ளை, செயலாளர்

## திருச்சி:

சங்கம் சார்பில் 14.03.2026, திருச்சி தில்லைநகர் கௌரி கிருஷ்ணா ஹோட்டலில் ''மகளிர் தின விழா'' கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு திருச்சி சங்கத்தின் மகளிர் அணி தலைவர் திருமதி சரஸ்வதி பாலசுப்ரமணியன் தலைமை வகித்தார். மகளிர் அணி செயலாளர் திருமதி. மஞ்சுளா குமார் வரவேற்புரை ஆற்றினார். திருச்சி சங்கத்தின் மூத்த உறுப்பினர்களான திருமதி. கௌரி ஜெகதீசன், மற்றும் கலாவதி சண்முகம் ஆகியோர் முன்னிலை வகித்து விழாவை சிறப்பாக நடத்தினார்கள்.

விழாவில் பல் மருத்துவர் டாக்டர். உமா மகேஸ்வரி கணபதி சுந்தர் மிகச் சிறப்பானதொரு வாழ்த்துரை வழங்கினார்.

வளரும் இளம் பேச்சாளர், சிதம்பரம் நகரைச் சேர்ந்த செல்வி. வர்ஷா ''உலகம் உங்கள் கையில்'' என்ற தலைப்பிலே மிக அருமையான ஒரு சிறப்புரை ஆற்றினார்.

மகளிர் அணியினரும் திருச்சி கார்காத்தார் சங்க உறுப்பினர்களும் பெரும்பாலானோர் பங்கேற்று சிறப்பித்தனர்.

விழாவில் திருச்சி சங்க செயலாளர் சுப்பிரமணியன், Karkathar Business Forum திருச்சி தலைவர் திரு.சோமசுந்தரம், திரு.சரவணன் உள்ளிட்டோர் வாழ்த்துரை வழங்கினார்கள்.

திருச்சி சங்கத் தலைவர் சிவகுருநாதன் நிறைவுரையாற்றினார்.

மகளிர் அணி சேர்ந்த திருமதி. வள்ளி சிவக்குமார் நன்றி உரையாற்றினார்.

விழா ஏற்பாடுகளை பொருளாளர் திரு. N. பாண்டியன்திருமணதகவல்மையஇணை அமைப்பாளர் திரு. C. சபாபதி மற்றும் நிர்வாக குழு / செயற்குழு உறுப்பினர்கள் சிறப்பாக செய்திருந்தார்கள்.

திருமதி அம்பிகா அவர்கள் நிகழ்ச்சியை சிறப்பாக தொகுத்து வழங்கினார்கள்.

- C. சுப்ரமணியன், செயலாளர்

## மதுரை:

சங்கத்தின் செயற்குழு கூட்டம் தருமைபுர ஆதின மண்டபத்தில் 08.03.26 அன்று நடந்தது. தலைவர் முனைவர் கு. சிவசுப்ரமணியம் தலைமை தாங்கினார். பொருளாளர் வழக்கறிஞர் முருகன் மற்றும் மதுரை மண்டல தலைவர் திரு. உமையொருபாகம் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் கலந்துகொண்டு சிறப்பித்தனர். திரு. மாணிக்கவாசகம் கடவுள் வாழ்த்து பாடினார். தலைவர் சிவசுப்ரமணியம் சென்ற மாத நிகழ்வுகள் பற்றி பேசினார். திரு வ.உ.சி. திருஉருவச்சிலை அடிக்கல் நாட்டு விழாவிற்கு வருகை தந்த நமது மாநிலத் தலைவர், பொதுச்செயலாளர், அமைப்பு செயலாளர் மற்றும் செயற்குழு உறுப்பினர்கள் அனைவருக்கும் நன்றி தெரிவித்தார். 21.2.26 அன்று மருத்துவர் பாலமுருகன் மற்றும் மருத்துவர் கல்பனா பாலமுருகன் மாநில சங்க உறுப்பினர்களுக்கு வழங்கிய உபசரிப்பு குறித்து பாராட்டினார். 27.2.26 அன்று நடந்த மெய்கண்டார் அறக்கட்டளை மண்டப திறப்புவிழாவிற்கு நமது சங்கம் சார்பாக வழங்கிய

ரூபாய் 10000 பற்றி எடுத்துரைக்கப்பட்டது. நமது சங்க உறுப்பினர் திரு சிவானந்தம் அவர்களின் துணைவியார் திருமதி ஜெயலட்சுமி அவர்கள் 05.3.26 அன்று இயற்கை எய்தியமைக்கு மௌன அஞ்சலி செலுத்தப்பட்டது. சங்க பொதுச்செயலாளர் திரு. கைலை சண்முகம் 28.2.26 அன்று நடைபெற்ற சர்வதேச தமிழ் பண்பாட்டு கழக விருது வழங்கும் விழாவில், கவுரவ டாக்டர் பட்டம் வழங்கப்பட்டதை அறிந்து மதுரை மாவட்ட கார்காத்தார் சங்கம் பெருமை கொள்கிறது. அன்னாருக்கு செயற்குழுவில் பாராட்டு தெரிவிக்கப்பட்டது. வரும் காலங்களில் மாணவர்களுக்கு உயர்கல்வி விழிப்புர்ணவு முகாம் மற்றும் மங்கள சந்திப்பு நடத்துவதாக முடிவு செய்யப்பட்டது.

**ஈரோடு:**

சங்கத்தின் செயற்குழு கூட்டம் தலைவர் திரு. D. குமார் தலைமையில் செயலாளர் மதியழகன் இல்லத்தில் 15.03.2026 அன்று நடைபெற்றது.

ஈரோடு இணைப்பு சங்கமாக "ஈரோடு கார்காத்தார் நலச் சங்கம்" என்ற பெயரில் மாநில செயற்குழுவில் அங்கீகாரம் வழங்கியதற்கு நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம்.


மறைந்த மாநிலத் தலைவரின் துணைவியார் திருமதி. ஆனந்தி மற்றும் நமது உறவினர்களின் மறைவிற்கும் சங்கம் சார்பாக ஆழ்ந்த இரங்கலை தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த வருடம் CREW அறக்கட்டளை மூலம் கல்வி உதவித் தொகை வழங்கியதற்கு கார்குலவள்ளல் திரு. வெங்கடேசன்பிள்ளை, திரு. முத்துக்குமாரசாமி பிள்ளை மற்றும் மாநில நிர்வாகிகளுக்கும் நன்றியினை தெரிவித்துக்கொள்கிறோம்.

வருகைபுரிந்த அனைவருக்கும் திரு. ஆர். முருகேசன் நன்றி கூற கூட்டம் இனிதே முடிவுற்றது.

– அ. மதியழகன், செயலாளர்

## கண்ணீர் அஞ்சலி



சென்னை கார்காத்தார் சங்கத்தின் மேனாள் தலைவரும், கார்காத்தார் ஒப்புரவில் சட்ட நுணுக்கங்கள் குறித்து தொடராக பல ஆண்டுகள் எழுதி வருபவருமான மேலையூர் திரு. ச. அன்பழகன் அவர்கள் 16.3.2026 அன்று இறைவனடி சேர்ந்தார்கள். அன்னாரது பிரிவால் வாடும் குடும்பத்தினருக்கு சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறது.

## புகழ் அஞ்சலி

ஒரு அஞ்சல் வழி
சட்டக் கல்லூரி
மூடப்பட்டதோ!

ஒரு நடமாடும்
சட்ட அலுவலகம்
நின்று போனதோ!

விழிகளுக்கு விருந்தாக
வித விதமான
சட்ட பிரிவுகளையெல்லாம்

"ஒப்புரவு" ஏட்டினில்
பந்தி வைத்து
அழைத்ததென்ன!
பரிமாறிக்
களித்ததென்ன!

சட்டத்தின் பல்கலையில்
கட்டணமின்றிப்
படித்தோமே!

வீட்டிற்கு ஒரு
வழக்குரைஞரை
கார்குலத்தில்
வளர்த்தீரே!

நீதியின் பரிபாலனத்தை
நிறைவாக அறியச்
செய்த தென்ன!

வெளியிட்டுள்ள
சட்டப் புத்தகங்களையெல்லாம்
கல்லூரிப் பாடமாக

கார்குலம் போற்ற
வாழ்ந்த
பெருந்தகை
தெய்வத்திரு. மேலையூர்
அன்பழகனாருக்கு
அன்பு நெஞ்சங்களின்
புகழ் அஞ்சலி

மெய்யாத்தூர் சொ. வேல்முருகன்

# கார்காத்த வேளாளர் சேவைக்குழு, விருத்தாசலம்




22.02.2026 அன்று கப்பலோட்டிய தமிழன் வ.உ.சி. சிலை அடிக்கல் நாட்டு விழா மதுரையில் நடைப்பெற்றது. அதற்கு விருத்தாசலம் கார்காத்தார் சங்க சார்பில் 10 வேன், 1 பஸ் தகுந்த ஏற்பாடு செய்து சங்க உறுப்பினர்களை அழைத்து சென்று வந்தோம்.

08.03.2026 இன்று சேவைக் குழுவின் மாதாந்திர கூட்டமும், மகளீரணியின் மகளிர் தினவிழாவும் கடைவீதியிலுள்ள திரு. இரா. பன்னீர்செல்வம் அவர்களது இல்லத்தில் தலைவர் திரு. ஜெ. சந்திரசேகரன் அவர்கள் தலைமையிலும் கௌரவத்தலைவர் திரு. இரா. பன்னீர்செல்வம் அவர்கள் முன்னிலையிலும் நடைப்பெற்றது.

அதுசமயம் சிறுவர் முதல் பெரியவர்கள் வரையிலான மகளிருக்கான பல்வேறு விளையாட்டுப் போட்டிகள் நடைப்பெற்றது. வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுப் பொருட்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டது. இவ்விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் சுமார் 100 பேருக்கு மேல் மாலை சிற்றுண்டியுடன் தேநீரும் வழங்கப்பட்டது. அத்துடன் வந்திருந்த அனைவருக்கும் நினைவு பரிசு வழங்கி கௌரவிக்கப்பட்டது.

சிறப்பாக பணியாற்றிவரும் மகளீரணி பொறுப்பாளர்களுக்கு மேற்படி சேவைக்குழு சார்பில் பாராட்டு சான்றிதழும், நினைவுப்பரிசும் வழங்கப்பட்டது. அத்துடன் பராபவ ஆண்டுக்கான பஞ்சாங்கம் வழங்கப்பட்டது.

இறுதியாக திரு. த. ஜெயராமன் அவர்கள் நன்றி கூற இனிதே கூட்டம் நிறைவுற்றது.

– J. சந்திரசேகரன், தலைவர்
கார்காத்த வேளாளர் சேவைக்குழு, விருத்தாசலம்

## ஒப்புரவின் ஒப்பில்லா மேலையூர் ச. அன்பழகன்

நமது மறைந்த திரு. மேலையூர் ச. அன்பழகன் அவர்கள் 31.05.1943 அன்று கருவாழக்கரை திரு. க. சபாபதி பிள்ளை – திருமதி கோகிலாம்பாள் தம்பதியருக்கு மகனாகப் பிறந்தார். பள்ளிப் படிப்பினை மயிலாடுதுறை நகராட்சி உயர்நிலைப் பள்ளியிலும், இளங்கலை B.Sc. படிப்பினை சென்னை ஏ.எம். ஜெயின் கல்லூரியிலும் பயின்று, சட்டப்படிப்பினை சென்னை சட்டக் கல்லூரியில் 1966ஆம் ஆண்டு முடித்து, வழக்கறிஞரானார். 1967ல் சென்னை வழக்கறிஞர் மன்றத்தில் வழக்கறிஞராக பதிவு செய்திருந்த போதிலும், வங்கிப் பணியை மேற்கொண்டார்.

தமிழ்நாடு கூட்டுறவு மாநில விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கியில் (நிலவள வங்கி) சட்ட அலுவலராக இணைந்து 33 ஆண்டுகள் பணியாற்றினார். 2001–ல் அதே வங்கியின் பொதுமேலாளராக ஓய்வு பெற்றார். ஓய்வுக்குப் பின் சென்னையில் வழக்கறிஞராக பணியாற்றினார். குறிப்பாக நிலம் மற்றும் வீடு வாங்குவோருக்கான சட்ட ஆலோசனைகளை வழங்கி வந்தார்.

1968–ஆம் ஆண்டு பர்வதவர்த்தினி எனும் மங்கை நல்லாளை மணந்தார். அத்தம்பதியருக்கு குமரன், அபர்ணா எனும் இரு நல் முத்துக்கள். நன்முறையில் அவர்களை ஆளாக்கி, குடும்பத்தலைவனாக தனது பொறுப்பினை நிறைவேற்றினார். குமரன்–சுஜாதா தம்பதியரின் மூலம் ஆகாஷ், அபிஷேக் என்ற பேரன்களுடனும், அபர்ணா–ப.ரவீந்திரன் தம்பதியரின் மூலம் நவீன்குமார் என்ற பேரனுடனும் வாழ்க்கைப் படகு சீராக சென்றது. ஒரு சில ஆண்டுகளுக்கு முன் பேரன் ஆகாஷின் திருமணத்தில் சங்க நண்பர்கள் சந்தித்து அவரை வாழ்த்தியது மனதில் நிழலாடுகிறது. ஆகாஷ்–கற்பகரக்ஷா தம்பதியரின் மூலம் அக்ஷ்ரா எனும் கொள்ளுப்பேத்தியும் கண்டார்.

இல்வாழ்க்கை இப்படி இருக்க, பணி ஓய்வு பெற்றபின் பொதுச்சேவையில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டார். சென்னை கார்காத்தார் சங்கத்தில் மறைந்த திரு. D.S. கணபதி அவர்கள் தலைவராக இருந்தபோது ஈடுபட்டதுடன், கார்காத்தார் ஒப்புரவில் சட்ட நுணுக்கங்கள் குறித்து தொடராக கட்டுரைகள் எழுதினார். அதைப் படித்த நண்பர், சி. சீதாராமன் & கோ. பி. லிமிடெட் நிறுவனத்தின் மூலம் புத்தகமாக வெளியிட ஆலோசனை கூற, மேலையூர் திரு. ச. அன்பழகன் அவர்கள் 'பொதுச்சட்டங்கள்' என்ற தலைப்பில் 5 பாகங்களாக வெளியிட்டார். முதல் பகுதியை சென்னை கார்காத்தார் சங்கம், சூளைமேட்டு வளாகத்தில் வெளியிட்டது. அவர் பல கட்டுரைகளை லாயர்ஸ் லைன் போன்ற இதழ்களிலும், பல்வேறு சங்க மலர்களிலும் எழுதி உள்ளார்.

தன்னை முழுமையாக சங்கப் பணிகளில் ஈடுபடுத்திக்கொண்ட அவர், 2014ஆம் ஆண்டு முதல் 2017 வரையில் சென்னை கார்காத்தார் சங்கத் தலைவராக பணியாற்றினார். 2018–லிருந்து கார்காத்தார் ஒப்புரவின் ஆசிரியராகி இதுநாள் வரை சிறப்பாக பணிபுரிந்து வந்தார். கார்காத்தார் ஒப்புரவு நன்முறையில் வெளிவர தன்னால் இயலாத நிலையிலும் பாடுபட்டது மறக்க இயலாதது.

திருச்சிற்றம்பலம் திரு. மு. அருணாசலம் பிள்ளை அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய ஆய்வுக் கட்டுரையான "A study of the Culture and History of the Karkathar" புத்தகத்தினை தமிழில் கார்காத்தார் சமுதாய வரலாறு மற்றும் கலாச்சாரம் (சுருக்கம்) என மொழிபெயர்த்து, 2012ஆம் ஆண்டு நெல்லையில் நடைபெற்ற மாநில கார்காத்தார் சங்கத்தின் பொதுக்குழுவில் வெளியிட்டார். பொதுச்சட்டங்களுடன், மாதிரி ஆவணங்கள் என்ற நூலினையும் பதிப்பித்துள்ளார். அவரது நூல்கள் பலராலும் பாராட்டு பெற்றது எங்களுக்கெல்லாம் மிக்க பெருமையே. மேலும் 2022–ல் நடைபெற்ற சதாபிஷேகத்தில், 5 பாகங்களான பொதுச்சட்டங்களை ஒன்றிணைத்து 'நாமும் சட்டமும்' என்ற புத்தகமாக வெளியிட்டு, ஆசி பெற மற்றும் வாழ்த்த வந்த அனைவருக்கும் அன்பளிப்பாக கொடுத்தார்.

கார்குலத்திற்காக பாடுபட்ட மேலையூர் திரு. ச. அன்பழகன் அவர்கள் 16.03.2026 அன்று இறைவனடி சேர்ந்தார். சென்னை கார்காத்தார் சங்கமும், கார்காத்தார் ஒப்புரவும் அவரை இழந்து வாடும் குடும்பத்தினருக்கும், உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் ஆழ்ந்த இரங்கல்களை தெரிவித்துக் கொள்கிறது. அவரது ஆத்மா சாந்தி அடைய பிரார்த்திக்கும்.

– கார்காத்தார் ஒப்புரவு ஆசிரியக் குழு

## கல்வியும் ஒழுக்கமும்...

ஒரு நாட்டின் முன்னேற்றத்தைப் பல தரவுகளின் அடிப்படையில் கணக்கிடும்போது அதில் கல்வியே முதன்மையாக அடையாளப்படுத்தப்படுகிறது. கல்வியும், கல்வி சார்ந்த ஒழுக்க நெறியுமே மனிதனைப் பண்புள்ள மனிதனாகச் செதுக்குகிறது.

மனித வாழ்வியல் இலக்கணம் வகுத்தளித்த திருவள்ளுவர், ‘‘ஒழுக்க நெறியைப் பின்பற்றி சமூகத்தோடு பொருந்தி வாழாதோர் எவ்வளவு கற்றிருப்பினும் அவர்கள் அறிவில்லாதவர்களே’’ என்று கூறுகிறார். தமிழர் தங்கள் உயிரினும் மேலானதாகக் கருதிப் போற்றி வரும் இவ்வொழுக்கநெறி இன்றைய மாணவச் சமுதாயத்திடம் குன்றிவருவது கண்கூடு.

மாணவர்களிடம் காணப்படும் ஒழுக்க சீர்கேட்டிற்கு யார் காரணம்? யோசிப்போம்! மாணவர்களின் ஒழுக்கநெறியைக் கட்டமைப்பதில் பெற்றோர், கல்வியாளர்கள், அரசு, சமூகம் ஆகிய அனைத்துத் தரப்பினருக்குமே பொறுப்பு உண்டு என்பதைக் கருத்தில் கொள்ள வேண்டும்.

அண்ணல் காந்தியடிகள், மாணவர்களுக்கு போதிக்கப்படும் கல்வி எப்படிப்பட்டதாக அமைய வேண்டும் என்பதைப் பற்றிக் கூறும்போது, ‘‘மனிதன் என்றால், வெறும் அறிவு மாத்திரமல்ல, உடலுமல்ல, உணர்ச்சி மட்டுமா என்றால் அதுவும் அல்ல. அறிவு, உடல், உணர்ச்சி ஆகிய மூன்றும் உரிய முறையிலே ஒன்று கூடினால்தான் ஒருவன் மனிதன் ஆகிறான். இவை மூன்றையும் வளர்ப்பதே உண்மையான கல்வி முறையாகும்’’ என்று கூறினார்.

மேலும் அவர், ‘‘மாணவர்கள் படிக்கிறபோதே ஒழுக்கத்தை கடைபிடிப்பதோடு, எண்ணங்கள், செயல்கள் ஆகியவற்றைக் கட்டுப்படுத்தும் மனத்திண்மையும் பெற வேண்டும் என்று கூறினார்.

அண்ணல் காந்தியடிகள் தீர்க்கதரிசனமாகக் கூறிய, அறிவையும், ஆன்மாவையும் உயர்ந்த நிலைக்கு வளர்த்தெடுக்கக் கூடிய கல்விமுறையின் கருத்தாக்கத்தை இன்றைய கல்வியாளர்களும் அரசும் மனதில் கொண்டு கல்விக் கொள்கையை வகுத்து மாணவ சமுதாயத்தை ஒழுக்க நெறியில் கொண்டு செலுத்த முயல்வது காலத்தின் கட்டாயம்.

மாணவர்களுக்கு கல்வி போதிப்பது ஆசிரியரின் கடமை என்றாலும், கற்பித்தல் முறையில் மாணவர்கள் மன அழுத்தத்திற்கு ஆட்படா வகையில் அவர்களின் மனதைக் கவரும் வண்ணம் எளிய வடிவிலான கற்பித்தல் முறையைக் கையாள முயல வேண்டும்.

மேலும் கடந்த காலத்தைப் போல, ஒழுக்கநெறி செழிக்க, பள்ளிகளில் வாரம் ஒரு முறை நீதி போதனை வகுப்பைத் தொடங்க வேண்டும். கல்வி சுற்றுலாவை பாடத்திட்டத்தின் ஒரு பகுதியாக வைத்து மாணவர்களை வரலாற்று சிறப்புமிக்க இடங்கள், கோயில்கள், கோட்டைகள் மற்றும் பல இடங்களுக்கு அழைத்துச் சென்று நமது கலை, பண்பாடு, கலாச்சாரம் ஆகியவற்றை மாணவர்களின் மனதில் பதிய வைத்து அவர்களின் மனதைச் செம்மைப்படுத்தும் பணியினை கல்விக் கூடங்கள் மேற்கொள்ள வேண்டும்.

மாணவர்களை பாதுகாத்து நல்வழிப்படுத்திட பள்ளிகளில் உளவியல் வல்லுநர்களை அவ்வப்போது வரவழைத்து மாணவர்களுக்கு உளவியல் ரீதியான ஆலோசனைகளை வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மேலும், இன்று பெரும்பாலான குடும்பங்களில் கணவன் மனைவி இருவரும் வேலைக்குச் செல்வதால், அவர்கள் தங்கள் குழந்தைகளிடம் நேரம் செலவிடவோ, அவர்களை நெறிப்படுத்துவதற்கோ இயலாமல் போகிறது. இதனால் குழந்தைகள் வழி தவறிப் போகும் நிலை ஏற்படலாம். எனவே, பெற்றோர் தங்கள் பிள்ளைகளிடம் நேரம் செலவிடுவதைக் கடமையாகக் கருதுவதோடு, அவர்களை நெறிப்படுத்தும் பணியை ஒரு தவமாக மேற்கோள்ளுதல் வேண்டும்.

எப்படியும் வாழலாம் என்பதைத் தவிர்த்து, இப்படித்தான் வாழவேண்டும் என்னும் ஒழுக்க நெறியினை இன்றைய வளர் இளம் பருவத்தினருக்குக் கற்பிக்க வேண்டிய பொறுப்பு நம் ஒவ்வொருவருக்கும் உண்டு. இதனை உணர்ந்து அதற்கான முனைப்புகளில் இப்போதே ஈடுபடுவோம்.

– அர்ச்சனா சுவேதாரண்யம்,
பெசன்ட் நகர், சென்னை – 90.
செல்: 9943702054

## குழந்தைகளுக்கு நல்ல பழக்கங்களை கற்பித்தல்

A. Rajarethinam, Porur, Chennai.
Ph: 9444224366

பெற்றோர்களும், ஆசிரியர்களும் குழந்தைகளின் மனோதத்துவ சாஸ்திரங்களை நன்றாக அறிந்து கொள்ள வேண்டும்.

ஒரு வருடத்துக்கு திட்டமிடுவதானால், சோளத்தைப் பயிரிடுங்கள். 15 வருடங்களுக்கு திட்டமிடுவதானால், மரங்களை நடுங்கள்.

வாழ்க்கைக்கே திட்டமிடுவதானால், படிப்பையும் நல்ல பயிற்சியையும் கொடுங்கள் என்று க்வான். சு என்ற அறிஞர் கூறினார்.

குழந்தைகள் உங்கள் குடும்பத்தின் எதிர்காலத்துக்கும், நாட்டின் நலனுக்கும் நம்பிக்கையூட்டுபவர்கள். அவர்கள் உங்கள் கவனத்தை எப்போதும் ஈர்ப்பவர்கள். நாட்டின் செழிப்பு இன்றைய குழந்தைகளின் கைகளில் இருக்கிறது. மனித சமுதாயத்தின் கல்வி வளர்ச்சி குழந்தை பருவத்திலிருந்தே தொடங்குகிறது.

குழந்தையின் அறிவு வளர்ச்சி என்பது பிறப்புக்கு முன்பிருந்தே ஆரம்பிக்கிறது. தாயின் எண்ணங்கள், சுற்றுப்புற சூழ்நிலை பொறுத்து குழந்தையின் மூளை வளர்ச்சி அமைகிறது. தாயின் மனம் எப்போதும் தூய்மையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கவேண்டும். தாய் ஒரு உயர்ந்த எண்ணங்கள் உடைய நல்ல திறமையான குழந்தையை பெற்றெடுக்க வேண்டும் என்ற மன உறுதியுடன் வாழ்க்கை நடத்த வேண்டும். T.V. பார்ப்பதாக இருந்தால் கூட, நல்ல சந்தோஷமான மனநிலையை உண்டாக்கக் கூடிய நிகழ்ச்சிகளைப் பார்ப்பது நல்லது. இத்துடன் தந்தையின் முழு ஆதரவு எப்போதும் தேவை.

ஒரு குழந்தை நல்ல குழந்தையாக இருக்க வேண்டும் என்ற எண்ணம் உள்ள பெற்றோர்கள், தாங்களும் நல்ல பெற்றோர்களாக வாழக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது, அவர்கள் குழந்தைகளுக்கு முன்மாதிரியாக நடந்துகொள்ள வேண்டும்.

நேர்மை, தைரியம், பொறுமை, விடாமுயற்சி, அமைதி, சுயகட்டுப்பாடு முதலியவற்றை பெற்றோர்கள் குழந்தைக்கு கற்றுத் தரவேண்டும். புத்திமதிகள் சொல்வதைவிட பெற்றோர்கள் நடந்து காட்டுவதை பழக்கமாகக் கொள்ளவேண்டும். குழந்தையிடம் அதிகாரத்தைக் காட்டுவதோ, கோபப்படுவதோ கூடாது. அது குழந்தையின் மனநிலையை பாதிக்கும்.

ஒரு குழந்தை சந்தேகம் கேட்கும்போது, யோசித்து புத்திசாலித்தனமாக பதில் அளிக்கவேண்டும். குழந்தைகளுக்கு சொல்லிக்கொடுக்க பல முறைகள் உள்ளன. ஒரு கதையை நல்ல முறையில் சொன்னால் அது குழந்தையின் மனதில் ஆழமாக பதியும். குழந்தையை பள்ளியில் சேர்க்கும்போது, அங்கு உள்ள சூழ்நிலையை பெற்றோர்கள் நன்றாக கவனிக்க வேண்டும். ஆசிரியர் – பெற்றோர் சந்திப்பு அன்று பள்ளிக்கு சென்று, ஆசிரியர்களை சந்தித்து, குழந்தையின் முன்னேற்றத்தைப் பற்றி கேட்டு அறிய வேண்டும். அவர்களது படிக்கும் முறை, விளையாட்டுப்பயிற்சி, உடல் வளர்ச்சி, மனவளர்ச்சி போன்ற எல்லாவற்றையும் பற்றி ஆசிரியர்களுடன் பேசி தெரிந்துகொள்ள வேண்டும்.

விளையாட்டுப் பயிற்சி மூன்று நன்மைகளை கொடுக்கிறது.

உடல் உறுப்புகள் உறுதி அடைகின்றன,

மூளை வளர்ச்சி அடைகிறது மற்றும்

உணவு செரிமானம் சீராகிறது.

ஒரு குழந்தை சிறு வயதில் நல்ல பழக்கங்களை கற்றுக் கொண்டால், வாழ்நாள் முழுவதும் அந்த குழந்தை சிறந்த பிரஜையாகத் திகழும். அது பெற்றோர்களுக்கு மிகவும் நிம்மதியைத் தரும். எல்லா வழிமுறைகளும், நெறிகளும் பல அறிஞர்களால் எழுதப்பட்டு புத்தகங்களாக இருக்கின்றன. அவற்றை பெற்றோர்கள் படித்து இளம் வயதிலேயே சிறுவர்களுக்கு சொல்லித்தர வேண்டும். நல்ல குழந்தைகள் தான் நல்ல குடிமகன்களாக வளர்ந்து நல்ல நாட்டை உருவாக்குவார்கள்.

## மாணவச் செல்வங்களே... சாதிக்க ஆசைப்படுவோம்!

சாதிக்க வேண்டும் என்ற ஆசை மனம் முழுக்க இருந்தால் மட்டுமே நம்மால் சாதனை படைக்க முடியும். படிக்கும் பருவத்தில் இருக்கும் மாணவர்கள், விளையாட்டிலும், படிப்பிலும் சாதனை புரிய வேண்டும். சாதித்த மாணவர்கட்கு உரிய அங்கீகாரத்தையும், பாராட்டையும் கொடுக்க வேண்டும்.

நம் தாய்நாடு பெற்றெடுத்த தவப்புதல்வர்கள் பலரை நம் வாழ்க்கை பயணத்தில் சந்திக்கிறோம். அவர்களுடைய வாழ்க்கை முறைகளை அங்கீகரித்து உள்வாங்கிக்கொண்டு செயல்பட்டால் நாமும் வெற்றியாளராகலாம். ''இன்று புதியதாய் பிறந்தோம்'' என்னும் உற்சாகத்தோடு செயல்படத் தொடங்குங்கள். முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார் என்பதை மனதில் கொண்டு வாழ்வின் குறிக்கோளை நோக்கி பயணம் செல்லுங்கள். டாக்டர் அப்துல்கலாம் அவர்கள் கனவு காணுதலுக்கு தரும் விளக்கம், ''உறங்கும் போது நீ காணும் கனவு கனவல்ல, உன்னை உறங்க விடாமல் செய்யும் வெற்றி அடையும் வெறி, உயர் அவா அதுதான் கனவு''.

சாதிக்க வேண்டும் என்ற எண்ணம் வெறியுடன் உழைக்கும் இளைஞர்களுக்கும், இளம் பெண்களுக்கும் வானம் கைக்கெட்டும் தூரம் தான். பெரிதாக எண்ணு, பெரிதாக செய், பெரிதாகச்

சாதிப்பாய் என்பது உறுதி. ''பருவத்தே பயிர் செய்'' என்றார் ஔவையார். சாதிக்க நினைப்பவர்களிடம் இருக்க வேண்டிய முக்கியமான பண்பு ஒரு செயலை செய்ய வேண்டும் என்று நினைத்து விட்டால் அதனை உடனே முடிக்கவேண்டும். நாளை செய்வோம் என்று தள்ளிப் போடும் பழக்கத்தை விட்டொழிக்க வேண்டும். 'ஒன்றே செய், நன்றே செய், அதையும் இன்றே செய்' என்பதே நமது தாரக மந்திரமாக இருக்க வேண்டும்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்க நாட்டிற்குச் சென்றிருந்த போது ஒரு நாள் மாலையில் உலாவச் சென்றார். அப்போது சில இளைஞர்கள் துப்பாக்கி சுடும் பயிற்சியில் ஈடுபட்டுக் கொண்டிருந்தனர். யாரும் இலக்கை நோக்கிச் சுடவில்லை. வேடிக்கை பார்த்த விவேகானந்தர் துப்பாக்கியை வாங்கி இலக்கை நோக்கி சற்றும் குறி பிசகாமல் சுட்டார். இதற்கு முன்னால் அவர் துப்பாக்கியைத் தொட்டது கூட கிடையாது, எப்படி, எப்படி என்று எல்லோரும் வியப்புடன் கேட்டார்கள். சுவாமிஜி சொன்ன பதில் 'நூறு விழுக்காடு மன ஒருமைப்பாட்டுடன் இலக்கில் ஒன்றினேன், வென்றேன்' என்றார். இந்த மன ஒருமைப்பாடு சாதிக்க நினைக்கும் ஒவ்வொருவரிடமும் இருக்க வேண்டும். வாழ்வு என்பது ஒரு வாய்ப்பு, உன் வாழ்வு, உன் சாதனை யாவும் நாட்டு முன்னேற்றத்திற்குப் பயன்படட்டும்.

பாரத பூமியின் தவப்புதல்வர்களுள் தலைசிறந்த ஒருவர் டாக்டர் அப்துல்கலாம் அவர்கள். கலாமின் தந்தை மீனவர்களுக்கு மீன்பிடி படகுகளை வாடகைக்கு விட்டு அதில் கிடைத்த வருவாயில் கலாமைப் படிக்க வைத்தார். கலாம் அவர்களும் வீடுதோறும் செய்தித்தாள் விநியோகம் செய்தல் போன்ற சிறு, சிறு வேலைகளைச் செய்து பொருள் ஈட்டி தந்தைக்கு உதவினார். உயர்நிலைப் பள்ளி படிப்பு, பட்டப்படிப்பு, தொடர்ந்து விமானவியல் பொறியியல் படிப்பு என அனைத்தும் முடித்து, குடும்பத்தின் முதல் பட்டதாரியானார். கலாம் அவர்கள் DRDO (Defence Research and Development Organisation) நிறுவனத்தில் முதுநிலை அறிவியல் உதவியாளராகச் சேர்ந்து அதன் தொடர்ச்சியாக ISRO (Indian Space Research Organisation) நிறுவனத்தில் சேர்ந்து குறுகிய காலத்தில் ரோகிணி–1 என்னும் விண்கலத்தை ஏவி வெற்றி கண்டார். இது போட்டி உலகம். வல்லார்க்கு மட்டுமே வாய்ப்புகளை வழங்கும். நீயும் வல்லான் ஆகு. வல்லவனோடு நேர்மையாய் போட்டியிடு. அவனின் வெற்றியை விமர்சிக்கும் நேரத்தில் விவேகத்தோடு வியர்வை சிந்து. வெற்றி உனக்கே.

எண்ணிய எண்ணியாங்கு எய்துப எண்ணியார்
திண்ணிய ராகப் பெறின்

எனும் வள்ளுவனின் வாக்கிற்கிணங்க வீட்டிற்கும், நாட்டிற்கும் உங்களின் கடமையினை நிறைவேற்றுங்கள்.

நாம் இந்தியர் என்பதில் பெருமை கொள்வோம். வல்லரசு நாடாகும் தகுதி நமக்கும் உண்டு. நமது தாய்த்திரு நாட்டினை வணங்கிப் போற்றிப் பாதுகாப்போம்! மாணவச் செல்வங்களே! சாதிக்க பிறந்தவர்கள் நீங்கள். அணிவகுத்து வாருங்கள். வளமான இந்தியாவின் வளர்ச்சி உங்கள் கையில்.

வாழ்க இந்தியா!

– இரா. திலகம், வையூர்

## குருவை விஞ்சிய சிஷ்யன்

– அரங்க. தியாகராஜன், மயிலாடுதுறை

திருமாலைவழிபடுகின்ற ஆன்மீகவாதிகளுக்கு மட்டுமே உரிய மதமாகக் கருதப்பட்ட வைணவத்தினை அனைத்து சமுதாய மக்களுக்கும் உரிய மதமாக மாற்றி, அதன் மூலம் பெருமைப்பட்டவர் இராமானுஜர் ஆவார். இன்றைக்கு ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே, நாம் இன்று பேசுகின்ற சீர்திருத்தக் கருத்துக்களை நடைமுறையில் செய்து காட்டியவர் இராமானுஜர். இவரை ஆதிசேடனின் அவதாரமாகவே வைணவம் கருதியது. தன் இளம் வயதிலேயே வைணவத்தின் சிறப்புகளை பல ஆன்றோர் பெருமக்களிடம் கசடறக் கற்றுத் தேர்ந்தவர். இராமானுஜர் அந்தணராக இருப்பினும் காஞ்சி வரதராஜப் பெருமாளுக்கு அன்றாடம் ஆலவட்டம் வீசிக் கொண்டே பெருமானிடம் சரளமாகப் பேசுகின்ற பிற இனத்தைச் சேர்ந்த திருக்கச்சி நம்பி அவர்களையும் குருவாக ஏற்றுக் கொண்டவர். இராமானுஜரின் மனைவி தஞ்சம்மாள் தன் குருவாக விளங்கிய பெரியநம்பி, திருக்கச்சி நம்பி ஆகியோரை அவமானப்படுத்தியதைக் கண்டு பொறுக்க முடியாமல் மனைவியை விடுத்து துறவற வாழ்க்கையை மேற்கொண்டவர். யாரும் நினைத்துப் பார்க்க முடியாத தீவிர துறவற வாழ்க்கையை இவர் மேற்கொண்டதனைக் கண்டு திருக்கச்சி நம்பிகள், 'துறவிகளின் அரசர்' என்ற பொருளிலே, 'யதிராசர்' என்ற பட்டத்தினை வழங்கினார்.

அடுத்து, தான் குருவாக போற்றிய ஆளவந்தார் திருநாடு (மோட்சம்) அடைந்த பின்னர் அவர் விரும்பிய வண்ணமே திருவரங்கக் கோயிலின் பொறுப்பினை இராமானுஜர் ஏற்றுக் கொண்டார். திருவரங்கக் கோயிலில் பல சீர்திருத்தங்களைச் செய்தார். அன்றாடம்

கோயிலின் வரவு செலவுகளை அரங்கப் பெருமாள் முன்னிலையில் படித்துக் காட்டும் முறையினை உருவாக்கினார். அவ்வாறு செய்ததன் மூலம் கோயிலின் உடைமைகளை இராமானுஜர் கவனமுடன் பாதுகாத்ததன் காரணமாக திருவரங்கத்தினைச் சார்ந்த ஆன்றோர் இராமானுஜருக்கு 'உடையவர்' எனற பட்டத்தினை வழங்கி மகிழ்ந்தனர்.

இராமானுஜர் தான் குருவாகக் கருதிய ஆளவந்தார் தான் வாழும் காலத்தில் வேதவியாசரின் பிரம்ம சூத்திரத்திற்கு வைணவ நெறிக்கேற்ப விளக்கவுரை எழுத வேண்டுமெனவும், நம்மாழ்வாரின் திருவாய்மொழிக்கு விரிவுரை காணவேண்டுமெனவும், வேதவியாசரின் பெயரையும் அவர் தந்தை பராசரப்பட்டரின் பெயரையும் வைணவக் குழந்தைகளுக்கு வைக்க வேண்டுமெனவும் ஆசைப்பட்டார். ஆனால் அவரின் இந்த மூன்று ஆசைகளும் நிறைவேறாத காரணத்தால் அவர் வைகுந்தப் பதவி அடைந்த நிலையில் அவரின் கைவிரல்கள் மூன்று மட்டும் மடிந்தபடியே இருந்தது. அதனைக் கண்ட இராமானுஜர் தன் ஞானக்கண்ணால் உணர்ந்து, ஆளவந்தாரின் மேற்படி மூன்று ஆசைகளையும் தான் நிறைவேற்றுவதாகக் கூறியவுடன் அனைவரும் ஆச்சரியப்படக் கூடிய வகையில் ஆளவந்தாரின் கைவிரல்கள் நிமிர்ந்தன. அன்று இராமானுஜர் உறுதி கூறிய வகையில் காஷ்மீரம் வரையில் சென்று பல உரைகளைச் சேகரித்து, வியாசரின் பாஷ்யத்திற்கு எளிய உரை விளக்கம் செய்து கொடுத்தார். அதனால் வைணவ அன்பர்கள் மகிழ்ந்து இராமானுஜருக்கு 'பாஷ்யக்காரர்' என்ற பட்டத்தினைக் கொடுத்து மகிழ்ந்தனர்.

அடுத்து, இராமானுஜர் ஆண்டாள் நாச்சியாரின் திருப்பாவை பாசுரங்களில் அதிக ஈடுபாட்டுடன் நினைத்துக் கொண்டும் பாடிக்கொண்டும் இருந்தமையால் 'திருப்பாவை ஜீயர்' என்று அன்பர்கள் அன்போடு அழைத்து மகிழ்ந்தனர். தாழ்த்தப்பட்ட மக்கள், மலைவாழ் மக்கள் என அனைவருக்கும் சம உரிமை தந்து கோயிலுக்கு அழைத்துச் சென்றதால் அச்சாதாரண மக்கள் இராமானுஜரை எங்களைச் சார்ந்தவர் என்ற பொருளில் எம்மானார், எம்பெருமான் என்றெல்லாம் அழைத்து மகிழ்ந்தனர். அதுமட்டுமல்லாமல் அம்மக்கள் சீர்திருத்தச் சாமியார், புரட்சித் துறவி என்றெல்லாம் அழைத்து மகிழ்ந்தனர். இவ்வாறு பல்வேறு பட்டப் பெயரைப் பெற்றவராக விளங்கிய இராமானுஜர் கல்வி கற்கும் காலத்தில் எவ்வாறு திறம்பட மேம்பட்டு விளங்கினார் என்பதனைக் காண்போம்.

இராமானுஜர் காஞ்சிபுரத்தில் வாழ்ந்த காலத்தில் அவ்வூர் அருகில் உள்ள திருப்புட்குழியில் கல்வி கேள்விகளில் மிகச் சிறந்து விளங்கிய யாதவப் பிரகாசர் என்றொரு மகான் மாணவர்களுக்கு கல்வி கற்றுத் தந்து வந்தார். திருக்கச்சி நம்பி அவர்களின் யோசனையின்படி இராமானுஜர் அவரிடம் கல்வி கற்கச் சென்றார். யாதவப் பிரகாசரும் இராமானுஜரின் அறிவுத் திறனைக் கண்டு வியந்தாராயினும் சற்று அவரிடம் பொறாமைப்படவும்செய்தார்.ஒருநாள்யாதவப்பிரகாசர், 'தஸ்ய யதா கப்யாஸம், புண்டரீகம் ஏவம் அக்ஷன்' என்ற வடமொழி வார்த்தைக்கு விளக்கம் கொடுத்தார். அப்பொழுது கப்யாஸம் என்ற சொல்லுக்கு, 'குரங்கின் ஆசனவாய்' என்றும் அதுபோல் திருமாலின் சிவந்த கண்கள் உள்ளன என விளக்கம் கொடுக்க, குருவின் தலையில் எண்ணெய் தேய்த்துக் கொண்டிருந்த இராமானுஜரின் கண்களிலிருந்து கண்ணீர் வழிந்து அவரின் தொடையில் சூடாக விழுந்தது. அதனைக் கண்ட யாதவப் பிரகாசர் ஏன் அழுகிறாய் ? என வினவ, உவமை என்பது பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும் என்பதனை தமிழ் இலக்கணம் 'உயர்ந்ததன் மேற்றே உள்ளுங்காலை' என்றே உள்ளது. உயர்ந்த பரம்பொருளின் கண்களுக்கு குரங்கின் ஆசனவாய் சிவப்பினைக் காட்டலாகாது என மறுத்தார். அப்படியானால் 'கப்யாஸம்' என்ற சொல்லுக்கு நீயே விளக்கம் கொடு பார்க்கலாம் என்றார். இராமானுஜரும் கப்பியாஸம் என்பதனை கம் + பீபதி + ஆஸம் என்று பிரித்து பார்க்க வேண்டுமெனவும் 'கம்' என்றால் தண்ணீர் என்றும் பீபிதி என்றால் 'குடித்தல்' என்றும் ஆஸம் என்றால் மலர்தல் என்றும் பொருள்படும். எனவே தண்ணீரைக் குடிக்கின்ற சூரியனால் மலர்ந்த செந்தாமரை என்ற பொருள் வரும். அந்த செந்தாமரை மலர் போன்ற கண்கள் திருமாலின் கண்கள் என்ற உயர்ந்த விளக்கத்தினைக் கொடுத்தார். இது போன்று அவ்வப்பொழுது இருவருக்குமிடையே வாதங்கள் ஏற்பட்ட நிலையில், யாதவப் பிரகாசர் தம் புகழுக்கு இராமானுஜரால் இடையூறு ஏற்படுவதாகக் கருதி தன் பாடசாலையை விட்டு வெளியேற்றினார்.

பல ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு நாள் இராமானுஜர் வைணவப் பேருரை நிகழ்த்தியபோது யாதவப் பிரகாசரின் தாய் கேட்க நேர்ந்தது.

(தொடரும்)

## சங்கப் பலகை

**பங்கேற்பவர்கள்: ஆண்டாள், மீரா, வசுமதி, கோமதி, கௌரி, சித்ரா, மீனா, தீபிகா, பிரியா**

**இடம்: அடையாறு காந்தி மண்டபம்**

தோழிகள் சுமார் 4.30 அளவில் காந்தி மண்டபத்தில் கூடி, மீரா கொண்டு வந்திருந்த காஃபியைக் குடித்து, அரட்டையைத் தொடங்கினர்.

பிரியா: எவ்வளவு விரைவாக ஒரு ஆண்டு ஓடிவிட்டது. இப்போது தான் விசுவாவசு ஆண்டு வந்தது போல உள்ளது. அதற்குள் அடுத்த ஆண்டான பராபவ வந்துவிட்டது.

ஆண்டாள்: ஆமாம்பா! இந்த வருடம் வளைகுடா நாட்டில் நடக்கும் போரினால் எல்லா நாடுகளிலும் சிரமம்தான். Gas தீர்ந்துடுச்சு! Book பண்ணவே முடியலை! Atleast அடுத்த வருடமாவது அமைதியாக கடந்து போக புத்தாண்டு அன்று நாம் அனைவரும் வேண்டுவோம். ராம நவமி பானகம், நீர்மோருடன் எங்கள் வீட்டில் கடந்து சென்று விட்டது.

மீரா: ஆமாம்! எவ்வளவு குறைவாக gas use பண்ணமுடியுமோ அப்படி உபயோகிக்கிறோம். Induction stove கிடைப்பதும் கஷ்டமாக உள்ளது. அதன் விலையும் ஏறிவிட்டது. மத்திய அரசு கவலை வேண்டாம் என்றாலும் நம்மளாலே எப்படி அப்படி இருப்பது? புத்தாண்டு பாயசம், வேப்பம்பூ மாங்கா பச்சடி, வடை அவசியம் தேவைதானே!

கோமதி: இன்றைய செய்தியின்படி எல்லோரும் Piped Gas கனெக்ஷன் வசதி இருக்குமிடங்களில் மூன்று மாதத்தில் கொடுக்க வேண்டுமாம். சென்னைக்கு இன்னும் வரவில்லை. அண்ணாநகரில் குழாய் அமைப்பதாக கேள்விப்பட்டேன். நான் காற்றாலையைப் பற்றிப் படித்தேன். அது குறித்து உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன். ஜெர்மனியின் 'ஸ்கைவிண்ட்' தனது மைக்ரோ நுண்மின் காற்றாலையான என்.ஜி.யை, அமெரிக்க இல்லக் கூரைகளில் நிறுவுவதற்கு ஏற்றது என்ற சான்றிதழை இரண்டாண்டு சோதனைக்குப் பின் பெற்றுள்ளது.

1.5 மீட்டர் அகலமே உள்ள இந்தக் காற்றாலை ஆண்டுக்கு 615 கிலோ வாட் மின்சாரத்தை உற்பத்தி செய்கிறது. இந்த என்.ஜி காற்றாலை, சூரிய ஒளி இல்லாத நேரங்களிலும், புயலில் காற்றடிக்கும் போதும் சிறப்பாக செயல்படுகிறது. இதனால் சூரிய மின் பலகைகளுடன் இவற்றையும் சேர்த்து பயன்படுத்தும் போது முழுமையான ஆற்றல் வழங்க ஏதுவாக உள்ளது. ஒரு ஸ்கைவிண்ட் என்.ஜி. காற்றாலையின் விலை சுமார் 2. 9 லட்சம் ரூபாயாம்.

சித்ரா: எவ்வளவு ரூபாயாக இருந்தாலும் நம் நாட்டிற்கு தேவை குறைவுதான். நமக்குத் தான் நிறைய சூரிய ஒளி கிடைக்குதே! நான் இன்னொரு ஒளியைப் பற்றி கூறுகிறேன். உலகப்புகழ் பெற்ற ஃபுளோரென்டைன் வைரம் 100 ஆண்டுகளுக்குப் பின் கனடா வங்கியின் பெட்டகத்தில் பத்திரமாக இருப்பது தெரிய வந்துள்ளது. இது நமது நாட்டின் தெலுங்கானா மாநிலம் கோல்கொண்டா சுரங்கத்தில் வெட்டி எடுக்கப்பட்டதாகும். 137.27 காரட் எடையில் வெளிர் மஞ்சள் நிறத்தில் 126 முகங்கள் கொண்ட இரட்டை ரோஜா வடிவத்தில் பட்டை தீட்டப்பட்ட வரலாற்று சிறப்புமிக்க வைரமாகும்

பிரியா: கோஹினூர் வைரம் தான் கேள்விப்பட்டிருக்கிறோம். இது என்ன புது வைரம்?

சித்ரா: இந்த வைரம் 15–ஆம் நூற்றாண்டிலிருந்து பல ஐரோப்பிய அரச குடும்பங்களிடம் இருந்துள்ளது. இது இத்தாலியின் புளோரன்ஸ் நகரை ஆண்ட மெடிசி குடும்பத்தினரின் சொத்தாக நீண்ட காலம் இருந்தது. 1737–ல் மெடிசி குடும்பத்தின் கடைசி ஆண் வாரிசு இறந்த பின் இளவரசி மரியா தெரேசாவின் திருமணம் மூலம் ஆஸ்திரியாவின் ஹப்ஸ்பர்க் அரசகுடும்பத்துக்குச் சென்றது. முதல் உலகப் போரில் ஆஸ்திரியா – ஹங்கேரி பேரரசு சரிந்த போது, கடைசி பேரரசர் முதலாம் சார்லஸ், பேரரசி ஜிட்டா ஆபரணங்களைப் பாதுகாக்க சுவிட்சர்லாந்து அனுப்பினர்.

வசுமதி: இதுக்கு மேலே நான் சொல்றேன், சித்ரா. நீ சொல்ல, சொல்ல எனக்கு ஞாபகம் வந்துடுச்சு. இரண்டாம் உலகப் போரின் போது, ஜெர்மனியின் நாஜி படைகளிடமிருந்து தப்பி கனடாவுக்கு வந்த அரசி ஜிட்டா, இந்த வைரத்தையும், மற்ற ஆபரணங்களையும் ஒரு சிறிய சூட்கேசில் எடுத்து வந்து, வங்கி பெட்டகத்தில் வைத்து, தன் இரு மகன்களிடம் இது குறித்து கூறினார். பேரரசர் சார்லஸ் இறந்து 100 ஆண்டுகள் வரை வெளியில் சொல்லக் கூடாது என சத்தியம் வாங்கிக் கொண்டதாக கூறப்படுகிறது. தற்போது 100 ஆண்டுகள் முடிந்த நிலையில் தகவல் வெளிவந்துள்ளது.

சித்ரா: ஆமாம்பா! நூறாண்டுகள் முடிந்த நிலையில் ஹப்ஸ்பர்க் வம்ச வாரிசுகள் இத்தகவலை வெளியிட்டதுடன், போர்க்காலத்தில் அடைக்கலம் கொடுத்ததற்கு நன்றியாக, கனடா அருங்காட்சியகத்தில் வைக்க அனுமதி வழங்கியுள்ளார்கள். 19ஆம் நூற்றாண்டில் இதன் மதிப்பு சுமார் 12 கோடி ரூபாய் என வெளியிடப்பட்டுள்ளது

பிரியா: நான் சீனாவைப் பற்றி கூறுகிறேன். திபெத்தில் உருவாகும் யார்லுங் சாங்போ நதி, பிரம்மபுத்திரா என்ற பெயரில் அருணாச்சல பிரதேசம், அஸ்ஸாம் வழியாக வங்க தேசத்தை அடைந்து வங்காளவிரிகுடாவில் கலக்கிறது. சீனா இந்த நதியின் குறுக்கே, ஐந்தடுக்கு நீர் மின் நிலையங்களுடன் அணை கட்டிக் கொண்டுள்ளது. இத்திட்டத்தால் பிரம்மபுத்திரா நதியின் நீரோட்டம் பாதிக்கப்படும். அவசர காலங்களில், அதிக அளவு நீர் வெளியேற்றப்படின், நம் நாட்டின் வடகிழக்கு மாகாணங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்படும் அபாயம் உள்ளது.

ஆண்டாள்: இந்திய அரசு ஏதேனும் எதிர்ப்பு தெரிவித்துள்ளதா?

பிரியா: வார்த்தையில் கூறவில்லை. ஆனால் அதனைக் கட்டுப்படுத்த இந்திய அரசு அருணாச்சல பிரதேசத்தின் திபாங் மாவட்டத்தில், துணை நதியான திபாங் நதியின் குறுக்கே 912 அடி உயரத்தில் 2880 மெகாவாட் திறனுடைய ஒரு பெரிய நீர்மின் திட்டத்தை துவங்கி உள்ளது,

மீரா: நானும் மின் ஆலை தொடர்பா சொல்றேன். உலகின் மிகப்பெரிய சூரிய மின் உற்பத்தி ஆலை 610 ச.கி.மீ.ல் திபெத்தில் சீனா அமைத்து வருகிறது. இதன் உற்பத்தி 50 லட்சம் குடும்பங்களுக்கு மின்சாரம் வழங்கக் கூடியதாக இருக்குமாம்.

கௌரி: சரி! இன்னைக்கு என்னப்பா? இந்த topic-ஏ போய்க்கிட்டிருக்கு! நானும் படித்ததைச் சொல்றேன். சூரிய ஒளியிலிருந்து மின்சாரம் தயாரிக்கும் தெர்மோ எலக்ட்ரிக் ஜெனரேட்டர்கள் இதுவரை மிகவும் குறைந்த செயல்திறன் கொண்டவையாகவே இருந்தமையால், பயன்பாடு அதிகமில்லை. ஆனால் ரோசெஸ்டர் பல்கலை ஆராய்ச்சியாளர்கள் சமீபத்திய கண்டுபிடிப்பின் வாயிலாக இதன் திறனை 15 மடங்கு அதிகரித்துள்ளனர். அவர்கள் வழக்கமாக ஆராயப்படும் பொருட்களில் கவனம் செலுத்தாமல், அதன் மேல் தளத்தில் உள்ள உலோகத் தகடுகளிலும், வெப்ப பரிமாற்றத்திலும் கவனம் செலுத்தினர். 'பெம்டோசெகண்ட் லேசர்' தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி, டங்ஸ்டன் உலோகத்தகடை வெப்பத்தை அதிகம் உறிஞ்சும் கருப்பு உலோகமாக மாற்றினர். இது சூரிய ஒளியை ஒரு நுரைப் பஞ்சு போல் உறிஞ்சி, வெப்பமாக மாற்றும். மேலும் இந்த கருப்பு உலோகத்தின் மீது ஒரு பிளாஸ்டிக் பாதுகாப்பு உறையைப் பொருத்தி, வெப்பம் வெளியே கசிவது தடுக்கப்பட்டு, மின்சாரமாக மாற்றப்படுகிறது – இக்கண்டுபிடிப்பு தெர்மோ எலெக்டிரிக் ஜெனரேட்டர்களை வருங்கால மின்னணு சாதனங்களின் தேவைக்கேற்ப மாற்ற இயலும்.

மீனா: இன்னைக்கு சீன தினம் போல! நானும் அந்த நாட்டைப் பற்றியே சொல்றேன். இந்திய டாக்டர் துவாரகாநாத் கோட்னிசுக்கு நினைவு மண்டபம் எழுப்பி சீனா மரியாதை செய்துள்ளது. சீனா –ஜப்பான் இடையே 1937–ல் நடந்த போரின் போது, சீன போர்க்களத்தில் பணியாற்றி பலரின் உயிரைக் காப்பாற்றியவர். சீனத் தலைவர்களின் வேண்டுகோளுக்கிணங்க ஐந்து தன்னார்வல மருத்துவர்களின் குழுவை இந்தியா, சீனாவுக்கு அனுப்ப, ஒரு கட்டத்தில் கோட்னிஸ் தவிர மற்ற டாக்டர்கள் இந்தியா திரும்பி விட்டனர். மின்சாரம் இல்லாத நிலையிலும் கோட்னிஸ் அறுவை சிகிச்சைகளை செய்து ஒரு நாளில் 18 மணி நேரம் உழைத்து, 1000க்கும் மேற்பட்ட வீரர்களின் உயிரைக் காப்பாற்றினார். அவருக்கு உதவியாக இருந்த சீன நர்ஸ் குவோகிங்லான் என்பவரை 1941ல் மணந்தார். ஆனால் தனது 32வது வயதில் 1942 டிசம்பர் மாதம் 9ஆம் தேதி சீனாவின் ஹெபே மாகாணத்தின் குவோலியாங்கிலியாங் கிராமத்தில் அறுவை சிகிச்சை செய்யும் போதே மயங்கி விழுந்து உயிரிழந்தார். தலைவர் மாசேதுங் வெளியிட்ட இரங்கல் குறிப்பில் 'சீனாவின் நண்பர்' என புகழாரம் சூட்டினார். இப்போது அவரது பெயரில், அவருக்கு மரியாதை செய்யும் விதமாக சீனாவின் ஹெபே மாகாணத்தில் அவருக்கு நினைவு மண்டபத்தை அந்நாட்டு அரசு திறந்துள்ளது. மனம் திறந்து பாராட்டுவோம்.

தீபிகா: நான் நம்ம நாட்டுக்கு வரேன்பா ! ஆசியாவின் பெரிய துலிப் (Tulip) தோட்டம் ஜம்மு காஷ்மீரில் உள்ளது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதலுக்குப் பின் மூடப்பட்ட ஸ்ரீநகரில் இந்திராகாந்தி பூங்காவில் உள்ள மிகப் பெரிய துலிப் தோட்டம் பார்வையாளர்களுக்காக மார்ச் 16ஆம் தேதி திறக்கப்பட்டுள்ளது. இத்தோட்டம் மொத்தம் 75 ஏக்கரில் தால் ஏரியின் கரையில் ஜபர்வான் மலைத்தொடரின் அடிவாரத்தில் அமைந்துள்ளது. மார்ச் ஏப்ரலில் 15 லட்சத்திற்கும் அதிகமான துலிப் மலர்கள் மற்றும் 75–க்கும் மேற்பட்ட இதர மலர்கள் இங்கு பூத்து குலுங்குகின்றன. வழக்கமாக மார்ச் கடைசி வாரத்தில் திறக்கப்படும் இம்மலர்த்தோட்டம், ஜம்மு காஷ்மீரில் நிலவும் கடும் வெப்பம் காரணமாக 10 நாட்கள் முன்பாகவே இவ்வருடம் திறக்கப்பட்டுள்ளது.

வசுமதி: நான் காஷ்மீர் சென்ற சமயம் தோட்டம் மூடுவதற்கு முதல் நாள் சென்று பார்த்தேன், வரிசை, வரிசையாக பல வண்ணத்தில் துலிப் மலர்கள் பூத்துக் குலுங்கின. பல செடிகள் வாடி வதங்கியும் இருந்தன. கேட்டதற்கு சீசன் முடிந்து விட்டது என கூறினர். சரிப்பா! கடற்படையில் இணையும் போர்க்கப்பல் பற்றி சொல்றேன்.

ஆண்டாள்: I.N.S. அஞ்சதீப் தானே! உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்டது என படித்தேன். அதுக்கு மேல தெரியாதுப்பா! நீ சொல்லு!

வசுமதி: ஆமாம்க்கா! உள்நாட்டிலேயே தயாரிக்கப்பட்ட அதிநவீன நீர்மூழ்கி எதிர்ப்பு போர்க்கப்பல். 'வாட்டர்ஜெட்! உந்து விசையினால் மணிக்கு 25 மைல் வேகத்தில் செல்லும். நீர்மூழ்கி எதிர்ப்பு ராக்கெட்டுகள், இலகுரக ஏவுகணைகள் மற்றும் டார்பிடோக்கள் ஆகிய ஆயுதங்களை இக்கப்பலில் இருந்து இயக்க முடியும். கடலுக்கடியில் மறைந்திருக்கும் எதிரி கப்பல்களைக் கண்டறிய உதவும் அதிநவீன சோனார் எனும் ஆழ்கடல் உணர் கருவி இதில் பொருத்தப்பட்டுள்ளது. 2014–க்குப் பிறகு இவ்வருடம் இந்திய கடற்படையில் கப்பல் இணைப்பு நிகழ்ச்சி சென்னையில் நடக்க உள்ளது. தேதி எனக்கு இன்னும் தெரியவில்லை.

மீரா: சரிப்பா! நேரமாயிடுச்சு. அடுத்த மாதம் செம்மொழிப் பூங்காவில் சந்திக்கலாமா?

அனைவரும் ஒத்துக்கொள்ள, மகளிர் குழு கலைந்தது.

நன்றி! வணக்கம்!!

## 41-ஆம் ஆண்டு CREW-ன் பொங்கல் விழா-2026 பூவிழுந்தநல்லூர் (காட்டுமன்னார்கோயில்)

பொங்கல் விழா பூவிழுந்தநல்லூர் கிராமத்தில் சீரும் சிறப்புமாக கொண்டாடப்பட்டது. அனைவரின் போற்றுதலுக்கும், பாராட்டுக்கும் உரிய சென்னை இராதா இன்ஜினியரிங் நிறுவன தலைவர் கொடைவள்ளல் திரு. S. வெங்கடேசன் அவர்கள் அவரது துணைவியார் திருமதி. ஞானாம்பிகை வெங்கடேசன், திரு. A. முருகானந்தம் MD & Chief Scientific Officer, Affigenix Bio Solutions Pvt. Ltd., திருமதி. ராதாசெல்வி முருகானந்தம் CEO, Interlace India Pvt. Ltd., திரு. A. சிவக்குமார் Executive Director, CREW, திருமதி. பத்மாவதி சிவக்குமார் Director, CREW Pvt. Ltd., ஆகிய அனைவருக்கும் மிகச்சிறப்பான முறையில் கிராம மக்கள் மற்றும் விழாக்குழுவினரால் வரவேற்பளிக்கப்பட்டது.

15.01.2026 வியாழக்கிழமை மாலை கரகாட்டம், பொம்மலாட்டம், ஒயிலாட்டம் ஆகிய கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. 16.01.2026 வெள்ளிக்கிழமை மாட்டுப்பொங்கலன்று காலை, பூவிழுந்தநல்லூர் மற்றும் சுற்றுப்புற கிராமங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பத்திற்கும் ஒரு எவர்சில்வர் பாத்திரம் என 710 குடும்பங்களுக்கு வழங்கப்பட்டது. சுமார் 90 நபர்களுக்கு மொத்தம் 18,50,000/– ரூபாய் மதிப்புள்ள தங்கநாணயங்கள் மற்றும் 45 நபர்களுக்கு தலா 2,000/– ரூபாய் வீதம் குலுக்கல் முறையில் வழங்கப்பட்டன.

மேலும் சுற்றுவட்டாரத்திலுள்ள 10–க்கும் மேற்பட்ட கிராமங்களிலிருந்து வந்திருந்த சுமார் 15 ஆயிரம் பேருக்கு போர்வை மற்றும் அன்பளிப்பு தொகையும் வழங்கப்பட்டது. அன்று மாலை காட்டுமன்னார்குடியை சார்ந்த சரவெடி சரவணன் குழுவினரின் பல்வேறு கலை நிகழ்ச்சிகள் சிறப்பாக நடைபெற்றன.

17.01.2026, சனிக்கிழமை உழவர் திருநாளன்று காலை CREW Chairman மற்றும் அவரது துணைவியார், விளையாட்டுப் போட்டிகளை துவக்கி வைத்தார்கள். அன்று மாலை செல்வி அமிர்தா செந்தில் அவர்கள் இறைவணக்கம் பாட, திருமதி. ஞானாம்பிகை வெங்கடேசன், திருமதிகள் அருணா, திரபுரசுந்தரி, பானுமதி, விஜயலட்சுமி, உஷா மற்றும் சுபா ஆகியோர் குத்து விளக்கேற்றி பரிசளிப்பு விழாவினை துவக்கி வைத்தார்கள். ஆசிரியர் திரு. பூங்குன்றன் வரவேற்புரை ஆற்றினார்கள்.

CREW Chairman அவர்கள் தலைமையில் நடைபெற்ற 30 மேற்பட்ட விளையாட்டுப் போட்டியில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. மேலும் குலுக்கல் முறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட 53 நபர்களுக்கு மொத்தமாக 88 கிராம் தங்க காசுகள், ஒரு கைப்பேசி மற்றும் 10 பேருக்கு தலா ரூ. 2000/– பரிசாக வழங்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.

திரு. V.R. செந்தில்குமார் திரு. வே.மா. சம்பந்தன், திரு. V.R. ராமு, திருமதி சாந்தி சிவக்குமார் ஆகியோர், 40 ஆண்டுகளுக்கு மேலாக பல நலத்திட்ட உதவிகளை வழங்கி வரும் CREW Chairman அவர்களைப் பாராட்டி பேசினார்கள். நிறைவாக திரு. V.R. ஞானம் அவர்கள் நன்றியுரை வழங்கினார்.

கடந்த ஆண்டைப் போலவே இவ்வாண்டும் பொங்கல் விழாவிற்கு தேவையான முன்னேற்பாடுகளை மிகச் சிறப்பாக செய்த திரு. S. இராமகிருஷ்ணன் (CREW), திரு. R. பத்மநாபன், திரு. V.R. ஞானம் மற்றும் விழா குழுவினர் ஆகியோரின் பணிகள் மிகவும் பாராட்டத்தக்கவை. வருகை புரிந்த அனைவருக்கும் மூன்று நாட்களுக்கும் சிதம்பரம் சோமு அவரது குழுவினரால்அறுசுவை விருந்தளிக்கப்பட்டது.

CREW குடும்பத்தார் இறையருளால் எல்லா நலன்களையும் பெற்று வளமுடன் வாழ செந்திலாண்டவர் அருள்புரிய கிராம மக்கள் அனைவரும் மனமாரப் பிரார்த்திக்கிறோம்.

நிகழ்ச்சி தொகுப்பு கலைச்செல்வி பாலகுரு.



# மணமகன் / மணமகள் தேவை

**முக்கிய குறிப்பு :** எங்களுக்கு வரும் விபரங்களின் அடிப்படையில் இப்பகுதியில் வரும் விளம்பரங்கள் தொகுக்கப்படுகின்றன, கொடுக்கப்பட்டிருக்கும் தகவல்களைச் சரிபார்த்து தீர விசாரித்து முடிவுகள் எடுக்கப்பட வேண்டும் என்று வலியுறுத்துகிறோம்.

| பெயர்<br>நட்சத்திரம் | பிறந்த தேதி<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| B 1/4 செல்வி **பா. தேவதர்ஷினி**<br>ரேவதி<br>விளந்துட<br>பூர்வீகம் : பூதாமூர் – விருத்தாசலம்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன். | 09.06.99<br>160 cm | M.Sc. (Maths)<br>B.Ed.,<br>TET | | திரு. கோ. பாலகிருஷ்ணன்,<br>5/10, வள்ளலார் தெரு,<br>பூந்தோட்டம், பூதாமூர்,<br>விருத்தாசலம் – 606 001.<br>Cell: 94879 49880, 70104 51021 |
| B 2/4 செல்வி **A.S. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>ஆலந்துட<br>பூர்வீகம் : நன்னிலம் அந்தணப்பேட்டை | 4.8.99<br>161 cm | B.Arch., | Architect,<br>CASA Grand<br>Chennai<br>Rs. 4 Lakhs/PA | திரு. A. ஸ்ரீதர்,<br>D.No. F2, III Block, No. 1/429,<br>4th Street, Karthikeyapuram,<br>Madipakkam, Chennai - 600 091.<br>Cell : 70105 99385, 94441 91362,<br>98949 45741 |
| B 3/4 செல்வி **A. Swetha**<br>சதயம்<br>பல்லவராய<br>பூர்வீகம் : மணிக்கிராமம், மயிலாடுதுறை<br>விருப்பம் : சென்னையில் பணியில் உள்ள வரன் | 27.1.2001<br>168 cm | B.Com.,<br>M.B.A., | Formerly at IBM<br>Pursuing New<br>Career | திரு. வை. அன்பழகன்,<br>மனை எண். 75,<br>சுதர்சன் நகர் விரிவாக்கம்,<br>காஞ்சிபுரம் – 631 501.<br>Cell: 98427 37409 |
| B 4/4 செல்வி<br>**Dr. V. Priyadharshini**<br>Uthradam 4th Patham<br>Koodaluda<br>பூர்வீகம் : MA. Melvanniyur, Chidambaram<br>விருப்பம் : Middle / Upper Middle Class Caring, Supportive and Family oriented, Well educated, preferably Doctor. | Jan. 1995<br>5' - 2" | Internal<br>Medicine<br>M.D.,<br>. | Sr. Resident<br>Doctor at a<br>Private Medical<br>College, Chennai<br>Rs. 12-18 Lakhs/PA | திரு. J. Venugopalan,<br>B-703, Solitaire Appartments,<br>Mount Poonamallee High Road,<br>Porur, Chennai - 600 116<br>Cell : 99404 77263, 98949 28283<br>E-mail : venugopalan_ j@yahoo.com |
| B 5/4 செல்வி **S. சௌமியா**<br>திருவாதிரை 1ம் பாதம்<br>வங்காரமுட<br>பூர்வீகம் : தர்மநல்லூர்<br>விருப்பம் : படித்த பணியில் உள்ள வரன். | 15.8.2001<br>165 cm | B.Sc. (Agri)<br>MBA | Relationship Manager<br>ICICI Bank Ltd.,<br>Sethiyathope,<br>Cuddalore<br>Rs. 3,60,000/PA | திரு. V. சபேசன் பிள்ளை,<br>கிழக்கு தெரு, தர்மநல்லூர் (அஞ்சல்)<br>கம்மாபுரம் (வழி), விருத்தாசலம் (வட்டம்)<br>கடலூர் மாவட்டம் – 606 103.<br>Cell: 94864 32890, 80122 26557 |
| B 6/4 செல்வி **M. தனலட்சுமி**<br>உத்திரம் 4ம் பாதம்<br>பழுவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : சமபடிப்பு | 07.05.98<br>154 cm | B.Tech<br>(CS) | Software Professional<br>EPSILON,<br>Bangalore<br>Rs. 12 Lakhs/PA | திரு. K. மணிகண்டன்,<br>G1, Ashok Manor, Ruby Builders,<br>5/2, Kalamegam Street,<br>East Tambaram, Chennai - 600 59.<br>Cell : 9447 11045, 99416 20355 |
| B 74 செல்வி **Dr. Saranya .V**<br>சதயம்<br>காளிங்கராய<br>பூர்வீகம் : அருகேரி (கடலூர் மாவட்டம்)<br>விருப்பம் : 1995 – 1998 ஜூலைக்குள் பிறந்த வரன்<br>. | 10.08.98<br>157cm | Ph.D<br>(Physics) | Post Doctoral Fellow<br>(SRM Univerity<br>Chennai)<br>Rs. 50,000/PM | திரு. கோ. வெங்கடாசலம் பிள்ளை,<br>202/1, மெயின் ரோடு, அருகேரி,<br>கொத்தட்டை (அஞ்சல்),<br>திட்டக்குடி (தாலுகா),<br>கடலூர் மாவட்டம் – 606 111.<br>Cell : 94868 74446, 97860 56161 |
| B 8/4 செல்வி **R. சுபஸ்ரீ**<br>அஸ்வினி<br>கொங்கராய<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : நல்ல பணியில் உள்ள வரன் | 09.09.98<br>160 cm | M.E.<br>(Ph.D) | Asst. Professor (IT)<br>Rajalakshmi<br>Engineering<br>College, Chennai | திரு. P.G. ராமமூர்த்தி,<br>55/18, வள்ளலார் தெரு,<br>பெண்ணாடம் – 606 105.<br>கடலூர் மாவட்டம்<br>Cell: 99761 77910, 91596 54000 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| G 1/4 செல்வன் **S. மதனகோபால்**<br>உத்திராடம்<br>எரையுட<br>பூர்வீகம் : சத்தியவாடி | 13.7.95<br>172 cm | B.E.<br>(ECE) | Freelancer<br>(Technical Trainer<br>at Eng. Colleges)<br>Avg. Rs. 50,000/PM | திரு. வே. செல்வகணபதி,<br>148/2, 3rd Cross Street,<br>கல்லூரி நகர், விருத்தாசலம்,<br>கடலூர் DT.<br>Cell : 97918 69600 |
| G 2/4 செல்வன் **இரா. சீத்தாராமன்**<br>பூரட்டாதி<br>இளமாங்குட<br>பூர்வீகம் : இடைக்கட்டு | 29.09.93<br>170 cm | D.M.E.<br>(Tool & Die) | Dhanam Infra<br>Chennai<br>Rs.70,000/PM | திரு. சோ. இராமகிருஷ்ணன் பிள்ளை,<br>லட்சுமி ஸ்டோர்,<br>இடைக்கட்டு, உட்கோட்டை அஞ்சல்,<br>உடையார் பாளையம் வட்டம்,<br>அரியலூர் மாவட்டம் – 612 905.<br>Cell : 96298 89261,<br>96298 89262 (Whatsapp) |
| G 3/4 செல்வன் **K. நவீன்**<br>திருவாதிரை<br>சாத்தனுட<br>பூர்வீகம் : ஆக்கூர், மயிலாடுதுறை<br>விருப்பம் : பணியில் உள்ள பெண், வங்கி / IT | 24.09.97<br>185cm | B.E. (Mech)<br>MBA<br>(HR and<br>Finance) | Karur Vysya Bank,<br>Branch Executive<br>Teynampet, Chennai<br>Rs. 4.5 Lakhs/PA | திரு. S. கல்யாணசுந்தரம்,<br>4/67, சிறப்புலி நாயனார் வீதி,<br>ஆக்கூர் PO, தரங்கம்பாடி TK,<br>மயிலாடுதுறை DT. – 609 301.<br>Cell : 94891 86848<br>E-mail : revranji@gmail.com |
| G 4/4 செல்வன் **S.R. பாலாஜி**<br>ரோகிணி<br>முதனுட<br>பூர்வீகம் : கோட்டவம், காட்டுமன்னார்குடி | 30.01.96 | B.Tech.,<br>MBA., | Analyst -<br>Accenture, Chennai<br>Rs. 9 Lakhs/PA | திரு. S. ராமதாஸ்,<br>17, காமராஜ் வீதி,<br>தாகூர் நகர், இலாசுப்பேட்டை,<br>புதுச்சேரி – 605 008.<br>Cell : 94425 80571, 86108 73478 |
| G 5/4 செல்வன் **G. அரவிந்த்**<br>கிருத்திகை<br>ஆலச்சிகுட<br>பூர்வீகம் : கொத்தவாசல்/பெரிய கோட்டகம்<br>விருப்பம் : சமபடிப்பு உள்ள குடும்பபாங்கான, வேலையில் உள்ள / வேலையில் இல்லாத வரன். | 18.8.95<br>183 cm | B.Tech.<br>(MEC) | Poclain Hydraulias<br>Pvt. Ltd.,<br>Puducherry<br>Senior Engineer | திரு. D. ஞானசேகரன்,<br>85F, பிள்ளையார் கோவில் தெரு,<br>அங்காளம்மன் நகர்,<br>முத்தியால்பேட்டை,<br>புதுச்சேரி – 605 003.<br>Cell : 88381 52755, 94863 67447,<br>88707 38071, 99445 29799 |
| G 6/4 செல்வன் **S. அருண்குமார்**<br>உத்திராடம்<br>சாத்தனுட<br>பூர்வீகம் : திருவிசநல்லூர்<br>விருப்பம் : இணையான படிப்பு | 27.7.99<br>5.6' | B.E.<br>(CSE) | Own IT<br>Start up | திரு. R. சரவணன்,<br>1E, ஸ்ரீ மகாலிங்கம் நகர்,<br>திருவிடைமருதூர் – 612 104.<br>Cell : 98947 51355, 73737 32315 |
| G 7/4 செல்வன் **மு. வேலவன்**<br>திருவாதிரை<br>வளதரிய<br>பூர்வீகம் : செந்துறை | 30.06.92<br>5' - 8" | B.Com.,<br>MBA | Accountant at<br>Peacock Pvt. Ltd.,<br>Coimbatore<br>Rs. 40,000/PM | திரு. த. முருகானந்தம் பிள்ளை,<br>108C & D, முத்து நகர்,<br>உடையார்பாளையம் மெயின் ரோடு,<br>செந்துறை,<br>அரியலூர் (Dt)–621 714<br>Cell : 94436 48224, 96592 22103 |
| G 8/4 செல்வன் **S. தில்லைபரத்ராஜ்**<br>மூலம்<br>எருக்கலுட<br>பூர்வீகம் : திருவானைக்கோவில்–திருச்சி<br>விருப்பம் : B.E., B.Tech., MCA., MBA., | 21.11.98<br>175 cm | B.Tech (EEE)<br>MBA | Federal Bank<br>Rs. 7 Lks/PA | திரு. T. சண்முகம்,<br>96/60, கீழத் தெரு,<br>கீழகொண்டையம்பேட்டை,<br>திருவானைக்கோவில்,<br>திருச்சி – 620 005.<br>Cell : 80128 90496, 99443 12138 |

| பெயர் நட்சத்திரம் | வயது உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 9/4** செல்வன் **M. ஜீவானந்தன்**<br>ரேவதி<br>கொத்தனுடை<br>பூர்வீகம் : கொத்தட்டை | 23.12.93<br>5' - 5" | B.E.<br>(Mech) | Barga India<br>Pvt. Ltd.,<br>Chennai<br>Rs. 9 Lks / PA | திரு. வி. முத்துமாணிக்கம் (லேட்),<br>1-52, நடுத் தெரு,<br>கொத்தட்டை அஞ்சல்,<br>திட்டக்குடி வட்டம்,<br>கடலூர் மாவட்டம்<br>Cell : 87603 28544, 96889 51044 |
| **G 10/4** செல்வன் **K. முத்துகுமரன்**<br>பூரம் 4ம் பாதம்<br>முனதரிய<br>பூர்வீகம் : சிதம்பரம்<br>விருப்பம் : சமபடிப்பு, பணியில் உள்ள வரன் | 13.08.99<br>172 cm | B.E.,<br>(Mechanical) | Senior Quality<br>Assurance Engineer<br>Banyan Software<br>Chennai<br>Rs. 9 Lakhs / PA | திரு. A. குற்றாலநாதன்,<br>73, தங்கராஜ் நகர்,<br>3வது தெரு, பீர்க்கங்கரணை,<br>பெருங்களத்தூர், சென்னை – 63.<br>Cell : 94445 89175, 94459 46960,<br>99432 65363 |
| **G 11/4** செல்வன் **Pradeep Balasunramanian**<br>Baranai 2 Patham<br>Vilvaraya<br>பூர்வீகம் : Poompuhar (Dharmakulam) | 21.07.95<br>184 cm | B.E. (ECE) | Infosys, Chennai<br>Technology Lead<br>Rs. 16LPA | திரு. S. Balasubramanian,<br>No.3, Venkateswara Nagar,<br>Thenpathy, Sirkali - 609 111.<br>Cell : 70109 73770, 94880 04523 |
| **G 12/4** செல்வன் **சி. சிவானந்தம்**<br>உத்திரம் 4ம் பாதம்<br>முள்ளுட<br>பூர்வீகம் : வரிச்சிக்குடி, காரைக்கால்<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 21.06.99<br>178 cm | B.Tech. (EEE)<br>M.Tech. (NIS) | Network Engineer<br>(RAN) LMJ<br>Innovations,<br>Amentum<br>Bengaluru | திரு. குமார் (எ) சிவசிதம்பரம்,<br>1, பங்களா தெரு, தேவானூர் சாலை,<br>வரிச்சிக்குடி,<br>காரைக்கால் மாவட்டம்<br>Cell : 97873 10010, 91509 16765 |
| **G 13/4** செல்வன் **K. கோமதி சங்கரன்**<br>பூராடம்<br>மருங்குடை<br>பூர்வீகம் : மதுரை<br>விருப்பம் : நன்கு படித்து வேலை பார்க்கும் பெண் தேவை | 29.9.98<br>181 cm | B.Sc. (CS) | Infosys (Bangalore)<br>Rs. 6.5 Lakhs | திரு. V. கண்ணன்,<br>42/2, லெட்சுமி பவன்,<br>சந்தான நகர் மெயின் ரோடு,<br>அழகப்பன் நகர், மதுரை – 3.<br>Cell : 86088 90950 |
| **G 14/4** செல்வன் **V. வித்யா சாகர்**<br>ரோகிணி<br>சேவுட<br>பூர்வீகம் : பெண்ணாடம்<br>விருப்பம் : நல்ல குணமுள்ள படித்த வரன் | 12.11.92<br>175 cm | B.Tech (ECE) | Data Matics<br>Pondy | திரு. T. Vivekanandan,<br>22, விநாயகர் தெரு,<br>திருவேணி நகர் (கிழக்கு),<br>வி. மணவெளி,<br>அரும்பார்த்தபுரம் (Post),<br>பாண்டி – 605 110.<br>Cell : 97876 89798 |
| **G 15/4** செல்வன் **V. கார்த்திபன்**<br>அவிட்டம்<br>அதுக்கனுட<br>பூர்வீகம் : கருவாழக்கரை, மேலையூர் | 18.11.96<br>175 cm | B.E.<br>Computer<br>Science and<br>Engieering | Senior Software<br>Engineer,<br>Hexaware<br>Technologies,<br>Chennai | திரு. V. வெங்கடாசலம்,<br>144, வண்டிக்கார தெரு,<br>லட்சுமி நகர்,<br>சித்தர்காடு,<br>மயிலாடுதுறை – 609 003.<br>Cell : 94431 09443, 94877 09443 |
| **G 16/4** செல்வன் **G. கீர்த்தி நாராயணன்**<br>அவிட்டம் 1ம் பாதம்<br>அத்துட<br>பூர்வீகம் : பெத்தநாயக்கன் பாளையம் | 12.7.98 | B.E., MBA | பெங்களூர்<br>Rs. 30,000/PM | திரு. K. கோவிந்தசாமி,<br>க.எண். 111,<br>மேற்கு வெள்ளாளர் தெரு,<br>பெத்தநாயக்கன் பாளையம் (Tk),<br>சேலம் – 636 109.<br>Cell : 94429 92696, 94458 76596 |

| பெயர்<br>நட்சத்திரம் | வயது<br>உயரம் | படிப்பு | வேலை | முகவரி |
|---|---|---|---|---|
| **G 17/4** செல்வன் **வஸந்த் அரசு**<br>கார்த்திகை<br>சேக்கிழார்<br>பூர்வீகம் : ஈரோடு<br>விருப்பம் : பணியில் உள்ள வரன் | 17.1.2000<br>5' - 8" | B.E.<br>Mechnical<br>Eng. | Software<br>Professional<br>Package<br>Specialist, IBM<br>India Pvt. Ltd.,<br>Coimbatore<br>Rs. 1,075,000/PA | திரு. C. மதன அரசு,<br>31, Sri Iswarya Nagar,<br>K.G. Chavadi Via Madukarai,<br>Coimbatore - 641 105.<br>Cell : **99427 52154, 91235 35119** |
| **G 18/4** செல்வன் **M. Rajeshkumar**<br>Suvaathi<br>Paakuda<br>பூர்வீகம் : Kuthalam (Mayiladuthurai Dist) | 22.09.90<br>165 cm | B.Sc. MCA | Access Health<br>Care Pvt. Ltd.,<br>Senior Client<br>Partner, Ambattur,<br>Chennai<br>Rs. 50,000/PM | திரு. C. Mohan,<br>27, Panchukara Chetty Street,<br>Kuthalam,<br>Mayiladuthurai Dist - 609 801.<br>Cell : **87548 60982 / 87781 05413** |
| **G 19/4** செல்வன் **ராஜாராமன்**<br>அனுஷம்<br>கடமுட<br>பூர்வீகம் : மழவராயநல்லூர், சேத்தியாத்தோப்பு<br>விருப்பம் : குடும்பத்திற்கு ஏற்ற வரன் | **6.12.99**<br>185 cm | MCA | கரூர் வைஸ்யா<br>பேங்க் (KVB),<br>Chidambaram,<br>Rs. 4 Lakhs/PA | திரு. ரா. சௌந்தரராஜன்,<br>26/1, Sriram Nagar,<br>Chidambaram **– 608 001.**<br>Cell : **96299 81505, 90950 80050** |
| **G 20/4** செல்வன் **சு. இராஜரத்தினம்**<br>விசாகம் 4ம் பாகம்<br>தென்னதரிய<br>பூர்வீகம் : கீழப்புலியூர்<br>விருப்பம் : டிகிரி முடித்த பணியில் உள்ள பெண்.<br>குறிப்பு : ராகு, கேது தோஷம் உள்ள வரன் தேவை | 20.4.2000 | B.E.<br>(Civil) | சிங்கப்பூரில்<br>வேலை<br>சம்பளம்<br>**1,00,000**<br>மாதம் | திரு. R. சுந்தர்ராஜ்,<br>1/400, தெற்கு தெரு,<br>கீழப்புலியூர் (PO),<br>குன்னம் (TK),<br>பெரம்பலூர் (DT) **– 621 115.**<br>Cell : **90476 20827** |

## * முக்கிய அறிவிப்பு *

கார்காத்தார் ஒப்புரவுக்கு அனுப்பப்படும் சங்க செய்திகள், கட்டுரைகள், ஒவ்வொரு ஆங்கில மாதத்தின் 25–ஆம் தேதிக்குள் அனுப்பப்பட வேண்டும். அதன் பின்னர் பெறப்படும் செய்திகள் அடுத்து வரும் இதழ்களில் பிரசுரிக்கப்படும். சங்க நிகழ்வுகள் பற்றிய செய்திகள் அனுப்பும் போது கட்டாயமாக சங்கத்தின் தலைவர் / செயலாளரின் கையொப்பம் மற்றும் சங்க முத்திரையிட்டு அனுப்ப வேண்டும்.

- செய்திகள், கட்டுரைகள், கட்டாயமாக 1½ பக்கம் முதல் 2 பக்கங்களுக்கு மிகாமல் இருக்க வேண்டும். இதற்கு மேல் வரும் செய்திகள், கட்டுரைகள் மற்றும் கதைகளை குறைக்கவோ அல்லது நிராகரிக்கவோ நிர்வாகத்திற்கு உரிமை உண்டு.
- சங்க நிகழ்வுகள், விழாக்கள் பற்றிய செய்திகளை 3 முதல் 4 பாராக்கள் வரை மட்டுமே எழுதி அனுப்பபட வேண்டும். மேலும் செய்திகள் சுருக்கமாகவும், மிகவும் தெளிவாகவும், முக்கிய கருத்துகளை உள்ளடக்கியதாகவும், பெயர்களை தவிர்த்தும், பொறுப்பாளர்களின் கையொப்பத்துடனும் அனுப்பப்பட வேண்டும்.
- E-mail–ல் செய்திகள் அனுப்புவது தவிர்க்கப்பட வேண்டும்.
- **மணியார்டர், காசோலை, DDகள் அனைத்தும் கார்காத்தார் ஒப்புரவு என்ற பெயரில் அனுப்பபட வேண்டும்.**

**Online fund Transfer** Account Number : 130801000022149
IFSC Code : IOBA0001308
Account Name : M/S Karkathar Oppuravu
Bank Name and Branch : Indian Overseas Bank/ Choolai Medu - Chennai.

**இந்த QR CODE/UPI யை SCAN செய்தும் பணம் செலுத்தலாம்**

**தொகை செலுத்தியபின்** Name, Amount, subscription - ADVT Details, Date of Payment, Transaction ID/UTR Number, Communication Address, Pincode (must), Phone / WhatsApp Number, Screenshot of Payment / Google form (https://forms.gle/rXkimYPnPMCJwtRi8) **இந்த விவரங்களை "கார்காத்தார் ஒப்புரவு"** Whatsapp No. **8248449204க்கு அனுப்பி வைத்தால் மட்டுமே தங்களது விவரங்கள்** update **செய்யப்படும் என்பதை தெரிவித்துக் கொள்கிறோம்.**

- செய்திகள் பிரசுரிப்பது குறித்து தொலைபேசி / கடித போக்குவரத்து இயலாது.

அனைத்து தபால்களையும் **கார்காத்தார் ஒப்புரவு,**
*எண். 64, சௌராஷ்டிரா நகர், 10வது தெரு, சூளைமேடு, சென்னை - 600 094.*
*என்ற முகவரிக்கு மட்டுமே அனுப்ப வேண்டும்.*

*– கார்காத்தார் ஒப்புரவு*



# சிறுவர் பகுதி



தயாரிப்பு **தஞ்சை தியாகு**

அலைபேசி: 94437 00375

Email: thiagu1943@gmail.com

தாயைவிடச் சிறந்ததொரு கோயிலை இந்தப்பூவுலகுமுழுவதும் தேடினாலும் தென்படாது.
மனிதன் வழிபாட்டிற்கு இயற்கை அமைத்திருக்கும் கோயில் அவனுடைய தாய்தான். – அவ்வையார்

**('V' for Victory என்றால் வெற்றி )**



உலகமே போற்றும் ஒரு ராஜதந்திரி, சிறந்த அரசியல்வாதி, பேச்சாளர். எழுத்தாளர், மூன்று முறை மாரடைப்பையும், எட்டு தடவை நிமோனியா காய்ச்சலையும், பல விபத்துக்களையும் தாங்கிக்கொண்டு 90 ஆண்டுகள் உயிர் வாழ்ந்த பிரிட்டிஷ் பிரதமர் வின்ஸ்டன் சர்ச்சில் அவர்கள். சாதுர்யமாகப் பேசுவதில் வல்லவர். 1946ஆம் ஆண்டு அமெரிக்காவின் வெஸ்ட் மினிஸ்டர் கல்லூரியில் ஆற்றிய சொற்பொழிவின்போது சோவியத்

யூனியனின் ஆதிக்கத்தைக் குறிப்பிட்டபோது ஐரோப்பாக்கண்டத்தின் குறுக்கே இரும்புத்திரை இறங்கிவிட்டது என்று கூறினார். அன்று சர்ச்சிலிடமிருந்து தோன்றிய இரும்புத்திரை எனும்சொல் இன்றும் வழக்கில் உள்ளது. V என்ற ஆங்கில எழுத்தைக்காட்டி இரண்டாவது உலகப்போரில் வெற்றியுடன் திரும்பிய பெருமை சர்ச்சிலையேசேரும். முப்பதுக்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ள சர்ச்சிலுக்கு ஸ்வீடன் அரசு இலக்கியத்தில் நோபல் பரிசு அளித்து கௌரவப் படுத்தியது. 150க்கும் மேற்பட்ட விருதுகளையும்,பதக்கங்களையும், கௌரவப் பட்டங்களையும் பெற்றவர் இவர் எனும்போது வியப்பாக இருக்கிறதல்லவா ?

**நீங்கள் தனித்திருக்கலாமே!**

சிரிப்பு ஒரு மருந்து மாதிரி .அதுக்குக் குணமாக்கற சக்தி உண்டு.தமாஷ் படமா பாருங்க.நீங்க ரொம்ப ரசிச்ச ஜோக்கை மறுபடி நினைச்சுப்பாருங்க.சிரிப்பு பொத்துகிட்டு வரும். நல்லா வாய்விட்டுச் சிரியுங்க. குட்டிப் பசங்க கூட விளையாட்டுல கலந்துக்குங்க. சின்ன வயசு நினைவு எல்லாம் வரும். ரொம்ப ஜாலியா இருக்கும்.எதையெல்லாம் நினைத்து சந்தோஷப் படலாம் என்பதை விட்டு விட்டு எதையெல்லாம் நினைத்துக் கஷ்டப் படலாம் என்று தேடித்தேடி, பூதக்கண்ணாடிவைத்துப் பார்க்கும் நபர்கள்நிறையவே இருக்கின்றார்கள்! நீங்கள் தனித்திருக்கலாமே!

**மேலும் தெரிந்துகொள்வோம்!**

1) புற்றுநோயைக் குணப்படுத்த பயன்படுத்தப்படும் தனிமத்தின் பெயர் ன்ன ?
2) உலகிலேயே அதிக அளவு ஊட்டம் தரும் ஒரு செல் உயிரி பெயர் என்ன ?
3) கலிங்கா பரிசு முதன்முதலாக எந்த ஆண்டு வழங்கப்பட்டது ?
4) உலகின் மிகப் பெரிய பூ வகை எது ?
5) மென்பொருள் மொழியை உருவாக்கியவர் யார் ?
6) மின்சாரக் கோளாரினால் ஏற்படும் தீயை அணைக்கப் பயன்படும் இரசாயனப்பொருள் என்ன ?
7) இரத்த வெள்ளையணுக்கள் உடலுள் எங்கு உற்பத்தியாகின்றன ?
8) எந்த வெப்ப நிலையில் தண்ணீரின் அடர்வு அதிகமாக இருக்கும் ?
9) எலக்ட்ரான் எனும் அடிப்படைத்துகளைக் கண்டுபிடித்தவர் யார் ?



**கற்றில னாயினும் கேட்க அஃதொருவற்கு**
**ஒற்கத்தின் ஊற்றாந் துணை.**

நூல்களைக் கற்கவில்லையாயினும் கற்றறிந்தவரிடம் கேட்டறிய வேண்டும்.அஃது ஒருவனுக்கு வாழ்க்கையில் தளர்ச்சி வந்தபோது ஊன்றுகோல்போல் உதவும்.



## சிரித்து மகிழ்வோம்!

சிரிப்பின் இன்றியமையாமையைக் கூறவந்த வள்ளுவர்

நகல் வல்லர் அல்லார்க்கு மாயிரு ஞாலம்

பகலும்பாற் பட்டன்று இருள்.

பிறரோடு பழகி சிரிக்கத் தெரியாதவர்களுக்கு இந்த உலகத்தில் பகற்பொழுதும் இருள்பொழுதும் ஒன்றே. இவர்களுக்கு வாழ்வின் பாதை தெரியாது.வேறுபாடே இல்லை என்றும்,

இடுக்கண் வருங்கால் நகுக அதனை

அடுத்தூர்வது அஃதொப்பது இல்.

துன்பம் வரும்போது சிரித்திடுங்கள். அந்தச்சிரிப்புபோல அந்தத் துன்பத்தை வெல்லக்கூடிய ஆற்றல் தருவது வேறு எதுவும் இல்லை என்பதாகவும் குறிப்பிடுகின்றார்மேலும் மனம் நிறைந்த மகிழ்ச்சியோடு வாழும்போது நமது மனமும் உடலும் சிறப்பாக இயங்குகிறது. மற்றவர் நம்மைப்பார்த்து சிரிக்கும்படி நமது செயல்கள் அமையக்கூடாது.நம்மோடு சேர்ந்து சிரிப்பது மட்டும் இல்லாமல் நமது தவறுகளைச் சுட்டிக்காட்டித் திருத்திக்கொள்ளச் செய்வதுவும் நமது நண்பர்களே! என்பதாக திருவள்ளுவப் பெருந்தகை கூறுகின்றார்.

நகுதற் பொருட்டன்று நட்டல் மிகுதிக்கண்

மேற்சென்று இடித்தற் பொருட்டு.

பிறர் செயல்கண்டு நம்மனம் மகிழும்போது முகத்தில் வருவது புன் சிரிப்பு.நம்மைவிட எளியவர்களை எள்ளி நகைப்பது எளனச் சிரிப்பு.திமிர் பிடித்தால் வருவது ஆணவச் சிரிப்பு.பிறர் அறியாமல் தான் செய்த ஒரு செயல் தன் முன்னால் பேசப்படும் போது வருவது நமுட்டுச் சிரிப்பு.தானும்மகிழ்ந்து மற்றவர்ளையும்மகிழவைப்பது மலர்ச் சிரிப்பு. இம் மலர்ச் சிரிப்பில் மலர்ந்து மகிழ்வோம்.

## விடுகதைகள்



1.நடக்கமுடியாதவன்,நடப்பவனுக்கு வழிகாட்டுவான்.

2.அறைகள் அறுநூறு.அத்தனையும் ஒரே அளவு.

3.கால்கள் நான்கு,கண்கள் ஆயிரம்,இமை மூடாது.அது என்ன ?

4.அண்ணன் தம்பி இரண்டு பேர் ,அவரைச்சுற்றி பனிரெண்டுபேர்

5.வெள்ளை பிள்ளையார்கோயிலுக்கு பூட்டும் இல்லை,கதவும் இல்லை.

6.அடுக்கடுக்காய் இருக்கும் ராணி,அழகழகாய் இருக்கும் ராணிஅது எந்த ராணி ?

7.உதைக்கத் தெரிந்தவனுக்கு உழைக்கவும் தெரியும்.அவன் யார் ?

8.பார்க்க அழகானவன் ,பாம்புக்கு எதிரி. அவன் யார் ?

9.கை பட்டதும் சிணுங்குவான் ,கதவு திறந்ததும் அடங்குவான் .அவன் யார் ?

10.தோலை உரித்தால் அழமாட்டான். தோலை உரித்தவனை அழவைப்பான், இவன் யார் ?

11.அனலில் பிறந்தவன் ஆகாயத்தில் பறக்கிறான்.இவன் யார் ?

12.அள்ளக் குறையாது.குடிக்க உதவாது. அது என்ன ?

13.ஒற்றைக்கண் சுப்பனுக்குத் தலைக்கணம் அதிகம்.அவன் யார் ?

14.கொடுக்க முடியும் எடுக்க முடியாது.அது என்ன ?

15.இவர் கைகள் இணைந்தால் ஒரு தலை உருளும் .இவர் யார் ?

16.கூடவே வருவான்.பேசவே மாட்டான் .இவன் யார் ?

17.தண்ணீர் இல்லாமல் வளரும் தலையில் மட்டும் படரும்.அது என்ன ?

18.தாழ்ப்பாள் இல்லாத கதவு.தானாக மூடித்திறக்கும் கதவு.அது என்ன ?

## தோல்வி, வெற்றி நிரந்தரமானவையல்ல!

இன்றைய சூழலில் இளைஞர்கள் கல்வி ,திருமணம் போன்ற விஷயங்களில் தோல்வியடைந்தால் தற்கொலை, விவாகரத்து போன்ற முடிவுகளுக்கு உடன் வந்து விடுகின்றனர்.இவற்றிற்கெல்லாம் காரணம் தோல்வியை ஏற்றுக்கொள்ளத் தயங்குவது. பொறுமை, சகிப்புத்தன்மை, விட்டுக்கொடுக்கும் மனப்பான்மை ஆகியவை இல்லாததுதான்.இவற்றிற்கெல்லாம் யார் காரணம்? எதுவுமே அவசரமாக மாறிவிட்ட நிலையில்,மனைவி/கணவனை,குழந்தையை சந்திக்க நேரம் கிடைக்காத நிலையில் ,அவசரமாக ஓடும் நாம் குழந்தைகளுக்கு பொறுமையை எப்போது சொல்லிக்கொடுக்கின்றோம்? இவர்கள்தானே எதிர்கால இளைஞர்களாகின்றனர்!இதுநேரத்தில் இளைஞர்களின் சிந்தனைக்குச் சில செய்திகளை முன்வைக்கக் கடமைப்பட்டுள்ளேன். வெற்றி பெற்ற அறிவியலாளர்கள்,

தொழிலதிபர்கள்,வாழ்க்கை வரலாற்றை பாருங்கள் . அவர்கள் எவ்வாறு போராடி முன்னுக்கு வந்துள்ளனர் என்பது தெரியும்.பிறக்கும்போதே பெயருடனும்,புகழுடனும் பிறந்தவர்கள் ஒரு சிலரே. தனது விடா முயற்சியாலும், நம்பிக்கையாலும்,திறனாலும் அதனை அடைந்தவர்களோ பலர். அறிவியல் வித்தகராம் தாமஸ் ஆல்வா எடிசன் ஆயிரக்கணக்கான கண்டுபிடிப்புகள் நிகழ்த்தினார்.மின் விளக்கின் டங்ஸ்டன் இழையைக் கண்டுபிடிக்க 10,000 முறைக்கு மேல் சோதனைகள்நிகழ்த்தி இறுதியில் வெற்றிபெற்றார்.இடையியிலேயே தன் முயற்சியைக் கைவிட்டிருத்திருந்தால் நாம் இன்று மின் விளக்கு வெளிச்சத்தில் இருக்க முடியுமா ?இவ்வளவு கண்டுபிடிப்புகளுக்கும் அடிப்படை என்னவென்று அவரைக்கேட்டபோது அறிவாற்றல் ஒரு சதவிகிதம்,உழைப்பும் விடாமுயற்சியும் 99 சதவிகிதம் என்று கூறினார்.

தொழிலதிபர் டாடா தனது தொழில் வெற்றிக்கான காரணத்தைப்பற்றிக்கூறும்போது வெற்றி மீது வெற்றிகிடைப்பதைவிட ஒரு தோல்வியிலிருந்து வெற்றிகிடைத்தால் அதில் கிடைக்கும் மகிழ்வு அதிகமாக இருக்கும் என்றார்.தோல்வியடைந்தால் அதன் காரணத்தை அறிய எளிதாக இருக்கும்.அதை நீக்குவதில் முனைப்பு இருக்கும்,குறிப்பாக தடை தாண்ட ஒரு ஊக்கம் இருக்கும் என்றார்.. ஒரு மருந்திற்கு சால்வர்சான் 666 என்று பெயர்.காரணம் அம்மருந்து தயாரிக்கும் முயற்சியில் 665 முறை ஈடுபட்டு அது தோல்வியில் முடிந்தது .666வது முயற்சியில்தான் வெற்றிபெற்று அம்மருந்து தயாரிக்கப்பட்டதால்அதற்கு அந்த பெயர் நிலைத்துவிட்டது.

தொடர்தோல்விகளால்மனம்உடைந்தஸ்காட்லாந்துமன்னன்ராபர்ட்புரூஸ்குகைகளில்தங்கிஇருந்தான். அப்போது சிலந்தி ஒன்று வலைபின்னுவதைப் பார்த்தான். வலையைப்பின்னும் போது சிலந்தி தவறி விழுந்தது .ஏழெட்டுமுறை கீழே விழுந்தும் மனந்தளராத சிலந்தி இறுதியாக வலையைப் பின்னிமுடித்தது.இதைப்பார்த்த ராபர்ட் புரூஸ் .ஒரு சிலந்தியே தோல்வியால் தளராதபோது மனிதனாகிய நான் ஏன் முயற்சியைக்கைவிடவேண்டும் என்று நினைத்து மீண்டும் எதிரியைப்போரிட்டு வெற்றிகண்டான். தோல்வியைக்கண்டு துவளக்கூடாது. தோல்விக்கான காரணத்தை ஆராய்ந்தாலே நாம் வெற்றியை அடைய எளிதாக இருக்கும் .இன்றைய இளைஞர்கள் மனநிலை பொதுவாக முன்பே குறிப்பிட்டதுபோல அபார வெற்றி பெற வேண்டும் என எண்ணும் அளவிற்கு ,தோல்வியை ஏற்கத்தயங்கலாகாது. இவர்களின் மனமாற்றத்திற்கு பெரியவர்கள்தான் முன்மாதிரியாக இருத்தல்வேண்டும். தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சிதன் மெய்வருந்தக் கூலி தரும் என்கிறார் வள்ளுவர். பயனிலா உயிராக இருந்திடாது ,தோல்விக்குத் துவளாது போராடி வெற்றி பெறவேண்டும் என்பதையே இளைர்கள் மனதில் இருத்திக்கொள்ளுதல்வேண்டும் என்பதே கட்டுரை ஆசிரியையின்விருப்பமும்கூட..தோல்வி என்பது நிரந்தரமானதல்ல! வெற்றியும் முடிவானதல்ல !!

## மன மகிழ்ச்சிக்கு சில வார்த்தைகள்

தினந்தோறும் உடற்பயிற்சி செய்ய கவனம் செலுத்துங்கள். உடலையும் , உடையையும் தூய்மையாக வைத்திருங்கள். தேவையற்ற பொருட்களை அவ்வப்போதே ஒழித்துவிடுங்கள்.

இனிமையான இசையை கேட்டுமகிழுங்கள்.பிறரை புரிந்துகொண்டு அவர்கள் நல்லது செய்யும்போது பாராட்டத் தவறாதீர்கள்.வாழ்க்கையின் ஒவ்வொருபொழுதையும் மகிழ்வுடன் கழியுங்கள். .முன்னோர்களின் ஒவ்வொரு அசைவும் சிந்தனைக்குரியவை .இலவசம் என்பது எலிப்பொறிக்குள் வைக்கும் வடை போன்றது .குடும்பக்கவலைகளை மூளைக்குக் கொண்டு செல்லுங்கள். தீர்வுகிடைக்கும். இதயத்திற்குக்கொண்டு செல்லாதீர்கள் .அது மேலும் கனக்கும் .ஒன்றுகூடி பிரார்த்தனை செய்யும் குடும்பம் ஒற்றுமையுடன் இருக்கும் .

## வேடிக்கையான சட்டங்கள்

1.ஆக்ஸ்ஃபார்டு நாட்டில் ஆண்களின் ஓவியங்கள் முன்பு பெண்கள் உடைகளைச் சரி செய்யக்கூடாது.

2.பென்சில்வேனியா நாட்டில் ஆண்கள் அவர்களாக மது வாங்கமுடியாது.பெண்கள் எழுதிக் கொடுத்தால்தான் கொடுப்பார்களாம்.

3.யூ.கே.நாட்டில் கர்ப்பிணிப் பெண்கள் அவரசமாக எந்த இடத்தில் வேண்டுமானாலும் சிறுநீர்கழிக்கலாம்! அதற்கு காவலரின் தலைக் கவசத்தைக் கேட்டாலும் கொடுத்துத்தான் ஆக வேண்டுமாம்.

4.இங்கிலாந்து நாட்டில்14 வயதுக்கு மேலானவர்கள் தினம் ஒரு மணிநேரம் குறிப்பிட்ட உடற் பயிற்சியை செய்தே ஆக வேண்டும்.

5.வெர்மாண்ட் நாட்டில் பற்கள் கட்டவேண்டுமானால் பெண்கள் ஆண்களிடம் அனுமதி பெறவேண்டும்.

6.மிக்சிகன் நாட்டில் பெண்களின் முடி கணவருக்கே சொந்தம் ,அவர் அனுமதி இல்லாமல் முடியை வெட்டிக்கொள்ளக்கூடாது.

7.பாஃரேன் நாட்டில் மருத்துவர் பெண்களை கண்ணாடிவழியாகப் பார்த்துதான் பரிசோதனை செய்யவேண்டும்.

## ஒருவரிச்செய்திகள்!

1.இந்தியக்கொடியில் நீங்கள் காணும் நியங்களின் எண்ணிக்கை. நான்கு1.காவி நிறம் 2.வெள்ளை 3.பச்சை 4.நீலம் (கோடுகள்).

2.இந்திய தேசிய விளையாட்டின் பெயர் ஹாக்கி.

3.இந்தியாவின் முதல் பெண்மணி என அழைக்கப்படுபவர் குடியரசுத் தலைவரின் மனைவி.

4.இந்தியாவின் முதல் பாரதப்பிரதமர் பண்டிட் ஜவஹர்லால் நேரு.

5.முதல் இந்திய பெண் போலீஸ் அதிகாரி கிரண்பேடி.

6.அயோடின் உப்பு அதிகம் உள்ள காய்கறி முட்டைக்கோஸ்.

7.ஊட்டச்சத்து மிகுந்த காய்கறி பச்சைப்பட்டாணி(100 கிராம் பட்டாணி 103 கலோரி வெப்பம் தருகிறது.

## விடுகதை விடைகள்

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1.கைகாட்டி | 2.தேன்கூடு | 3.கயிற்று கட்டில் | 4.கடிகாரம் | 5.முட்டை | 6.ரோஜா பூ | |
| 7. கழுதை | 8.மயில் | 9.காலிங் பெல் | 10.வெங்காயம் | 11.புகை | 12.கடல் நீர் | 13.பம்பரம் |
| 14.கல்வி | 15.கத்தரிக்கோல் | 16.நிழல் | 17.தலைமுடி | 18.இமை | | |

## மேலும் தெரிந்துகொள்வோம் விடைகள்!!

| | | |
|---|---|---|
| 1) கோபால்ட் | 2) ஸ்பைருலினா பாசி | 3) 1952ஆம் ஆண்டு |
| 4) ரஃப்ளீசியா | 5) டென்னி ஸ்ரிட்சி | 6) டெட்ரா குளோரைடு |
| 7) எலும்பு மஜ்ஜை | 8) $4^{\circ}C$ | 9) ஜே.ஜே.தாம்சன் |

## ஓர் ஆன்மீகப் பயணம்

தோழிகள், நாங்கள் 13 பேர் ஆன்மீகப் பயணமாக பூந்தமல்லி, ஸ்ரீபெரும்புதூர், திருமால்பூர், பள்ளூர் மற்றும் தேவிகாபுரம் சென்று இறைவனை வழிபட்டு வந்தோம். அனைவரும் ஆலந்தூர் மெட்ரோ பேருந்து நிறுத்தத்தில் 7 மணி அளவில் 14 இருக்கைகள் கொண்ட ஒரு குளிர்சாதன வசதி பொருந்திய Van–ல் கிளம்பி பூந்தமல்லி வரதராஜப் பெருமாள் ஆலயம் அடைந்தோம். வைணவ அடியார் திருகச்சி நம்பிகளின் அவதாரத் தலம். பெருமாளுக்கு திரு. ஆலவட்டம் வீசும் கைங்கர்யம் செய்பவராகவும், பெருமாளுடன் உரையாடும் திறன் உடையவராகவும் விளங்கிய மகான். இக்கோவில் 1000 ஆண்டுகளுக்கு முன் பராந்தக சோழனால் கட்டப்பட்டுள்ளது. திருக்கச்சி நம்பிகள் பெருமாளுக்கு விசிறி சேவை செய்ய வேண்டும் என்ற ஆர்வத்தில் ஸ்ரீரங்கம் செல்ல, ரங்கநாதரோ, தான் காவிரிக் கரையில் இருப்பதால் குளிர்ச்சியாகவே உள்ளேன் எனக் கூற, நம்பிகள் திருப்பதி சென்றார். அங்கோ சீனிவாசப் பெருமாள் மலைமேல் இருப்பதால், எப்போதும் குளிராகவே உள்ளது என கூறவும், அவர் காஞ்சி வந்து அங்கு உக்கிரமாக இருந்த வரதராஜப் பெருமாளுக்கு விசிறி சேவையை செய்து வந்தார். தினந்தோறும் பூந்தமல்லியில் இருந்துகாஞ்சி சென்று பெருமாளுக்கு ஆலவட்டம் (விசிறி) வீசும் வழக்கமுடையவர். வயது மூப்பின் காரணமாக காஞ்சி செல்ல சிரமப்படுவதைக் கண்ணுற்ற பெருமான், தானே பூந்தமல்லிக்கு எழுந்தருள்வதாக கூறி, இங்கு எழுந்தருளியுள்ளார். அவர் மட்டுமல்ல; ரங்கநாதப் பெருமானும், சீனிவாசப் பெருமானும் இங்கு சந்நிதி கொண்டுள்ளனர். வரதராஜப் பெருமாளின் சிரத்திற்குப் பின் சூரியன் இருப்பது இத்தலத்தில் மட்டுமே எனபட்டர் கூறினார். சூரியன் எழும்பும் போதே பெருமாள் காஞ்சியிலிருந்து இங்கு வந்தமையால், சூரியனும் கூடவே வந்துவிட்டதாக ஐதீகம். இத்தலப் பெருமாளுக்கு வேண்டுதல் நிறைவேற செவ்வரளி மாலை சார்த்துகின்றனர். தாயார் புட்பவல்லி, மலரிலிருந்து தோன்றியவராதலால் பூவிருந்தவல்லி என்ற இவ்வூரின் பெயரானது நாளடைவில் பூந்தமல்லி என மருவி விட்டது. தாயாருக்கு மல்லிகைப்பூ மிகவும் விசேஷம். திருக்கச்சி நம்பிகளும் இக்கோவிலில் தனிச் சந்நிதி கொண்டுள்ளார். வைகாசி மாதத்தில் பிரம்மோற்சவம் பத்து நாட்கள் வெகு விமரிசையாக கொண்டாடப்படுகிறது. அச்சமயத்தில் தாயாருக்கு புஷ்ப யாகம் நடைபெறுகிறது. மூன்று பெருமாளுக்கும் தனித்தனியே கருட சேவை நடைபெறுவது குறிப்பிடத்தக்கது.

அடுத்து நாங்கள் மகான் ஸ்ரீ ராமானுஜரின் அவதாரத் தலமான ஸ்ரீ பெரும்புதூர் ஆதிகேசவப் பெருமாள் கோவிலுக்குச் சென்றோம். கோவிலுக்குள் நுழைந்ததும், ராமானுஜரின் சந்நிதியில் இருந்த பட்டர் 'இங்கே வாருங்கள்' என்றார். அங்கு சென்றதும் அவர், ராமானுஜரைத் தரிசித்த பின்தான் பெருமாளை வணங்க வேண்டுமெனக் கூறி தரிசனம் செய்வித்தார். உற்சவர் 'தான் உகந்த திருமேனி' என கொண்டாடப்படுகிறது. அவர் கூறிய வண்ணம், அவரின் சீடர்கள் வடிவமைத்த விக்ரகம். சீடர்களான கூரத்தாழ்வாரும், முதலியாண்டானும் துவார பாலகர்களாக சந்நிதியில் உள்ளனர். அதன் பின் ஆதிகேசவப்பெருமாள் சந்நிதி சென்றுவணங்கினோம். ராமானுஜரின் அவதாரத் தலம் என்பதால் பூலோக வைகுண்டம் எனவும், நித்ய சொர்க்க வாசல் தலமாகவும் கருதப்படுகிறது. இக்கோவிலில் அழகிய சிற்பங்கள் நிறைந்துள்ளன. ராமானுஜ சந்நிதியை வலம் வந்தால், பின்புற சுவற்றில் பல்லி ஒன்று உள்ளது. இதன் தரிசனம் பாவங்களிலிருந்து நிவாரணம் அளிப்பதாக நம்பிக்கை. நமக்குத் தெரிய வேண்டி, பல்லி தங்க வர்ணம் பூசப்பட்டுள்ளது. சந்நிதியின் நுழைவாயிலின் இருபுறமும் பஞ்சாயுதங்களான பாஞ்சஜன்யம், சுதர்சனம், கௌமோதகீ (கதை), சார்ங்கம் (வில்), நந்தகம் (வாள்) சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளது. தாயார்யதிராஜ நாதவல்லி, கோவிலின் பிரகாரத்தில் ராமர் சந்நிதியும், கிருஷ்ணர் சந்நிதியும் அழகுற அமைந்துள்ளது. ஆண்டாள் சந்நிதிக்குப் போகும் வழியில் உள்ள தூண்களில் நரசிம்மர் தூணைப் பிளந்து வருவதும், இரண்யன் வதமும், லட்சுமி நரசிம்மரும் சிற்பங்களாக நம்மைக் கவருகின்றனர்.

கோவிலின் உட்புறச் சுவரில் 108 திவ்ய தேசங்களும், ராமானுஜரின் வாழ்க்கை வரலாறும் ஓவியங்களாக தீட்டப்பட்டுள்ளன. இக்கோவிலில் தரிசித்தால், 108 திவ்ய தேசங்களைத் தரிசித்த பலன் என்று கூறினார். கோவிலின் தூண்களில் பெரிய அளவிலான யாளி, குதிரை வீரர்கள் செதுக்கப்பட்டுள்ளனர். பன்னிரு ஆழ்வார்களும் பெரிய அளவிலான கற்சிலைகளாக சேவை சாதிக்கின்றனர். மணவாள மாமுனிகள், நம்மாழ்வார், மதுரகவி ஆழ்வார் மூவரும் ஒரு சந்நிதியில் அருள்புரிகின்றனர். கோவிலில் வழிபட்டு வெளியே வரும்போது, ஒரு பழுத்த வைணவப் பெரியவர் நுழைவாயிலில் இருந்த அற்புத சிற்பங்களைக் காட்டி, விளக்கினார். நுழைவாயிலில் 4 பிரிவுகளில் இடது, வலது பக்கங்களில் ராமாயணக் காட்சிகள், முக்கியமாக கிஷ்கிந்தை, ராவணனின் அரண்மனையில் அனுமன் அமர்ந்த காட்சி, விபீடணின் சரணம் என சிற்பங்களாக வடிக்கப்பட்டுள்ளன.

கோவிலின் வெளியே மண்டபத் தூண்களில் ராமானுஜர், திருக்கச்சி நம்பிகள், புளியமரத்துடன் நம்மாழ்வார், திருமங்கையாழ்வார், குமுதவல்லி நாச்சியார், மணவாள மாமுனிகள், கூரத்தாழ்வார் திருவுருவங்கள் செதுக்கப்பட்டுள்ளன. அனைத்து சிற்பங்களுமே அற்புதம்!

அங்கிருந்து நேரே பள்ளூர் எனும் கிராமத்தில் எழுந்தருளி இருக்கும் வராஹி அம்மன் கோவில் சென்றோம். சிறிய கோயில்; கீர்த்தி பெரிது என்பதை அங்கிருந்த கூட்டம் உணர்த்தியது. அழகான அம்மன்; நேர்த்தியான அலங்காரம். அம்மனை மனம் குளிர தரிசித்து திருமாற்பேறு எனும் திருமால்பூர் சென்றோம். அஞ்சனாட்சி உடனுறை மணிகண்டீசுவரர் அருள்புரியும் ஆலயம். ஜலந்தரனை அழிக்கும் பொருட்டு ஈசனிடம் சக்கரம் வேண்டி, திருமால் 1000 தாமரை மலர்களால் அர்ச்சிக்கும் போது, ஒரு மலர் குறைய, தன் கண்ணையே மலராக சமர்ப்பித்து, சுதர்சன சக்கரம் பெற்ற தலம். இதே சம்பவம் திருவீழிமிழலையிலும் நடந்ததாக தலவரலாறு உள்ளது. ஈசனின் முன்னே நந்திக்குப் பின்னால் செந்தாமரைக் கண்ணனாக பெருமாள் எழுந்தருளி உள்ளார். மிகவும் அழகான வடிவம். சந்நிதியில் 63 நாயன்மார்களும் அழகுற கொலுப்படிபோன்று அமைக்கப்பட்டிருப்பது வித்தியாசமாக இருந்தது. உற்சவர்களுள் பெருமாள் வலது கையில் தனது கண்ணுடனும், இடது கையில் தாமரை மலருடனும் காட்சி தருவது மிகவும் அழகாக இருந்தது. கோவிலின் வெளியே இடது கைப்பக்கம் திண்ணை போன்ற ஒன்றில் நவக்கிரகங்கள், பின்னாளில் வைக்கப்பட்டதாக கூறினார்கள்.

ஒரு செய்தியை வாசகர்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறோம். அவ்வூரில் சிவனடியார் வஜ்ரவேலு என்பவர், ஊருக்கு வரும் அடியார்களுக்கு உணவு வழங்குகிறார். எங்கள் குழுவில் உள்ள தோழி தங்கம் என்பவருக்கு just தெரிந்தவர்தான். அவர் நாங்கள் வருவதைக் கூறியதும், எங்களைத் தொடர்பு கொண்டு தனது இல்லத்தில் விருந்தோம்பி, ஓய்வெடுக்க சொன்னது மனதுக்கு நெகிழ்வாக இருந்தது. நாமும் ஏன் இது மாதிரி செய்யக் கூடாது என எங்கள் அனைவரின் மனதிலும் தோன்றியது எனில் அது உண்மையே!

மாலை 5 மணி அளவில் தேவிகாபுரம் சென்றோம். கும்பாபிஷேகத்திற்காக பாலாலயம் செய்யப்பட்டிருந்ததால், பெரியநாயகி அம்மனை மட்டும் கண் குளிர தரிசித்தோம். திருவண்ணாமலையில் இடது பாகம் கிடைக்கும் முன் ஈசனும், தேவியும் இங்கு வந்து சென்றதாக ஐதீகம். பொன்மலை நாதர் அருகில் இருக்கும் கனககிரி மலையில் அருள்புரிகிறார். 325 படிகள் ஏறி தரிசிக்க வேண்டும். தரிசிக்கும் நேரம் காலை 8 மணி முதல் 10 மணி வரை. திங்கட்கிழமை மட்டும் மாலை 5 மணி வரை. கோவிலில் மூன்று மண்டபங்கள். சிற்பக்கலைக்குப் பெயர் பெற்ற கோவில். எங்களால் இரண்டு மண்டபங்களைக் காண முடிந்தது. தூண்களில் அதி அற்புதமான சிற்பங்கள். பல நரசிம்மர் உருவங்கள், ஆஞ்சநேயர், தேவியின் ஊசி முனை தவம், ஊர்த்துவதாண்டவம், தேவி சிவனுக்குப் பூஜை செய்வது, கரபேஸ்வரர், கஜசம்ஹாரம் என பல சிற்பங்கள் நம் கண்ணையும், கருத்தையும் கவர்கின்றன. எங்கள் பயணம் மிகவும் திருப்தியாக அமைந்ததற்கு இறைவனுக்கு எங்கள் அனைவரின் நன்றி!!!

– மகளிர் சேவைக் குழுவினர்

## விட்டலனின் பக்தர்கள் - ஸ்ரீ பக்த ஏகநாதர்

பக்தனுக்கு பகவானைத் தவிர வேறொன்றிலும் நாட்டமில்லை; பகவானுக்கோ பக்தனைத் தவிர வேறெதிலும் விருப்பமில்லை என்பதை உணர்த்தும் வகையில் 12 ஆண்டுகள் பரந்தாமன் பணியாளாக தொண்டு செய்த வியத்தகு லீலையை நாம் காணலாம்.

பதினாறாம் நூற்றாண்டில் மகாராஷ்டிராவில் வாழ்ந்த சிறந்த கிருஷ்ணபக்தரும், வர்க்காரி சம்பிரதாயத்தின் முக்கிய கவிஞருமான ஏகநாதர் சமூக சமத்துவத்தை வலியுறுத்தியவர். சாதி பேதங்களை எதிர்த்து அன்பே சிவம் என்ற கொள்கையுடன் வாழ்ந்தவர்.

இவர் மகாராஷ்டிரா மாநிலத்தில் அக்காலத்தில் ‘பைடனபுரம்’ என்றழைக்கப்பட்ட பைத்தானில் பாண்டுரங்க பக்தரான பானுதாசரின் மகன் சக்ரபாணி. பேரன் சூரியநாராயணன்; அவரது மனைவி ருக்மணிபாய். இந்த தம்பதியருக்கு 1533ஆம் வருடம் பிறந்தவரே ஏகநாதர். இளமையிலேயே கல்வியிலும், பக்தியிலும் சிறந்து விளங்கினார். சிறு வயதிலேயே இவரது உள்ளத்தில் பக்தி, கனல் விட்டு எரிந்தது. வேத புராணங்களை சரளமாக சொல்லும் ஆற்றலைப் பெற்றிருந்தார். அவரது தந்தை அவருக்கு குரு மூலமாக கல்வி போதிக்க எண்ணி, தேவ்கட்டில் வாழ்ந்த ஜனார்த்தன பண்டிதரின் சீடராக்கினார்.

குரு ஜனார்த்தனர் தத்தாத்ரேய உபாசகர்; அவர் தரிசனமும் பெற்றவர். தன் பாதம் பணிந்த ஏகநாதரின் தகுதியைப் புரிந்துகொண்ட ஜனார்த்தனர் அவரைப் பரிவுடன் சீடனாக ஏற்றுக் கொண்டார். ஆறு

வருடங்கள் அவரின் சீடனாக ஏகநாதர் பலவற்றையும் அறிந்துகொண்டார். சிஷ்யனின் அபார பக்தியைக் கண்டு மகிழ்ந்த குருதேவர், அவருக்கு தத்தாத்ரேய தரிசனம் கிடைக்க வழி செய்ய வேண்டுமென எண்ணங் கொண்டார். ஒரு நாள் குருவும், சிஷ்யனுமாக கானகத்தின் வழியே செல்லும்போது, தத்தாத்ரேயர் கையில் வாளேந்தி குதிரை மீது போர்வீரனாக காட்சி அளித்தார். குரு அவரை அறிந்து வணங்க, பக்குவப்படாத ஏகநாதரோ அவரை வணங்காமல் மேலே நடந்தார். குரு சீடனுக்கு ஞானத்தை ஏற்படுத்த தருணத்தை எதிர்பார்த்து காத்திருக்க, மற்றொரு முறையும் தத்தாத்ரேயர் ஒரு பக்கீரின் வேடத்தில் ஒரு நாயை பிடித்துக்கொண்டு வர (காமதேனுவையே நாயாகப் பிடித்து வந்தார்) அப்போதும் ஏகநாதர் அறிந்து கொள்ள இயலவில்லை. அதன் பின் குருதேவர் சீடனுக்கு 'ராமநாமம்' உபதேசித்து, 'சர்வம் ஈசுவர சொரூபம்' என்பதை உபதேசிக்க, சீடன் பரிபூரண ஞானம் கைவரப் பெற்றார். இம்முறை தத்தாத்ரேயரின் தரிசனம் கிடைக்கப் பெற்றதுடன், கவி பாடும் திறமையையும் பெற்றார். வால்மீகி ராமாயணத்தையும், ஸ்ரீமத் பாகவதத்தையும் மராத்திய மொழியில் இயற்றி, குன்றாப்புகழைப் பெறுவாய் என வாழ்த்தினார். ஏகநாதர் சுவாமிகளை அருட்கவியால் போற்ற, தத்தாத்ரேயரின் ஜோதிமயமான தோற்றத்தினையும், அருகே காமதேனுவையும் கண்டார்.

ஜனார்த்தன பண்டிதர் ஸ்ரீ ஏகநாதரிடம், 'குருதேவரின் அருளால் பரிபூரண ஞானம் பெற்று, உன் குருகுலவாசம் பூர்த்தியானது. நீ இல்லத்திற்குச் சென்று கிருஹஸ்திராசிரமத்தில் இருந்துகொண்டே, குருதேவரின் அன்புக் கட்டளையை நிறைவேற்றுவாயாக!' என ஆசிர்வதித்து அனுப்பினார். குருவின் ஆக்ஞைப்படி கிரிஜா எனும் குணவதியை மணந்துகொண்டார். அவர்களுக்கு ஹரி என்ற மகனும், கங்கா, லீலா எனும் இரண்டு மகள்களும் பிறந்தனர். ஸ்ரீ ஏகநாதர் ராமாயணத்தையும், பாகவதத்தையும், இதிகாச புராணங்களையும் ஓயாமல் படித்துக்கொண்டே இருந்தார். ஆண்டுகள் பல கடந்தன. குடும்பமே பக்தியில் திளைத்தனர். பகவத் கைங்கர்யத்தில் ஈடுபட்டனர். ஒரு நாள் இரவு பாண்டுரங்கன், ஏகநாதரின் கனவில், ''குருதேவரின் கட்டளையை நிறைவேற்றாமல் இருக்கிறாயே! ராமாயணத்தையும், ஸ்ரீமத் பாகவதத்தையும் மராத்திய மொழியில் காவியமாக்கும் திருப்பணியில் உன்னை நீயே அர்ப்பணித்துக் கொள்வாயாக! குருவருளும் திருவருளும் உனக்குத் துணை நிற்கும்!'' என திருவாய் மலர்ந்தருளினார்.


பொழுது புலர்ந்ததும், தூய நீராடி, பூஜை அறைக்கு வந்து, பனை ஓலைச் சுவடியையும், எழுத்தாணியையும் எம்பெருமான் பாதத்தருகே வைத்து, நீண்ட நேரம் பகவத் தியானத்தில் அமர்ந்தார். நல்ல சுபமுகூர்த்த வேளையில் ஸ்ரீ ராம நாமத்தை தியானித்து, ராமகாதையை ஏட்டில் வடிக்கத் தொடங்கினார். மராத்திய மொழியில் ராமாயணம் எழுதப்படுவதை அறிந்த ஊர் மக்கள் அவரைப் போற்றினர். பக்கத்தில் குடியிருந்த அந்தணன், அவர் மீது பொறாமை கொண்டு, பல பண்டிதர்கள் இருக்கும் போது, இவன் எழுதுவது நம் குலத்துக்கே இழுக்கு என்பது போல வம்பு பேசினான். எதையும் காதில் வாங்கிக் கொள்ளாமல், அவர் அயோத்யா காண்டம், பால காண்டம், கிஷ்கிந்தா காண்டம் எழுதி சுந்தர காண்டத்திற்கு வந்தார். ஸ்ரீராம பக்தனான ஆஞ்சநேய மகாப்பிரபுவைக் குறித்த சுலோகங்களை பக்தியால் உந்தப்பட்டு, உணர்ச்சி பொங்க எழுதவும், ஆஞ்சநேயர் அவரது உடலில் ஆரோகணித்து, அவரை ஆவேசத்தோடு வான்வெளியில் எழச் செய்து ஏட்டுச் சுவடியும், எழுத்தாணியும் கையுமாக அண்டை வீட்டு அந்தணனின் முற்றத்திலே வந்து இறங்கினார். சத்தம் கேட்டு எழுந்து வந்த அந்தணன் முற்றத்திலே சயனித்திருக்கும் ஏகநாதரைக் கண்டு மெய்சிலிர்த்தான். அவரின் கையிலிருந்து ஏட்டுச் சுவடியின் வாசகங்களைப் படிக்கவும், இவர் ஆஞ்சநேயராகமாறிவிட்டார் என்பதைக் கண்டறிந்தார். அச்சமும், ஆனந்தமும் கொண்டு, தன் தவற்றினை எண்ணி அரற்றினான். அதுபோது கண்விழித்த ஏகநாதரின் திருவடிகளில் சாஷ்டாங்கமாக வீழ்ந்து வணங்கினான். பிழை பொறுத்தருள வேண்டினான். அதன் பின் அவர் இல்லத்தில் நடைபெறும் பஜனை, பூஜைகளில் தவறாது கலந்துகொள்வதுடன், தான் உய்யும் மார்க்கத்தை காட்டருள வேண்டினான். பக்குவமடையாத அந்தணனிடம், உபதேசம் பெறுவதற்குரிய நேரம் வந்ததும், அவரே அதைக் காட்டுவார் என்றும், அதுவரை பொறுமையாக இருக்கும்படியும் கூறினார். திங்கள் பல கடந்தன; மிக அற்புதமாக பக்திச் சுவையுடன் இராமாயண காவியத்தை எழுதி முடித்து, பக்தர்கள் முன்னிலையில், பண்டிதர்கள் தலைமையில், பண்டரிநாதனின் ஆலயத்தில் அரங்கேற்றம் செய்தார்.

(தொடர்வோம்)

– திருமதி. லலிதா வேலாயுதம்

# 5ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

R. **பழனி பிள்ளை,** திருவிளையாட்டம்



மறைவு: 30.04.2021

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

# 11ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

P. **சந்திரா,** திருவிளையாட்டம்



மறைவு: 20.02.2015

குடும்பத்தினர் மற்றும் உறவினர்கள்

# மறந்தால் தான் நினைப்பதற்கு?
# மறையவில்லை தில்லையம்மா!

தோற்றம்
25.08.1957



மறைவு
28.04.2014

## KP. தில்லைச்செல்வி
**KP. ஸ்டோர்**

## 12ஆம் ஆண்டு நினைவேந்தல்

சேர்த்து வைத்த நினைவனைத்தும்
சிதறாமல் காக்கின்றோம்
ஊர்ந்து வரும் எண்ணமெலாம்
உன்முகம்தான் தில்லையம்மா!

அருகிருக்கும் பொருளனைத்தும்
அம்மா உன் பெயர் சொல்லும்
தெரிவதெல்லாம் உன்னுருவம்
தில்லையம்மா பொன்னுருவம்!

**KP. விஜய்**
**KPV. மீனாஸ்ரீ**

**KPV. கவுதம்**
**KPV. அஜய்**

**S. கலியபெருமாள்**
KP. ஸ்டோர்.
6A, பெரியகடைவீதி,
மயிலாடுதுறை.
செல் : 9443651746

# கண்ணீர் அஞ்சலி



மலர்ந்தது:
31-05-1943

உதிர்ந்தது:
16-03-2026

மேலையூர் **ச. அன்பழகன் பிள்ளை,** B.Sc, B.L.,
வழக்கறிஞர், பொது மேலாளர் (ஓய்வு) , தமிழ்நாடு மாநில கூட்டுறவு வேளாண்மை மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி மற்றும் (மேனாள்)சென்னை கார்காத்தார் சங்கத்தலைவர்
அவர்கள்

நிகழும் ஸ்ரீ விசுவாவசு வருடம் பங்குனி மாதம் 2ம் நாள் (16.03.2026) அன்று திங்கட்கிழமை காலை 06:55 மணி அளவில் சிவலோகபதவி அடைந்தார்கள் என்பதை ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக் கொள்கிறோம். அன்னாரது இறுதி சடங்கில் பங்கேற்று எங்களுக்கு ஆறுதல் கூறிய கார்காத்தார் சங்கத்தினருக்கும், நண்பர்கள் மற்றும் உறவினர்களுக்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறோம். அன்னாரது ஆன்மா சாந்தி அடைய இறைவனை வேண்டுகிறோம்.

என்றென்றும் உங்கள் நினைவில்

மனைவி: **பர்வதவர்த்தினி**

மகன்: **குமரன்**

மகள்: **அபர்னா**

மருமகள்: **சுஜாதா**

மருமகன்: **ரவீந்திரன் பத்மநாபன்**

பேரன்கள்: **கு.ஆகாஷ் , கு. அபிஷேக் , ர.நவீன்குமார் , ர.தருண்**

பேத்தி: **கற்பகரக்ஷா ஆகாஷ்**

கொள்ளு பேத்தி: **அக்ஷரா ஆகாஷ்**

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி



மலர்ந்தது :
02–10–1955

உதிர்ந்தது :
29–04–2022

## திருமதி. **ஞா. மங்களம்**

அன்பின் திருஉருவே! எங்கள் குலவிளக்கே! இன்முகத்தோடும் பாசத்தோடும் பழகிய நீ எங்களின் நீங்காத நினைவாக என்றென்றும் எங்கள் நெஞ்சில் வாழ்கிறாய்.

**P. ஞானப்பிரகாசம்** – கணவர்

விழுப்புரம்

**G. வள்ளி**
**B. அழகேசன்**
**A. அகிலன்**
**P. வர்ஷிணி**
நெய்வேலி

**G. லாவண்யா**
**C. செல்வமுத்துகுமார்**
**S. ராகுல்**
**S. சஞ்ஜனா**
சென்னை

# ஏழாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் மலர்ந்தது
23.01.1951



விண்ணில் மறைந்தது
02.05.2019

## திரு. க.இமயவரம்பன் பிள்ளை

சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி (ஓய்வு)

கடலூர் மாவட்டம், சிதம்பரம் வட்டம், நகராமலை
தெய்வத்திரு. ஆ.கல்யாணசுந்தரம் பிள்ளை – சகுந்தலா
அவர்களின் மூத்த குமாரரும் எங்களின் தந்தையுமான
**க. இமயவரம்பன் பிள்ளை** அவர்களின்
ஆறாம் ஆண்டு நினைவஞ்சலி

*என்றும் அவர்கள் நினைவில் வாழும்* திருமதி. **சுந்தரவடிவு இமயவரம்பன்**

I.ஆனந்தன்
A.நிரஞ்சனா
A.இளம்பூரணன்
A.இளம்பிறையன்

S.செந்தில்
S.காயத்ரி
S.ப்ரவின்
S.சஞ்சன்

B.முத்துகுமார்
I.இமயவள்ளி
M.தன்யஶ்ரீ
M.பிரணவ்

*மற்றும் உறவினர்களும், நண்பர்களும்*

# 23ம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
17–4–1985

மறைவு
7–4–2003

## G. குமாரவேல் 1st B.D.S

(அண்ணாமலை நகர்)

திட்டக்குடி – 606 106.

தம்பி

உன் நினைவில் வாழ்கிறோம்.

உன்னை மீண்டும் பார்க்கும் நாள் வருமா.

# ஐந்தாம் ஆண்டு நினைவஞ்சலி



மண்ணில் தோற்றம் :
29–5–1948

விண்ணில் மறைவு :
5–5–2021

## திருமதி. **தங்கம் (எ) ஜெ. தங்கமணி**

P.A. (ஓய்வு) தமிழ்நாடு காவல்துறை

கடலூர் மாவட்டம், காட்டுமன்னார்கோயில் வட்டம், விளத்தூர் கிராமம்,

தெய்வத்திருவாளர்கள். திருவேங்கடம் பிள்ளை – அலமேலு அம்மாள் அவர்களின்

மூத்த மருமகளும், எனது மனைவியுமாகிய,

தெய்வத்திருமதி. **தங்கம் (எ) ஜெ. தங்கமணி** அவர்களின்

ஐந்தாம் ஆண்டு நினைவு அஞ்சலி நாள் : **5–5–2026.**

என்றும் எங்கள் மனதில் தங்கள் நினைவுகளுடன் வாழும்

கணவர் : **தி. பிரபாகரன்**
செயலர் (ஓய்வு) சிதம்பரம் கூட்டுறவு நிலவள வங்கி
செல் : **9487138643**

மகள்கள் :
**லெட்சுமி பிரபா** – சிதம்பரம்.
**சூரியபிரபா** – சென்னை.

மருமகன்கள் :
**அன்பழகன்** – சிதம்பரம்.
**பாலமுருகன்** – சென்னை.

பேத்திகள் :
**A. தீபிகாராணி** – சென்னை.
**A. முகில்ராணி** – சிதம்பரம்.
**B. ஷராலி** – சென்னை.
**B. மிருணாளினி** – சென்னை.


MARUTHI
29 YEARS OF EXCELLENCE
LET THE SUN PAY YOUR EB BILL
INSTALL SOLAR ROOFTOP SYSTEM
GET ₹0 ELECTRICITY BILL
KEY FUTURE
BEST RETURN ON INVESTMENT - 19% TO 26%
NON POLLUTING - REDUCES GLOBAL WARMING.
EXCESS POWER GENERATED CAN BE SOLD.
28 YEARS PANEL WARRANTY.
CALL US
98418 28077
www.maruthipower.com
ANANDHAM SELVAKUMAR - CEO

Posted at Egmore RMS, Pathrikachanel, Chennai - 08.
RNI No. TNTAM / 2009 / 30435 Regn. No. TN/CH( C) / 405 /2025 - 2027 & WPP. No. TN/PMG (CCR)/WPP-161/2025-2027
Date of Publication : 15th of Every Month
15th / 16th April 2026


CHOZHA HOTELS

# HOTEL KANAKABHISHEGAM

## First Hotel From The Temple

***We sincerely thank Mr. K. Sundaravadivel (KSR CBSE School, Sri Viruthambigai Matric School, Virudhachalam) and Dr. R. Anita for choosing Hotel Kanakabhishegam and Amirtham Restaurant during their Shashtiabdapoorthi (60th birthday celebration) held at the sacred Thirukadaiyur Amrithaghateshwarar Temple premises.***

***It was truly a grand celebration, with arrangements made to serve food for over 500 guests, ensuring a memorable and joyous occasion for all.***



***We extend our heartfelt wishes to the couple for continued health, happiness, and prosperity, and we are honored to have been part of this milestone event.***

Means The Best Food

Amirtham A\C Veg Restaurant
Best Food @ Thirukadaiyur
Web : www.chozhahotels.com
Mob:7299078191

**Published by : K. SHANMUGAM,** on behalf of The Karkarthar Association (Madras), From 64, 10th Street, Sowrashtra Nagar, Choolaimedu, Chennai - 600 094 and **Printed by : M. NATARAJAN** at **Mayur Printers,** No. 72/88, Kamaraj Colony 8th Street, (Palayakaran Street) Kodambakkam, Chennai, Tamil Nadu - 600 024. **Editor : S. ANBALAGAN**